ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்



(திருமடலின் நாயகன் – திருநறையூர் நம்பி)

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# சிறிய திருமடல்

இதற்கு

பரமகாருணிகரான ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த

# வ்யாக்யானம்

இதற்கான

# எளிய தமிழ்நடை விளக்கம்


நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீஅஹோபிலதாஸன் க. ஸ்ரீதரன்

(email: sridharan_book@yahoo.co.in)

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி சமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த

# சிறிய திருமடல்

தனியன்

முள்ளிச் செழிமலரோர் தாரான் முளைமதியம்
கொள்ளிக் கென்னுள்ளம் கொதியாமே – வள்ளல்
திருவாளன் சீர்க்கலியன் கார்க்கலியை வெட்டி
மருவாளன் தந்தான் மடல்

## பிள்ளைலோகம் ஜீயர் அருளிச்செய்த தனியன் வ்யாக்யானம்

அவதாரிகை

(முள்ளிச் செழுமலரோர்) – ஸப்தாதி விஷயங்களின் ஸந்நிதியிலே மநஸ்ஸூ பரிதபியாமல், பகவத் ப்ராவண்யத்துக்கு அநுகுணமாகத் திருமடல் என்கிற திவ்யப்ரபந்தத்தை உபகரித்தருளுவதே என்று ஆழ்வார் திருவடிகளில் ப்ரேமமுடையாருடைய ஈடுபாடாயிருக்கிறது. அன்றிக்கே, ஸ்வவிச்லேஷத்தில் ஸாம்ஸாரிக விஷயங்களிலே மநஸ்ஸூ பரிதபியாதபடி ஸ்வப்ரஸாதத்தை ப்ரஸாதியாமல் தாம் மடலெடுக்க உபக்ரமித்த பாசுரமான மடலையே தந்துவிட்டாரென்றாகவுமாம்.

உலக விஷயங்களில் மனம் ஈடுபடாமல், பகவத் விஷயத்தில் ஈடுபடுவதற்கு ஏற்ற ஊக்கத்தை அளிப்பது திருமடல் என்ற திவ்யப்ரபந்தத்தை அனுஸந்திப்பதே ஆகும். இவ்விதமாக ஆழ்வாரின் திருவடிகளில் ப்ரேமை கொண்டவர்களின் ஈடுபாட்டை இந்தத் தனியன் வெளிப்படுத்துகிறது. அல்லது ஆழ்வாரைப் பிரிய நேரிட்டவர்கள் சம்சார விஷயங்களில் ஈடுபடாமல் இருக்க, தான்(ஆழ்வார்) சூடிக்களைந்த செழுமலரைக் கொடுக்காமல், தான் பகவானிடம் மடல் எடுத்த ப்ரபந்தத்தை அளித்தார் என்று கூறலாம்.

வ்யாக்யானம்

(முள்ளிச் செழுமலரோர் தாரான்) நமக்கு அஸாதாரணமாய், அத்விதீயமாயிருக்கிற முள்ளிப்பூவைத் தாராகவுடையவரென்னுதல், வகுளத்தாரான் என்னுமா போலே. அன்றிக்கே, மலரோ என்று பாடமானபோது நம் அபேக்ஷிதமான முள்ளிச் செழுமலர் மாலையையோ தருகிறிலர் என்றாகவுமாம். மலரென்றது – மாலைக்கு உபலக்ஷணம். எதுக்காகத் தார் தரவேணுமென்னில், (முளைமதியம் கொள்ளிக்கென்னுள்ளம் கொதியாமே) முளைத்தெழுந்த திங்கள் விரஹிகளாயிருப்பார்க்குத் தாபஹேதுவிறே. போந்த வெண்டிங்கள் கதிர் சுட மெலியும் என்றாரிறே இவரும். நாட்டார்க்கும் அப்படியே சந்த்ரச்சண்டகராயதே என்று சந்த்ரமண்டலம் சண்டமண்டலமாயிருக்கை. தாங்யேவாரமணீயாநி முளைமதி அங்கொள்ளி என்னுதல், முளைமதியமாகிற கொள்ளியென்னுதல். அங்கொள்ளி – அழகிய கொள்ளியென்னுதல். இது பஞ்ச விஷயத்துக்கு உபலக்ஷணம். மல்லிகை கமழ்தென்றலீருமாலோ வண் குறிஞ்சி இசை தருமாலோ என்றும், வாடை தண் வாடை வெவ்வாடையாலோ, மெவுதண் மதியம் வெம்மதியமாலோ, மென் மலர்ப்பள்ளி வெம்பள்ளியாலோ என்றுமிறே விச்லேஷத்தில் விஷயங்களின் பாதகத்வாகாரங்களிருப்பது. அதுதான் விஷயாநுகுணமாயிறே இருப்பது. ஆகையால், குளிர்ந்த சந்த்ரனைக் கொள்ளிபோலே கண்டு என் ஹ்ருதயம் பரிதபியாதே, ஆழ்வார் பண்ணின உபகாரமே. (வள்ளல் திருவாளன் சீர்க்கலியன்) வள்ளல் – பரமோதாரர், திருவாளன் – பகவத் ப்ரத்யாஸத்தியாகிற ஐச்வர்யத்தையுடையவர் (வள்ளல் திருவாளன்) இவன் ஔதார்யம் பண்ணுகைக்குக்கு உடலான ஐச்வர்யம். (சீர்க்கலியன்) பகவத் பக்த்யாதி குணங்களை உடையவர். (கார்க்கலியை வெட்டி) கலிகன்றியாகையாலே அஜ்ஞானாவஹமான கலியை கடிந்து. கலிதோஷமிறே காம பரவஸராகிறது. அப்படி அப்ராப்த விஷயத்தில் காமம் வாராதபடி. (மருவாளன் தந்தான் மடல்) திருக்கையிலே மருவியிருக்கிற வாளையுடையவர், பகவத் காமத்துக்கு அநுகுணமான திருமடலென்கிற திவ்ய ப்ரபந்தத்தை

உபகரித்தருளினார். (மருவாளன்) பகவதநுபவத்திலுண்டான போக்யதை வடிவில் தொடைகொள்ளலாம்படியானவர். இவள் அந்தண்டுழாய் கமழ்தல். மரு – பரிமளம். மருவு – மருவுதலாய், எம்பெருமானைக் கிட்டுகையை ஸ்வபாவமாக உடையவரென்றுமாம். அன்றிக்கே சேதநரைக் கிட்டி ஆளுகிறவரென்றுமாம். ஆகையால் சேதநரைத் தம்படியாக்கவேண்டி மடலை உபகரித்தருளினார். மாலையைத் தாராதே மடலைத் தந்து விட்டார் என்றாகவுமாம்.

முள்ளிச் செழுமலரோர் தாரான் – தனக்கு என்று ஏற்பட்டதாகவும், ஒப்பற்றதாகவும் உள்ள முள்ளி மலரை மாலையாகச் சூடிக் கொண்ட திருமங்கை ஆழ்வார் என்று பொருள். நம்மாழ்வாரை வகுளத்தாரானை என்று கூறுவது போன்று ஆகும். மலரோ என்று படித்தால் – நமக்கு இனிதான அவரது முள்ளி மலர் மாலையைத் தராமல், அவருக்கு விருப்பமான மடலையே அளித்துவிட்டார் என்று பொருள். எதற்காக இந்த மடல் என்றால்:

முலை … கொதியாமே – முளைத்து எழும் சந்திரன் பிரிவுற்றவர்களுக்கு வேதனை அளிப்பதாகும். இந்த ஆழ்வாரே ஏபோந்த வெண் திங்கள் கதிர் சுட மெலியும் (பெரிய திருமொழி 2–7–3 ) எம்பெருமானின் விரஹத்தில் உள்ளபோது சந்திரனும் சூரியனாகவே பட்டது என்று கூறினார் அல்லவா? இந்த உலகில் உள்ளவர்களுக்கும் இவ்விதமே – சந்த்ர: சண்ட கராயதே – சந்த்ர மண்டலம் என்பது சூரிய மண்டலம் போன்று இருக்கும். இதனையே இராமனும் – தாங்யேவாரமணீயாநி – சீதை பிரிந்தபோது அனைத்தும் அழகற்றவை ஆனது என்றான் அல்லவா? முலை மதி அம் கொல்லி என்றால் – அழகான சந்திரன் என்ற நெருப்பு – என்பதாகும். சந்திரன் என்று கூறுவது பிரிந்தவர்களை வாட்டும் சந்திரன்,மல்லிகை, குறிஞ்சி, தென்றல் காற்று மற்றும் மலர்ப்படுக்கை ஆகியவற்றையும் குறிக்கும். நம்மாழ்வார் – மல்லிகை கமழ் தென்றல் ஈறுமாலோ வண் குறிஞ்சி இசை தவருமாலோ என்றும், வாடை தண் வாடைவெவ்வாடையாலோ மேவு தன் மதியும் வெம்மதியமாலோ மென்மலர் பள்ளி வெம்பள்ளியாலோ என்றும் – பிரிந்தவர்களை வாட்டும் விஷயங்கள் பற்றிக் கூறினார். ஆகவே குளிர்ந்த சந்திரனையும் நெருப்பு என்று என் மனம் மயங்காதபடி ஆழ்வாரின் உதவி இருந்தது.

வள்ளல் திருவாளன் சீர்க்கலியன் – பகவான் உதவி செய்யாத போதும் உதவுபவர், கைங்கர்யம் என்ற செல்வம் உடையவர். அளிக்கும் குணங்கள் உடையவர்.

கார் கலியை வெட்டி – அஜ்ஞானம் என்ற கலியை அறுத்தவர். கலிகாலமாக உள்ளதால் அல்லவா மற்ற விஷயங்களில் விருப்பம் ஏற்படுகிறது? அந்தக் காமம் ஏற்படாதபடி வெட்டியவர்.

மருவாளன் தந்தான் மடல் – திருக்கையில் பொருந்தியுள்ள வாள் கொண்டவர். பகவான் மீது ஏற்படும் காமத்தினால் திருமடல் என்ற ப்ரபந்தத்தை அருளியவர். எம்பெருமானை அண்டுவதையே தனது ஸ்வபாவமாக உள்ளார். நம் போன்ற சேதனர்களின் அருகில் வந்து நம்மை ஆள்கின்றவர். நம்மை தன் போன்று ஆக்குவதற்காக தான் அணிந்துள்ள மாலையைத் தராமல், மடலை அளித்து விட்டார்.

## பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த சிறிய திருமடல் வ்யாக்யானம்

## ப்ரவேசம்

கீழ் அனுபவித்தது ஜ்ஞாநாநுபவமாகையாலே பாஹ்யஸம்ச்லேஷாபேக்ஷை பிறந்து, அது கிடையாமையாலே திருக்குடந்தையிலே சரணம்புக்கார் திருவெழுகூற்றிருக்கையிலே, இப்படி சரணம் புக்கவளவிலும் நினைவு பூரியாமையாலே, இதுக்கு ஹேதுவென் என்னில், எம்பெருமான் தான் அஜ்ஞன் அசக்தன் அப்ராப்தனாய்த் தாழ்க்கிறதன்று, இத்தலையில் கர்த்தவ்யசேஷம் உண்டாய்த் தாழ்க்கிறதுன்று. இனி விலம்பஹேது இரண்டு தலைக்குமின்றிக்கேயிருக்கச் செய்தே, இனித் தாழ்க்கிறது கூடல் செய்ய நினையாமையாலே, ஆனபின்பு இத்தலையை அழித்தாகிலும், முகங்காட்டு வித்துக்கொள்ளுவோம் என்கிற த்வரையின் மிகுதியை, க்ருஷ்ணாவதாரத்தில் குடக்கூத்திலே அகப்பட்டு, அவனைக் கிடையாமையாலே மடலெடுக்கத் துணிந்தாளொரு பிராட்டியுடைய பாசுரத்தாலே ஸ்வதசையை ஆவிஷ்கரிக்கிறார்.

திருகுறுந்தாண்டகத்தில் பகவானை ஞான அனுபவமாக அனுபவித்தார். அடுத்து இந்த்ரியங்கள் மூலம் அவனைக் கட்டித் தழுவ வேண்டும் என்று விருப்பம் கொண்டார். திருவெழுகூற்றிருக்கை மூலம், திருக்குடந்தை எம்பெருமானிடம் சரணம் புகுந்த பின்னரும்

தனது எண்ணம் கைகூடாமைக்கு என்ன காரணம் என்று ஆராய்ந்தார். எம்பெருமான் இவரது பரிதாப நிலையை அறியாமலோ, இவர் அழைத்தவுடன் வரும் சக்தி இல்லாமலோ, காலம் தாழ்த்துபவனாகவோ உள்ளவன் அல்லன். அவனிடம் சரணம் அடைந்த ஆழ்வார், வேறு ஏதும் செய்ய வேண்டிய அவசியம் இல்லாமல் உள்ளபோதிலும், அவன் இவரிடம் வரவில்லை. ஆக அவன் வராமல் இருப்பதற்கான காரணம் இருவர் பக்கத்திலும் இல்லை, என்றாலும் அவன் வரவில்லை. ஆழ்வார் தனது மனதில், அவன் நம்மிடம் சேராமல் இருப்பதற்குக் காரணம் அவனுக்கு நம் நினைவு இல்லாமல் இருப்பதே. நாம் எப்படியாவது அவனை வரவழைப்போம், என்று எண்ணினார். கண்ணன் குடக்கூத்து ஆடிய போது அவனை அணைக்க இயலாமல் நின்ற ஒரு பெண் மடலெடுப்பது போன்று, இங்கு ஆழ்வார் அருளிச் செய்கிறார்.

மடலாவது ஏதுல்யசீலவயோவ்ருத்தாம் துல்யாபிஜந லக்ஷணாம்ஏ என்கிறபடியே இருவரும், ஒத்த பருவத்தராய், பும்ஸ்வத்துக்கு ஏகாந்தமான அறிவு, நிறைவு, ஓர்ப்பு, கடைப்பிடி என்கிற குணங்களாலே அவனும் பூர்ணனாய், ஸ்த்ரீத்வத்துக்கு ஏகாந்தமான நாண், மடம், அச்சம், பயிர்ப்பு என்கிற குணங்களாலே இவளும் பூர்ணையாய், இப்படி இருவரும் குறைவற்றவர்களாயிருக்க, தோழிமாரும் தானுமாக உத்யாநத்திலே பூக்கொய்யவென்று புறப்பட, அவனும் வேட்டைக்கென்று புறப்பட்டுச் சோலையிலே புகுர, தைவயோகத்தாலே கூடினதாகையாலே உயிர்த்தோழியுங்கூட அந்யபரையானவளவிலே, யாத்ருச்சிகமாக இருவருக்கும் த்ருஷ்டி பந்தம் பிறந்து, அதுவே அடியாக ஸம்ச்லேஷம் ப்ரவ்ருத்தமாக, ஏஉந்மஸ்தகரஸமாகக் கலந்து கலவியாகையாலே, நற்கேட்டிலே இரண்டு தலைக்கும் அழிவு வரும்ஏ என்று இத்தை முடிய நடத்தக் கடவதாகப் பார்த்த தைவந்தானே பிரிக்க, இருவருடைய பந்துக்களும் புனையிழைகளணிவுமாடையுடையும் புதுக்கணிப்பும் நினையும் நீர்மையதன்று என்னும்படி இருவர் வடிவிலேயும் வேறுபாடுகண்டு இருவரையும் காவல் செய்ய, அதுவே அடியாக இவர்களாற்றாமை சதசாகமாகப் பணைக்க எதிர்த்தலையைக் கிடையாமையாலே மற்றைத்தலை செய்யும் ஸாஹஸ ப்ரவ்ருத்தியாயிற்று மடலாவது.

மடல் என்பது என்ன? துல்ய சீலவயோவ்ருத்தாம் துல்யாபிஜந லக்ஷணாம் – ஒத்த குணம், ஒத்த வயது, ஒழுக்கம் ஆகியவற்றை உடைய சீதைக்கு இராமனே ஏற்றவன் – என்றபடி நாயகனும்,நாயகியும் ஒரே பருவம் (வயது) உடையவர்களாகவும், சரியான அறிவு, உறுதி போன்ற குணங்களுடன் நாயகன் உள்ளவனாகவும், பெண்களுக்கே உரிய நாணம், மரியாதை, பயம், பிரிந்தால் தாங்காமை போன்ற குணங்களுடன் நாயகி உள்ளவளாகவும் இருக்க வேண்டும். இவ்விதம் அவர்கள் குறைவு ஏதும் இல்லாதவர்களாக இருக்கும்போது, நாயகி தனது தோழிகளுடன் நந்தவனத்திற்கு மலர் பறிப்பதற்காகக் கிளம்புகிறாள். இதனை அறிந்த நாயகன் வேட்டைக்குச் செல்வதாகக் கிளம்பி, அதே நந்தவனத்தில் புகுந்து விடுகிறான். தோழிகள் வேறு செயலில் ஈடுபட்டு இருக்கும்போது, இவர்கள் இருவரும் விதியின் காரணத்தால் ஒருவரை ஒருவர் கண் நோக்கி நிற்கின்றனர். இதனால் இருவருக்கும் மனதளவில் சேர்க்கை உண்டாகிறது. இதனை கண்ட தெய்வமானது, அதிகம் பெய்யும் மழையால் பயிர்கள் அழிவது போன்று, இந்தச் சேர்க்கை, மூலம் இவர்கள் அழிந்து விடுவர் என்று பரிதாபப்பட்டு பிரித்து விடுகிறது. இவர்களுடைய உறவினர்கள், இவர்களது நடவடிக்கையிலும் தோற்றத்திலும் வேறுபாடு உள்ளது கண்டு, இருவரையும் காவலில் வைக்கின்றனர். இதனால் இவர்களின் பிரிவாற்றாமை (பிரிவினால் ஏற்படும் துன்பம்) அதிகமாக, ஒருவரை மற்றொருவர் சந்திக்க எடுக்கும் சாகச முயற்சியே மடல் என்பதாகும் (இந்த சாகசங்கள் – உண்ணாமல் இருப்பது, உடை சரியாக உடுத்தாமல் இருப்பது போன்றவையாகும்).

இவர்கள் மடலெடுக்கிறதுக்கு ப்ரயோஜநம் என்னென்னில்: இவ்வுபக்ரமத்தைக்கண்டு இருவருடைய பந்துக்களும் கூட்டுதல், அன்றியே, ராஜாக்கள் கூட்டுதல், அன்றியே, இருவர் பந்துக்களும் இருவரையுங்கைவிட, அலக்குப்போர்ப்போலே ஒருவர்க்கொருவர் தஞ்சமாய்க் கூடிப்போதல், அன்றிக்கே, மடலெடுத்து எதிர்த்தலையைப் பெறாமையாலே இத்தலை முடிந்தது என்னும் ஏற்றத்தைப் பெற்றுப்போதல், இவை ப்ரயோஜநமாக.

இத்தகைய மடல் எடுப்பதால் என்ன பயன்? இந்தச் செய்கை கண்டு இவர்களது உறவினர்கள், இவர்களைச் சேர்த்து வைக்கக் கூடும். அல்லது, ஏமடல் எடுத்தும் பெற இயலாத மற்றவரை நினைத்து மடல் எடுத்தவர் அழிந்தார்ஏ, என்ற பெருமை ஏற்படக்கூடும்.

வளவேழுலகில் தங்கள் அயோக்யதையை அநுஸந்தித்து அகலும் ஸ்வபாவரான இவர்கள் இஸ்ஸாகஸ ப்ரவ்ருத்தியில் இறங்குவானென்னென்னில், மடலெடுத்து அத்தலையை அழிக்கப் புகுகிறார்களல்லர்களே, ஊர்வன் மடல் என்று – சாபமாநய ஸௌமித்ரே என்று வில்லைக்காட்டி வேலையை அச்சமுறுத்தினாற்போலே, அச்சமுறுத்தி முகங்காட்டுவித்துக் கொள்ளுகிறவர்களாகையாலே, தங்கள் துணிவைச் சொல்லவே அவன் வருமென்று சொல்லுகிறார்களத்தனையல்லது மடலெடுக்கிறார்களன்றிறே. அயோக்யரென்று அகன்றதும், விலக்ஷண வஸ்துவென்று அநுஸந்தித்திறே, குணாதிக்யமும் வைலக்ஷண்யமும் அநுஸந்தித்தபடியாலேயிறே இவர்கள் ஆற்றமாட்டாதே வழியல்லாவழி போயாகிலும் பெற வேணும் என்று மேல்விழுகிறது.

இவர்கள் மடல் எடுத்து எதிர் தலையை (எதிர் தலை என்றால் நாயகனுக்கு நாயகி எதிர் தலை, நாயகிக்கு நாயகன் எதிர் தலை) அழிக்க முற்படுபவர்கள் அல்லர். ஆயினும் ஏன் மடல் எடுக்கிறார்கள்? மடல் எடுத்து விடுவேன் என்று ஏன் அச்சுறுத்துகிறார்? இதன் காரணம் என்ன? இராமன் – சாபமாநய ஸௌமித்ரே – லக்ஷ்மணா, இந்த சமுத்திரத்தை வற்றச் செய்கிறேன் – என்று வில்லையும் அம்பையும் காட்டி, கடலை பயம் கொள்ளச் செய்தது போன்று, இவர்கள் அவனுக்குப் பயம் ஏற்படுத்தி, தங்கள் முன் அவனை நிற்க வைக்க எண்ணுகின்றனர். தாங்கள் அவனைப் பெற வேண்டும் என்பதில் உறுதியுடன் உள்ளதை உணர்த்தினர். அவன் ஓடி வந்து விடுவான் என்று எண்ணுகின்றனரே அல்லாது வேறு காரணம் அல்ல. தாங்கள் தாழ்ந்தவர்கள் என்று அவனை விட்டு விலகி நின்றது, அவனுடைய சிறப்பைக் கருதி அல்லவோ? (இப்படி உள்ளபோது மடலெடுத்து அவனை அழிப்பார்களா) அவனது குணத்தையும் உயர்வையும் உணர்ந்த காரணத்தினால், அதனைப் பெற வழி இல்லாமல் தகாத வழிகளான நோன்பு எடுத்தல் (ஆண்டாள்), மடல் எடுப்பது போன்றவற்றைச் செய்கின்றனர்.

இவர்களுக்குமொரு ஸ்வபாவமுண்டு, – தங்களை அநுஸந்தித்தபோது அயோக்யரென்று அகலுவார்கள். அவனை அநுஸந்தித்தபோது தங்களையும் பாராதே மேல்விழுவர்கள், அத்தலையை அநுஸந்திக்கச்செய்தே இத்தலை தோன்றாதிறே, அத்தாலே மேல் விழுகிறார்கள்.

இவர்களது மற்றொரு ஸ்வபாவம் – தங்களது தாழ்வை எண்ணி அவன் அருகில் நாம் செல்லக்கூடாது என்று இருப்பவர்கள் ஆவர். அவனை எண்ணியபடியே உள்ளபோது, தங்களது தாழ்வை மறந்து விட்டு, அவனை அனுபவிக்க எண்ணுவார்கள்.

ஆனால் அவர்கள் பிராட்டிமார் பேச்சைப் பேசவானென்னென்னில், ஆத்ம ஸ்வரூப வைலக்ஷண்யத்தாலும்,அநங்யார்ஹ சேஷத்வாதிகளாலும், அந்வயத்தில் தரிக்கையாலும், வ்யதிரேகத்தில் தரியாமையாலும், ஜ்ஞானம் விசதமானால் இவ்வாத்ம வஸ்துவும் பிராட்டிமாரோடொக்குமாகையாலும், இவர்கள் மயர்வற மதிநலம் அருளப்பெற்றவர்களாகையாலே பிராட்டி பேச்சாலே பேசுகிறார்கள்.

ஆனால், அவர்கள் தங்களாகவே பேசுவது போன்று பேசாமல், பிராட்டிமார்கள் போன்று பேசுவது ஏன்? காரணம் – ஆத்மாவின் ஸ்வரூபம் பெண்களின் குணங்களை ஒத்து விளங்குகிறது. எப்படி என்றால் – பதி விரதைக்கு உரிய தன்மைகளான மற்றவர்களுக்கு அடிமையாகாமல் இருத்தல், வேறு கதி என்று எதனையும் சாராமல் இருத்தல், வேறு யாருடைய இன்பத்திற்காகவும் இல்லாமல் இருத்தல் (இதுபோன்று ஆத்மா எம்பெருமானை குறித்து இருத்தல் வேண்டும்), கணவனைப் பிரிந்தால் துன்பத்திலும், கூடினால் இன்பத்திலும் உள்ள தன்மை (ஆத்மா எம்பெருமானைப் பிரிய நேரிட்டாலும் கூடினாலும் இதே நிலை), முக்தி அடையும்போது ஏற்படும் ஞானம் என்பது பிராட்டிமார்களோடு ஒத்திருப்பதால், ஆழ்வார்கள் பிராட்டி மார்கள் பேசுவது போன்றே அருளிச் செய்கின்றனர்.

கடலன்ன கர்மத்தராகிலும் மாதர் மடலூரரார் மற்றையார் மேல் என்று ஸ்த்ரீக்கள் புருஷர்கள்மேல் மடலூரக்கடவதல்லவென்று லக்ஷணங்காட்டிக்கிடக்கச் செய்தே, இப்பிராட்டி மடலூருவானென்னென்னில், ஆசை ஓர் தலைக்கேயாய், ஒருதலை லக்ஷணப்படியே ஆசையை மர்யாதையிலே நடத்தலாமாகில் அது செய்யலாவது, ஆசைமிக்கார் மடலூருமத்தனை என்னும் ஆர்ய மர்யாதையாலே மடலூர உபக்ரமிக்கிறார்கள்.

கடலன்ன காமத்தராகிலும் மாதர் மடல் ஊரார் மற்றையார் மேல் – என்று பெண்கள், ஆண்கள் மீது மடல் ஊர்வது தகாது என்று கூறியுள்ளபோது, ஆழ்வார்கள் தங்களைப் பிராட்டிமார்களாக நினைத்து, எம்பெருமானான புருஷன் மீது மடல் ஊர்வது தகுமா?

பின்னைத் தமிழர் செய்ததுக்கு ஹ்ருதயமென்னென்னில், ராஜாஜ்ஞையிலே ஆசையை வரம்புகட்டப் பார்த்ததுக்கு ஹ்ருதயமேது என்று அறிந்ததில்லை.

ஆசை என்பது ஒருவருக்கு மட்டுமே என்றால் இது போன்று விதி முறைகள் கூறலாம். ஆனால் ஆசை என்பது ஆண்–பெண் என்ற வேறுபாடு இன்று ஏற்படுகிறது. எனவே ஆசையுள்ளவர்கள் மடல் ஊரலாம் என்று வடமொழி கூறுவதற்கு ஏற்ப இங்கு மடல் எடுக்கப்பட்டது. அரசனின் ஆணை மூலம் ஆசையைக் கட்டுப்படுத்தலாம் என்பது போல, ஆண்–பெண் இலக்கணத்துக்கு உட்பட்டு கட்டுப்படுத்துதல் என்பதை எங்கும் காண இயலாது.

மயர்வற மதிநலம் அருளப்பெற்றவர்கள் அறிவுடையாராகில் அனுஷ்டிக்கக்கடவதல்ல என்று அவர் நிஷேதித்த காமத்தை அநுஷ்டிக்கிறார்களோவென்னில், அப்படி நிஷேதித்த காமமல்ல. நிதித்யாஸிதவ்ய: என்று வேதாந்தத்திலே விதிக்கிற பகவத் பக்தியை காமமென்கிறது, ஆகையாலே விஹிதமான வ்ருத்தி(பக்தி)யைக் காமமென்கிறது. மடலெடுக்கையாவது தன்னுடைய ஸ்த்ரீத்வத்துக்கும் அவனுடைய புருஷோத்தமத்வத்துக்கும் சேருவதொன்றன்று, அவன் தானே வரக் காண்கைகாண் ஸ்த்ரீத்வமாவது என்று விலக்குகிறவர்களைக் குறித்து, மநோஹாரி சேஷ்டிதங்களிலே அகப்பட்டு அபஹ்ருத சிந்தையானேன், அவன் தானே வருகிறான், அவனுக்கு நிறக்கேடு விளைக்கவொண்ணாது என்கிற இதுவும் செய்தற்றது. இனி மடலெடுத்து அவனைப் பெற்றல்லது தரியேன் என்கிற தன் துணிவை, (விலக்குகிற பந்துக்களுக்குச்) சொல்லுகிறாள். மடலெடுக்கப்புக்கவள் விளம்பிக்கிறதுக்கு ஹேதுவென்னென்னில், ஹேதுக்களாலே பந்துக்களை இசைவிக்கைக்காகவும், குணாதிக வஸ்துவைக் கடுக அழிக்கலாகாதென்றும், வருகைக்கு அவகாச ப்ரதாநம் பண்ணுகைக்காகவும் விளம்பிக்கிறாள்.

ஆழ்வார்களோ, மயர்வற மதி நலம் அருளப்பெற்றவர்கள் – என்று கூறப்படும்போது, அறிவுள்ள அவர்களால், காமம் என்பது கடைபிடிக்கப்படாது என்றே அனைவரும் எண்ணுகின்றனர். இப்படி உள்ள போது, ஆழ்வார்களே அறிவுள்ளவர்கள் தடை செய்யும் காமத்தைப் பற்றிக் கூறுகின்றனரே என்ற கேள்வி எழலாம். இவர்களின் ப்ரபந்தங்களில் சாஸ்திரங்கள் மூலம் தடைசெய்யப்பட்ட காமம் இருப்பதில்லை. நிதித்யா ஸிதவ்ய: – த்யானிக்கதக்கவன் என்று வேதாந்தத்தில் கூறப்பட்ட பகவத் பக்தியே, இவர்களது ப்ரபந்தங்களில் காமம் எனப்பட்டது. எனவே சாஸ்திரங்கள் ஒப்புக்கொண்ட விதிப்படியே இவர்களின் ப்ரபந்தம் உள்ளது.

இங்கு மடல் எடுப்பது என்றால் என்ன? நாயகியின் உறவினர்கள் அவளிடம், உன்னுடைய பெண் தன்மைக்கும், அவனது ஆணமைக்கும் நீ மடல் எடுப்பது தகாத செயல். அவனே உன்னை நாடி வரும்படி உள்ள நிலையே பெண்மையின் இலக்கணம், என்று கூறினர். அவர்களிடம் நாயகி, நாயகன் செய்யும் செயல்களால் உள்ளம் கவரப்பட்டு, எனது மனதை இழந்தேன். அவன் தானாகவே வந்து விட்டுப் போகட்டும், அவனுக்காக மடல் எடுக்க வேண்டாம் என்றும் இருந்து பார்த்தேன். அதனைத் தாங்க இயலவில்லை. ஆகவே மடல் எடுத்து அவனை அடைந்தால் மட்டுமே உயிர் வாழ இயலும், என்று கண்டித்துப் பேசுவதே மடல் எடுப்பதாகும். மடல் எடுக்க துணிந்த இவள் அதனை எடுக்காமல் தாமதம் செய்வது ஏன் என்றால் – தனது உறவினர்களை தன் பக்கம் மாற்றுவதற்காகவும், அவன் வருவதற்கு அவகாசம் அளிப்பதற்காகவும் ஆகும்.

(காரார்வரையித்யாதி) – தாய்மார் தோழிமார் எல்லோரும் இத்துணிவு ஆகாதுகாண் என்று விலக்கா நிற்கச்செய்தே, விலக்காதாளொருத்தியைப் பெறுவதே என்று கொண்டாடுவாரைப்போலே, புருஷார்த்தங்கள் சொல்லவேண்டுகையாலே, அவை பரிக்ரஹித்த சேதநரைச் சொல்லவேண்டி, அவர்கள் வர்த்திக்கிற பூமியைச் சொல்லப்புக்கு, அவ்வழியாலே அதுக்கு அபிமாநிநியான ஸ்ரீபூமிப்பிராட்டியை வர்ணிக்கிறாள்.

விளக்கம் – தனது தாய்மார்கள் மற்றும் தோழிமார்கள் ஆகிய அனைவரும் இவளிடம் – மடல் எடுக்கவேண்டாம், இது உனக்குத் தகாது – என்று விலக்கினர். அந்த நேரத்தில் தன்னைத் தடுக்காமல் ஒருவள் உள்ளாள் என்று உணர்ந்து அப்படிப்பட்ட பூமிப்பிராட்டியைக் கொண்டாடுகிறாள். மேலும், தான் அடைந்துள்ள காம புருஷார்த்தங்கள் என்னவென்று கூற விரும்பினாள், அதனைக் கூறுவதற்கு முன்பாக அவற்றை விரும்பும் மனிதர்கள் பற்றிக் கூறவேண்டும், மனிதர்கள் பற்றிக் கூறும்போது, அந்த மனிதர்கள் வாழும் பூமியைப் பற்றி கூறவேண்டும். ஆகவே, இந்த பூமிக்கு ஆதாரமாக உள்ள பூமிப்பிராட்டியை வர்ணிக்கிறாள் (இங்கு ஆழ்வார் பரகாலநாயகி பாவத்தில் உள்ளதால், பெண்பாலில் கூறப்பட்டார். அல்லது

இந்த மடலை கண்ணனின் குடக்கூத்தில் மனதை இழந்த ஆய்ச்சி ஒருவள் கூறுவதாகவும் கொள்ளலாம்).

(காரார்வரை கொங்கை) – ஸ்ரீபூமிப்பிராட்டிக்கு முலையாக மலைகளைச் சொன்னபடி, காரார்வரை என்கையாலே செறிந்து மேகம் படிந்த மலை என்று மலைக்கு உயரம் சொல்லிற்று. மேகம் படிந்த மலையென்கையாலே முலைக்கண் கருத்திருந்தாற்போலே இருக்குமென்கை. மலைகளை முலையாக்கிச் சொல்லிற்றாகில், எம் மலைகளைச் சொல்லிற்றென்னில் – திருமலைகளிரண்டையும் முலையாகச் சொல்லிற்றென்னுமிடம் சொல்லிற்று, தென்னனுயர் பொருப்பும் தெய்வ வடமலையும் என்னுமிவையே முலையா – என்று பெரிய திருமடலிலே சொல்லிற்று. ஸ்ரீபூமிப்பிராட்டிக்கு முலை சொல்லுகிறதாகில் உயர்ந்த மேரு ப்ரப்ருதிகளைச் சொல்லாதே இவற்றைச் சொல்லுவானென்னென்னில் – முலையாவது காந்தன் படுகாடுகிடக்குமிடமிறே, அப்படியே எப்போதுமொக்க பகவத் ஸந்நிதியுள்ள தேசமாகையாலே திருமலைகளைச் சொல்லிற்று. (வரைக்கொங்கை) – முலைக்குக் காடிந்யம் ஸ்வாபாவமாயிருக்குமிறே, அதுவும் சொல்லுகிறது.

விளக்கம் – (காரார் வரை கொங்கை) பூமிப்பிராட்டியின் ஸ்தனங்களாக மலையைக் கூறினாள். காரார்வரை என்று கூறுவதன் மூலம், மேகம் வந்து படிந்த மலை என்று மலையின் உயரம் உணர்த்தப்பட்டது. மேகம் படிந்த மலை என்பதன் மூலம் ஸ்தனத்தின் கண்கள் கறுத்திருப்பது போல் மலையின் உச்சியும் கறுத்துள்ளது எனப்பட்டது. ஸ்தனங்களை மலையாகக் கூறினாள், எந்த மலைகளை இவ்விதம் கூறினாள்? திருமலைகள் இரண்டுமே இவ்விதம் ஸ்தனங்களாகக் கூறப்பட்டது. பெரிய திருமடலில் – தென்னனுயர் பொருப்பும் தெய்வ வட மலையும் என்னுமிவையே முலையா – என்பதற்கு ஏற்ப திருமாலிருஞ் சோலையும், திருவேங்கடமலையும் ஸ்தனங்களாகக் கூறப்பட்டன. பூமிப்பிராட்டியின் ஸ்தனங்களுக்கு ஒப்பாக மேரு மலை போன்று உயர்ந்த மலைகளைக் கூறாமல், இவற்றை ஏன் கூற வேண்டும்? காரணம் – இவளது ஸ்தனங்கள் என்பது எப்போதும் எம்பெருமான் தங்கும் இடம் ஆதலால், அவன் எப்போதும் வாசம் செய்யும் இடங்களாகிய திருமலைகள் கூறப்பட்டன. (வரைக்கொங்கை) – பெண்களின் ஸ்தனங்களுக்கு கடினத் தன்மை இயல்பு அல்லவா, இந்தக் காரணத்தாலும் மலைகளை ஸ்தனங்களாகக் கூறினாள்.

(கண்ணார் கடலுக்கை) – கண்ணார் கடலென்கையாலே – தர்சநீயமான கடலென்னுதல், இடமுடைத்தான கடலென்னுதல். இடமுடைத்தாகையாவ தென்னென்னில் – ஸ்ரீபூமிப்பிராட்டிக்குக் கொடிக்கும் கொய்சகமும் வைத்து உடுக்கலாம்படி பரப்பையுடைத்தாயிருக்கை. (கடலுடுக்கை) – திருமேனியின் ஸௌகுமார்யத்துக்கீடாக உறுத்தாமே குளிர்ந்திருக்குமென்கை.

விளக்கம் – (கண்ணார் கடலுடுக்கை) காண்பவர்களின் கண்களை மகிழச் செய்வது கடலாகும். அல்லது பரந்த இடம் உள்ளதான கடல் என்றும் கூறலாம். பரந்த இடம் கொண்டதால் உள்ள பயன் என்ன என்றால், இது பூமிப்பிராட்டிக்கு கொசுவம் வைத்து உடுத்துக் கொள்ளும்படியான அகலத்தைக் கொண்டதே பயன் ஆகும். (கடலுடுக்கை) – அவளது திருமேனியின் மென்மைக்கு ஏற்ப உறுத்தாமல் குளிர்ந்து உள்ளது.

(சீரார் சுடர் சுட்டி) – அழகிய சுடரையுடைய ஆதித்யன் இவளுக்குத் திலகமென்கை. அன்றிக்கே, அணிமிகு தாமரைக்கை ஆபரணமாகக் கடவே தலைக்குத் தான் ஆபரணமாகப்பெறுகையாலே வந்த சீர்மையாகவுமாம்.

விளக்கம் – (சீரார் சுடர் சுட்டி) அழகான கதிர்களை உடைய சூரியன் பூமிப்பிராட்டிக்குத் திலகம் போன்று உள்ளான். அல்லது எம்பெருமானின் தாமரை போன்ற திருக்கரங்களுக்கு ஆபரணமாக உள்ள பூமிப்பிராட்டியின் தலைக்கு, இவன் (சூரியன்) ஆபரணமாக உள்ளதால் பெறும் மேன்மை கூறப்பட்டது.

(செங்கலுழிப் பேராற்றுப் பேராரமார்வில்) – ஸஹ்யத்திலே வர்ஷிக்கச் சிவந்த கலக்கத்தை உடைத்தாகையாலும், மலையிலுண்டான பொன் முதலான ரத்னங்களை உடைத்தாகையாலும், பூமியெங்கும் பரவிக்கொண்டு வருகையாலும், விலங்கிக்கிடக்கிற ஆறாகிற ஹாரம் கிடக்கிற மார்பையுடையவள். (பெரு மா மழை கூந்தல்) பெரு = பெருத்து, மா = கறுத்த, மழை=மேகங்கள்: நீர்க்கொண்டெழுந்த காள மேகத்திரளே இவளுக்கு மயிர்முடி, அதாவது இந்த்ரதநுஸ்ஸூம், மின்னும் கலம்பகன் சூடினாற்போலே இருக்கையாலே, மேகத்தை மயிர்முடியென்கிறது. காந்தனுக்கு தர்சநீயமாயிருக்கையும், ஒருகால் குலைத்து ஞுழுந்த விடாய் ஆறும்படியாயிருக்கையும்.

விளக்கம் – (செங்கலுழிப் பேராற்றுப் பேரார மார்வில்) இதன் மூலம் பெரிய நதிகள் பூமிப்பிராட்டியின் திருமார்பு போன்றது என்றாள். திருமார்பானது ஸ்தனங்களில் உள்ள குங்குமம் முதலானவையால் சிவந்துள்ளது போன்று, இந்தப் பெரிய நதிகள் மலைகளில் இருந்து இறங்கி வரும்போது கலங்கிச் சிவந்துள்ளது. திருமார்பில் ரத்ன மாலைகள் உள்ளது போன்று, இந்த நதிகளிலும் மலைகளில் உண்டான இரத்தினங்கள் உள்ளன. திருமார்பு பரந்து உள்ளது போன்று, இந்த நதிகள் பூமி எங்கும் பரவிப் பாய்கின்றன. இப்படிப்பட்ட நதிகள் என்ற ஹாரத்தினால் அலங்கரிக்கப்பட்ட திருமார்பு உடையவள் பூமிப்பிராட்டி என்று கருத்து. (பெரு மா மழைக் கூந்தல்) – பெருத்துக் கருத்த மேகங்களையே இவள் தனது கூந்தலாகக் கொண்டுள்ளாள். நீர் நிறைந்த மழைக்கால மேகக்கூட்டங்களே பூமிப்பிராட்டியின் கூந்தலாக உள்ளது. இந்தக் கூந்தலில் இந்த்ரதனுஸ் என்னும் வானவில்லும், மின்னல்களும் கதம்ப மாலைகளாக உள்ளன. இந்தக் காரணங்களாலும் மேகமே இவளது கூந்தல் எனப்பட்டது. இந்த கூந்தல் கணவனின் கண்களுக்குக் குளிர்ச்சி அளிப்பதாக உள்ளது, அவன் ஒருமுறை அதனை வருடினால் அவன் களைப்புத் தீர்வது போன்று, இந்த மேகங்கள் ஒருமுறை மழை பொழிந்தால் உலகின் களைப்பு ஆறும்படி உள்ளது.

(நீராரவேலி) – ஆவரணஜலமே இவளுக்குக் காப்பென்னுதல், மர்யாதையென்னுதல். குளிர்த்தியையுடைத்தான சந்தநத்தோபாதியாய் நாமத்தையுடைய கற்பே இவளுயரத்துக்கு எல்லையென்கை. (நிலமங்கையென்னுமிப்பார்) – பூமியைச் சொல்லப்புக்கு அதுக்கு ப்ரகாரியான ஸ்ரீபூமிப்பிராட்டியளவும் சொன்னபடி. (பாரோர் சொலப்பட்ட மூன்றன்றே) – சிறியார் பெரியாரென்னாதே விலக்ஷணர் அவிலக்ஷணர் என்னாதே பூமியிலுண்டான சேதநர் பரிக்ரஹித்த புருஷார்த்தம் மூன்றன்றோ என்கை. அன்றே என்றபடியாலே மோக்ஷமென்றொரு புருஷார்த்தம் உண்டன்று என்னுமிடம் சொல்லுகிறது.

விளக்கம் – (நீரார வேலி) இந்த அண்டத்தைச் சுற்றி உள்ள நீருக்கு ஆவரண ஜலம் என்று பெயர். இந்த ஆவரண ஜலத்தை அகழி போன்று தனது காவலாக பூமிப்பிராட்டி கொண்டுள்ளாள். அல்லது ஆரம் என்றால் சந்தனம் என்றும் ஒரு பொருள் உண்டு. ஆக, இவளது கற்பு சந்தனம் போன்று குளிர்ந்து உள்ளது. (நிலமங்கை என்னும் இப்பார்) – பூமியைச் சொல்ல வந்த ஆழ்வார், அந்த பூமிக்கு ஆதாரமாக உள்ள பூமிப்பிராட்டியைக் கூறினார். (பாரோர் சொலப்பட்ட மூன்றன்றே) – சிறியவர்கள், பெரியவர்கள், உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்ற வேறுபாடு இல்லாமல் இந்த உலகில் உள்ள அனைவராலும் விரும்பப்படும் புருஷார்த்தங்கள் மூன்று அல்லவா? பாசுரத்தில் – அன்றே – எனக்கூறுவதால் மோக்ஷம் என்ற புருஷார்த்தம் இல்லை என்று கூறினார்.

இப்பாரோர், (அம்மூன்றும் ஆராயில் தானே) இவற்றை ஆராயப்புகில், நம்முடைய திருவுள்ளத்தில் கிடக்கிற காமமே புருஷார்த்தமென்றாதல், ஏவகாரம் பாதத்தைப் பூரித்துக்கிடக்கிறதாய், ஆராயில்தான் என்றதாதல். (அறம் பொருள் இன்பமென்று) – கீழே புருஷார்த்தத்தை மூன்றென்று சொல்லச்செய்தே இங்கெடுத்ததுக்கு ப்ரயோஜனமென்னென்னில், மோக்ஷம் இதினுள்ளே ஒன்றென்று சொல்லுவா ருண்டாகிலும் என்று அவர்களுக்கு இடமறச் சொல்லுகிறாள். (ஆரார் இவற்றினிடை அதனை எய்துவார்) – நடுவணது எய்த இருதலையும் எய்தும் என்று தமிழர் சொல்லுகிறபடியே சொல்லுகிறாரன்று, இவை மூன்றிலும் வைத்துக்கொண்டு, அதனை எய்துவாரென்று தமக்கு உத்தேச்யமான காமத்தை எய்துவார் என்றபடி, ஆரார் இவற்றினிடை எய்துவார் என்கையாலே – பயிலுந் திருவுடையார் யவரேலும் – என்னுமா போலே இப்புருஷார்த்தத்தை லபிப்பார் ஜன்ம வ்ருத்தங்களால் குறைவுடையவரேயாகிலும் அவர்களும் சிலவரே என்கிறார். (சீரார் இருகலையும் எய்துவர்) – இத்தை லபிக்கும் ஸம்பத்தையுடையவர்கள் இதுக்குக் கலாமாத்ரமான தர்மார்த்தங்களிரண்டையும் லபித்தராகக்கடவர். ஸாத்யத்தை லபித்தவர்கள் ஸாதநத்தையும் அனுஷ்டித்தாராகக்கடவதிறே. இவற்றுக்குச் சீர்மை இதுக்கு ஸாதநமாகையாலே. ஓரூருக்குப் போகவென்று ஒருவன் மனோரதித்தால், அவ்வூரிலே அவனைக் கண்டால் நடுவுபட்ட வழியும் வந்தானாகக்கடவதிறே.

விளக்கம் – (அறம் மூன்றும் ஆராயில் தானே) இந்த உலகில் உள்ளவர்கள் அறம், பொருள் மற்றும் இன்பம் என்ற மூன்று புருஷார்த்தங்களையும் ஆராய்ந்தால், தன்னுடைய மனதில்(மடல் எடுத்தவள் மனதில்) உள்ளதும், அவளுக்கு விருப்பமானதாகிய காமம் என்பது மட்டுமே புருஷார்த்தமாக உள்ளது. (அறம் பொருள் இன்பம் என்று) – கீழே புருஷார்த்தங்கள் மூன்று என்று கூறிவிட்டு, இங்கு மீண்டும் ஏன் அவற்றைக் கூறவேண்டும்? காரணம், இந்த மூன்றில் மோக்ஷம் என்பது அடங்கவில்லை என்றாலும் ஒரு சிலர், இந்த மூன்றில் மோக்ஷமும் ஒன்று என விவாதிக்கக் கூடும். அவர்களுக்கு இடம்

தராமல் இருப்பதற்காகத் தனித்தனியே கூறுகிறார். (ஆரார் இவற்றின் இடை அதனை எய்துவார்) – நாலடியார் என்ற நூலில் – நடுவணது எய்த இருதலையும் எய்தும் – என்று கூறப்பட்டது. இதன் பொருள், அறம்–பொருள்–இன்பம் என்று கூறப்பட்டவற்றில், நடுவில் கூறப்பட்ட பொருளை அடைந்தால் மற்ற இரண்டையும் அடைந்துவிடலாம் என்பதாகும். ஆனால் இங்கு ஆழ்வார் அந்தக் கருத்தை ஏற்கவில்லை, காரணம், ஆழ்வாருக்கு பொருள் மீது பற்றில்லை. ஆகவே தனக்கு விருப்பமான காமத்தைக் கூறி, காம புருஷார்த்தத்தை அடைபவர்கள் அதற்கு உபாயமாக இருக்கும் அறம் மற்றும் பொருளை அடைந்தவர்கள் ஆவர் என்றார். திருவாய்மொழி(3–7–1) – பயிலும் திருவுடையார் எவரேலும் – என்று கூறுவது போல், இந்தக் காம புருஷார்த்தத்தை அடைந்தவர்கள் தங்களது பிறப்பாலும்–ஒழுக்கத்தாலும் எத்தனை தாழ்ந்தவர்களாக இருந்தாலும், சிறந்தவர்களே என்றார். (சீரார் இருகலையும் எய்துவர்) – இந்தக் காம புருஷார்த்தத்தை அடையப் பெற்றவர்கள், அறம்–பொருள் ஆகிய இரண்டையும் அடைந்தவர்களே ஆவார். ஸாத்யம் எனப்படும் இன்பத்தைப் பெற்றவர்கள், அதற்கு உபாயமான அறம்–பொருளை அடைந்திருக்கவேண்டும் அல்லவா? இவை இரண்டிற்கும்(அறம்–பொருள்) பெருமை என்பதே, காம புருஷார்த்தத்திற்கு உபாயமாக உள்ளன என்பது ஆகும். ஒருவன் ஓர் ஊருக்குச் செல்ல வேண்டும் என்று விரும்பி அவ்விதமே சென்றுவிட்டான் என்று வைத்துக்கொள்வோம். அவனை அந்த ஊரில் நாம் கண்டால், அவன் அந்த ஊருக்குச் செல்லும் வழி அனைத்தையும் கடந்தவனாகவே இருக்க வேண்டும் அல்லவா?

(சிக்கெனமற்று இத்யாதி) – அல்பாஸ்திரமென்று இப்புருஷார்த்தங்களை தூஷித்து ஆநந்தாவஹமாய, அந்தமில் பேரின்பமாய், நிலைநின்ற புருஷார்த்தம் உண்டென்பர்கள், இப்படி காணவெண்ணாதே. அவர்கள் வசஸ்ஸமுத்திரத்திலே கேட்டுப்போமித்தனை என்கை. ஆரானும் என்கையாலே – அவயபதேச்யருமாய் அவ்யுத்பந்நருமாயிருப்பார் சிலரென்கை.

விளக்கம் – (சிக்கெனமற்று இத்யாதி) இந்த மூன்று புருஷார்த்தங்கள்(அறம்–பொருள்–இன்பம்) மிகவும் அற்பமானவை என்று விலக்கி, நிலையுள்ளதும் ஆனந்தமயமானதும் ஆகிய புருஷார்த்தம்(மோக்ஷம்) ஒன்று உண்டு என்பார்கள். ஆனால் அப்படிபட்ட புருஷார்த்தத்தை நேரில் கண்டவர்கள் யாருமில்லை. இவ்விதம் கூறுபவர்களின் சொற்கள் கடல் போன்று வந்தாலும், அவை கானல் நீராகவே உள்ளன. ஆரானும் என்று கூறுவதன் மூலம் அறிவற்றவர்களாக, ஊர்–பேர் தெரியாதவர்களே இவ்விதம் கூறுவர்(மோக்ஷம் என்ற புருஷார்த்தம் பற்றி – இங்கு ஓர் ஐயம் ஏற்படலாம் – ஆழ்வார் ஏன் இவ்விதம் மோக்ஷம் உண்டு என்பதைக் கூறுபவர்களைத் தூஷிக்கிறார்? இதற்கு விடை – எவ்வளவு முயன்றாலும் எம்பெருமானை அடைய முடியாததால் மடல் எடுத்தவள், பகவான் மீது வெறுப்புற்று, நாத்திகம் பேசுகிறாள் – என்று கருத்து).

அதுதானில்லையோவெனில், (ஓராமையன்றே உலகத்தார் சொல்லும் சொல்) – லோகபரிக்ரஹத்தை அவர்கள் ஆராயாமல் செல்லுகிறார்களாமத்தனை, அதொன்று அல்ல என்கை. அவர்கள் அறியாமல் சொன்னாராம்படி என்னென்னில், (ஓராமையாமாறு இத்யாதி) – அவர்கள் அறியாமல் சொன்னார்களென்னுமிடம், என் உக்திமாத்ரத்தாலே அவர்கள் ப்ரமாண ப்ரமேயம் இரண்டையும் அழிக்கிறேன், நீங்கள் செய்யவேண்டுவது செவிதாழ்த்துத் தருமித்தனை.

விளக்கம் – அப்படி என்றால் மோக்ஷம் என்ற புருஷார்த்தம் உண்மையாக உண்டா–இல்லையா என்ற கேள்விக்கு விடை தருகிறார். (ஓராமையன்றே உலகத்தார் சொல்லும் சொல்) – அவர்கள் மற்றவர்கள் கூறுவதை கேட்டு, தாங்களாகவே ஆராயாமல் மோக்ஷம் என்பது உண்டு என்று கூறுகின்றனர். ஆனால் அப்படி ஏதும் உண்மையில் இல்லை. அவர்கள் ஆராயாமல் கூறுகிறார்கள் என்று எப்படிக் கூற முடிந்தது? (ஓராமையாமாறு இத்யாதி) – அவர்கள் ஆராயாமல் கூறினார்கள் என்பதை நான் விளக்குகிறேன். என்னுடைய சொற்களைக் கொண்டே அவர்கள் கூறும் ப்ரமாணமான சாஸ்திரத்தையும், அந்த சாஸ்திரம் மூலம் அறியப்படும் ப்ரமேயமான மோக்ஷத்தையும் நிராகரிக்கிறேன். நீங்கள் செய்ய வேண்டியது, உங்கள் காதுகளைக் கொடுத்து கேட்பது மட்டுமே ஆகும்.

(காரார்புரவி) – அதான் உங்களுக்கேற்க உண்டேயென்று தோற்றிற்றோ? (காரார்புரவி) – மேகபதத்திலே குதிரை ஸஞ்சரிக்கையாவதென்? (புரவியேழ்) இரண்டல்ல, நாலல்ல, ஆறல்ல, எட்டல்ல. ஏழு குதிரை பூண்கையாவதென் (தனியாழித் தேரார்) – பிள்ளாய் இரண்டாதல் நாலாதலன்றிக்கே தனிச் சக்ரமாம், பிள்ளாய் ஆகாசத்திலே ஒருவன் தேர் நடக்கையாவதென்? (நிறை கதிரோன்) – ஒரு விளக்கின் ஸந்நிதியிலே விழிக்கமாட்டாத அதிக்ஷூத்ரன், உஷ்ண கிரணங்களால் பூர்ணனாயிருக்கிற ஆதித்யனைச் சென்று கிட்டுகையாவதென்? (மண்டலத்தை கீண்டு புக்கு) – ஒருவனை இங்கே உபாசித்து,

அவனுடைய ராஜகுலத்தாலே ஆதித்ய மண்டலத்தின் நடுவே போகிறானாமிறே. அங்கே ஏறப் போனால் அவ்வழிப்போக்குத்தான் இங்குப்போலே இரண்டருகும் பணையாக நடுவே போகிறானோதான் என்கை. (ஆராவமுதமங்கெய்தி) – திருநறையூர் இங்கே, திருவாய்ப்பாடி இங்கேயாயிருக்கச், அங்கு எத்தைக் கொண்டு எத்தைப் பொறுவது என்கை.

விளக்கம் – இனி, சூரியனின் தேரைப் பற்றியும் அவன் குதிரைகள் பற்றியும் கூறுகிறார். (காரார் புரவி) – மேக மண்டலத்தில் நடக்கும் குதிரை உங்களுக்குத் தெரிகிறதா? மேக மண்டலத்தில் குதிரை நடப்பது இயலுமா? (புரவி ஏழ்) – அவ்விதம் சூரியனின் தேரில் பூட்டப்பட்ட குதிரைகள் இரண்டு, நான்கு, ஆறு, எட்டு குதிரைகள் அல்லவாம், அது ஏன் ஏழு குதிரைகளைப் பூட்ட வேண்டும்? (தனி ஆழி தேரார்) – சூரியனின் தேரில் இரண்டு சக்கரங்களும், நான்கு சக்கரங்களும் இல்லையாம், ஒரே சக்கரம் மட்டும் உள்ளதாம். ஆகாயத்தில் ஒருவனுடைய தேர் எவ்விதம் ஓடும்? (நிறை கதிரோன்) – ஒரு விளக்கையே வெகு நேரம் பார்க்க இயலாத ஜீவன், (உயிர் பிரிந்த பின்னர்) மிகவும் உஷ்ணமான கதிர்கள் கொண்ட சூரியனைச் சென்று அடைவது எவ்விதம் நடக்கும்? (மண்டலத்தை கீண்டு புக்கு) – பரம்பொருளை இங்கு உபாசனை செய்து விட்டு, அவன் அளித்த வலிமையாலே சூரிய மண்டலத்தின் நடுவே செல்கிறானாமே – இது எப்படி நடக்கும்? அவ்விதம் செல்லும் போது திருவரங்கத்தில் உள்ளது போன்று இரு பக்கமும் நிழல் தரும் மரங்கள் இருக்க, அவற்றின் நடுவிலா நடந்து செல்கிறான்? (ஆராவமுதம் அங்கு எய்தி) – திருநறையூர், திருவாயர்ப்பாடி போன்ற இடங்களில் ஆராவமுதம் உள்ளபோது, அந்த அமுதத்தைத் தேடி அங்கே போகின்றானாமே – இது என்ன மடைமை? (அங்கு எய்தி) – அவனை அடைவதற்கு ஏற்ற பனைமடலும், திருநறையூரும் இங்கு உள்ளபோது, அங்கு சென்று எதனைக் கொண்டு, எதனைப் பெற முயல்கிறான்?

(அதில் நின்றும் வாராதொழிவதொன்றுண்டே) – போனால் பின்னை புநராவ்ருத்தியில்லையாம். தன்னிச்சையின்றிக்கே இருக்கச் செய்தே, தன் கர்மத்தாலே நரகத்தை அனுபவித்தவனும் மீளா நின்றான், இச்சையாலே ஸூகானுபவம் பண்ணப்புக்கவன் மீளானாம். (ஒன்றுண்டே) – இப்படிப்பட்டதொரு புருஷார்த்தம் உண்டென்று தோற்றியிரா நின்றதோ உங்களுக்கு? என்கை.

விளக்கம் – (அதில் நின்றும் வாராது ஒழிவது ஒன்று உண்டே) அங்கு சென்று விட்டால் மீண்டும் இங்கு வர இயலாதாமே. தனது விருப்பப்படி நடக்க இயலாமல், தனது கர்மபலன்படி நடந்து, அதன் காரணமாக நரகத்தை அடைந்தவர்கள் கூட, மீண்டும் இந்த பூமிக்குத் திரும்ப இயலுமாம், ஆனால் தன்னுடைய விருப்பத்தாலே பரம்பொருளை அனுபவிக்கச் சென்றவன் மீண்டும் வர முடியாதாம், இது என்ன வேடிக்கை? (ஒன்று உண்டே) – இப்படியாக முழுவதும் முரண்பாடுகளும் வேடிக்கைகளும் நிறைந்த மோக்ஷம் என்ற புருஷார்த்தம் உள்ளது என்றா நீங்கள் நம்புகிறீர்கள்?

(அதுநிற்க) – அதுதான் உண்டாக, இல்லையாக பிணக்கென்? என்கை. (ஏரார் முயல்விட்டுக் காக்கைப்பின் போவதே) – ஸ்தல ஸஞ்சாரியை விட்டு, சாகா ஸஞ்சாரியைப் பற்றுவதே. ஸூஸங்கதமுமாய் உபயோக யோக்யமுமாயிருக்கிற வஸ்து கைப்பட்டிருக்க, இத்தை உபேக்ஷித்து, கைப்படாதேயிருப்பதுமாய், கைப்படுவதொன்றென்று தெரியாதிருப்பதுமாய், கைப்பட்டாலும் உபயோக யோக்யமுமின்றிக்கே இருக்கிற வஸ்துவுக்கு வில்லெடுத்துத் திரிவதே. இதொரு சேதந க்ருத்யமோ? என்கிறார்.

விளக்கம் – (அது நிற்க) அப்படிப்பட்ட ஒரு மோக்ஷம் என்ற புருஷார்த்தம் இருந்தால் என்ன, இல்லாமல் போனால் என்ன, அதற்கு வாதம் செய்வது ஏன்? (ஏரார் முயல் விட்டு காக்கை பின் போவதே) – அப்படியே மோக்ஷ புருஷார்த்தம் உள்ளது என்று ஏற்றுக்கொண்டாலும், இங்கு உள்ள அர்ச்சாவதாரத்தை விட்டு, எங்கோ உள்ள மோக்ஷத்தைத் தேடுவது ஏன்? இந்தச் செயல், தரையில் உள்ள முயலை விட்டு, ஆகாயத்தில் உள்ள காக்கையைப் பிடிக்க முற்படுவது போன்றல்லவா உள்ளது? எளிதாகக் கைப்பற்றக் கூடியதும், உண்ணக் கூடியதும் ஆகிய முயலை விட்டுவிட்டு, கையில் எளிதில் சிக்காததும், சிக்கக்கூடியது என்ற உறுதியாகக் கூற இயலாததும், அப்படியே சிக்கினாலும் உண்ணத் தகுதி இல்லாததும் ஆகிய காக்கையைப் பிடிக்க வில் எடுத்துக் கொண்டு செல்வது ஏன்? இது ஞானம் உள்ளவர்கள் செய்யும் செயலோ? (இங்கு முயல் என்பது அர்ச்சாவதாரத்தையும், காக்கை என்பது மோக்ஷத்தையும் குறிக்கும்).

(ஏராரிளமுலையீர்) – நீங்கள் வடிவுபடைத்தது, வடிவழகாலுள்ள ப்ரயோஜனம் இங்கே கொள்ளுகைக்கன்றோ என்று கருத்து. கொம்மை முலைகள் இடர்த்தீரக் கோவிந்தற்கோர் குற்றேவல் என்னக்கடவதிறே. இச்சரீரத்தைக் கொண்டு அவதாரங்களிலும், உகந்தருளின் நிலங்களிலும் அடிமை செய்யாதே, தேசாந்தரே காலாந்தரே தேஹாந்தரே பெறும்பேறாகிறது என்னென்புதெங்கை. (என்றனக்குற்றதுதான்) இதுவெல்லாங்கிடக்க நான் மாறுபாடுருவப்பட்டதொன்று கேளுங்கள் என்கிறார்.

விளக்கம் – (ஏரார் இளமுலையீர்) நீங்கள் அழகான ஸ்தனங்கள் கொண்டு இருப்பது, அதன் பலனை இங்கேயே அனுபவிக்க அல்லவா? நாச்சியார் திருமொழி(13–9) – கொம்மை முலைகள் இடர் தீரக் கோவிந்தற்கோர் கூற்றேவல் – என்று கூறியதை உணர்வீர்களாக. இந்த உடலைக் கொண்டு அவன் எடுக்கும் அவதாரங்கள், அவன் வாசம் செய்யும் அர்ச்சாவதார ஸ்தலங்கள் ஆகிய இடங்களில் கைங்கர்யம் செய்ய வேண்டும். அதனை விட்டு மற்றொரு உடலை(மோக்ஷத்தில் கிட்டும் நித்யசூரிகள் போன்ற உடல்), மற்றொரு இடத்தில்(பரமபதத்தில்), வேறு ஒரு காலத்தில் எடுப்பதால் என்ன பயன்? (என்றனக்குற்றதுதான்) – இது போன்ற விஷயங்கள் ஒருபுறம் இருக்கட்டும். நான் அவனது கடைக்கண் பார்வை என்ற அம்பினால் பட்டபாட்டைக் கேளுங்கள்.

(காரார் குழல் இத்யாதி) – என் உத்யோகம் எதிர்த்தலையைக் கையும் மடலுமாகக் காணப்போருங்கிடீர். (காரார் குழலெடுத்துக் கட்டி) – நீலமணி போலே நெய்த்து இருண்டு ச்ரமஹரமான குழலை எடுத்துக்கட்டி. மயிர் செறிவாலும், பருவத்தாலும், ரூபத்தாலும் எடுத்துக்கட்ட அரிதாயிருந்தபடி. (எடுத்துக்கட்டி) – அலையப் புறப்பட்டேனாகில், அவனை விலங்கிடலாங்கிடீர் என்கை. (கதிர்முலையை) – யௌவனப்புகரால் மிக்க முலையை. (வார வீக்கி) – வார் ஸபலமாம்படி வீக்கி என்னுதல். வாராலே ஆரக் கட்டி என்னுதல். கொல்லும் யானைக்கு முகபடாமிட்டாற்போலே, இக்கச்சுக் கிடந்ததில்லையாகில் அவனைப் பிச்சேற்றலாங்கீடீர் என்கிறாள். (மணிமேகலை திருத்தி) – மணிமயமான மேகலாபரணத்தை அமைத்து. அதாவது பிராட்டி யமுனையில் தெப்பமேற ஒருப்பட்டாற்போலே அவனுக்கு ஸர்வஸ்வதநாம் பண்ணினபடி. (ஆராரயில் வேற்கண்) – அழகும் கூர்மையும் ஆர்ந்த கண். (அஞ்சனத்தின் நீறணிந்து) – அழகுக்கு இடுகிறதன்றிறே, மங்களார்த்தமாக அஞ்சனமிட்டு. (அயில் வேல் கண் அஞ்சனத்தின் நீறணிந்து) – கடைந்த பத்திரத்திலே நெய்யிட்டாற்போலே.

விளக்கம் – (ஆரார் குழல் இத்யாதி) – எனது கறுமையான கூந்தலைக் கண்டவுடன் அவன் கையும் மடலுமாக வருவான் பாருங்கள். (கார் ஆர் குழல் எடுத்து கட்டி) – நீலமணி போன்ற வழவழப்புடனும், கருத்தும், காண்பவர்களின் களைப்பை நீக்க வல்லதும் ஆகிய கூந்தலை அவளுக்கு உள்ளது, அதன் அடர்த்தியாலும், அவளது வயதாலும், முடியாமல் விட்டாலே அழகாக உள்ள தோற்றத்தாலும் கூந்தலை எடுத்து கட்ட இயலாதபடி உள்ளது. (எடுத்துக் கட்டி) – கூந்தலை அள்ளி முடியாமல் சென்றால், அதனாலேயே அவனை விலங்கு போன்று கட்டி விடலாம்படி கூந்தல் உள்ளது. (கதிர் முலையை) – யௌவனம் காரணமாக ஒளி வீசும் ஸ்தனங்களை. (வாரா வீக்கி) – கச்சத்தால் அழுத்திக் கட்டியபடி, காண்பவர்களைக் கொல்லும் யானைக்கு முகபடாம் இடுவது போன்று, இதனைக் கச்சை வைத்துக் கட்டவில்லை என்றால், அவன் வந்தவுடன் விழுந்து விடுவான். (மணி மேகலை திருத்தி) – இரத்தினங்கள் பதிக்கப்பட்ட மேகலை என்ற ஆபரணம் அணிந்து, சீதை யமுனையில் உள்ள படகில் ஏற முற்படும் போது, இராமனுக்குத் தனது அழகு முழுவதையும் காட்டியது போல், இங்கு பரகாலநாயகி தன்னுடைய திருமேனியை அலங்கரித்து, அவனுக்குத் தன் அழகைக் காண்பிக்கிறாள் என்று கருத்து. (ஆர் ஆர் அயில் வேற்கண்) – அழகும் கூர்மையும் நிறைந்த கண்கள். (அஞ்சனத்தின் நீர் அணிந்து) – இவளது அழகான கண்களுக்கு மை தீட்ட வேண்டிய அவசியம் இல்லை என்றாலும், மங்களகரமாக இருக்க மேண்டும் என்பதற்காக மை தீட்டப்பட்டு. (அயில் வேல் கண் அஞ்சனத்தின் நிறணிந்து – சாணை பிடித்த ஆயுதம் மீது துரு ஏராமல் இருக்க நெய் தடவுவது போன்று, கூர்மையான வேல் ஆயுதம் போன்ற இவள் கண்களுக்கு மை உள்ளது.

(காரார் குழலெடுத்துக் கட்டி) – குழலெடுத்துக் கட்டிற்றிலேனாகில், எதிர்த்தலையைக் கையும் மடலுமாகக் காணலாங்கீடீர் என்கை. (கதிர் முலையை வாரார வீக்கி) – கொல்லும் யானைக்கு முகபடாமிட்டாற்போலே முலையின் அழகைக் கச்சாலே மறைத்திலேனாகில் நான்பட்டது அவன் படுங்கிடீரென்கை. (மணிமேகலை திருத்தி) – பரியட்டத்தைப் பேணாதே புறப்பட்டேனாகில், என் அவஸ்த்தை அவனுக்குப் பிறக்குங்கிடீரென்கை. (ஆராரயில் வேற்கண் அஞ்சனத்தின் நீறணிந்து) – பெருவெள்ளத்திலே வாய்த்தலை படலிட்டாற்போலே கண்ணின் அழகை அஞ்சனத்தினாலே மறைத்திலேனாகில் கண்ணுக்கு இலக்காய் அவனுக்குத் தப்பவெண்ணாது கிடீரென்றதாயிற்று.

(குறிப்பு – மேலே உள்ள பத்தியில் ஒரு பெண்ணுக்கு உரியபடி கூந்தல் திருத்தி, நேர்த்தியாக உடை அணிந்து, மை இட்டு இவள் சென்றாள் என்பதாகக் கூறப்பட்டது. இனி அவ்விதம் இவள் செல்லாமல் இந்த ஒப்பனைகள் ஏதும் செய்யாமல் இருந்திருந்தால், அவன் இவளுக்காக மடல் எடுத்திருப்பான் என்று உணர்த்த அதே வரிகள் வேறுவிதமாகப் பொருள் கூறப்பட்டன).

விளக்கம் – (கார் ஆர் குழல் எடுத்துக் கட்டி) – கூந்தலைக் கட்டாமல் அப்படியே விட்டிருந்தால், அவன் கூந்தலின் எழிலால் கவரப்பட்டு, கையும் மடலுமாக வந்திருப்பான். (கதிர் முலையை வார் ஆர் வீக்கி) – கொல்லுகின்ற யானைக்கு முகபடாம் இடுவது போன்று செய்யாமல், எனது ஸ்தனத்தின் அழகை கச்சையால் மறைக்காமல் வந்திருந்தேன் என்றால், நான் படும் துன்பத்தை அவன் பட்டிருப்பான். (மணிமேகலை திருத்தி) – மாலையையும் புடவையையும் சீர்ப்படுத்தாமல் வந்திருந்தால், எனது துன்பம் அவனுக்கு உண்டாகி இருக்கும். (ஆர் ஆர் அயில் வேற்கண் அஞ்சனத்தின் நீறணிந்து) – பாய்ந்து வரும் வெள்ளத்தை மதகு வைத்து அடைப்பது போன்று, எனது கண்ணின் அழகை மை கொண்டு மறைக்காமல் இருந்தேன் என்றால், எனது கண் என்ற அம்பின் இலக்கிலிருந்து அவன் தப்பி இருக்கமுடியாது.

(சீரார் செழும் பந்து) – ஆரேனுக்கு ஸம்பத்துண்டாவதும் இவளுடைய ஸ்பர்சங்கொண்டிறே. பந்தார்விரலி என்று இவள் கைவிடாதிருக்கும் பந்திறே. ஸம்பத்துக்குக் குறையில்லையிறே. (செழும்பந்து) – அழகிய பந்து. (கொண்டடியாநின்றேன் நான்) – அங்யார்த்தங்கிடீர் என்னுடைய வ்யாபாரமென்கை.

விளக்கம் – (சீர் ஆர் செழும் பந்து) – யாருக்காவது செல்வம் சேர்கிறது என்றால் அது அவளுடைய (ஸ்ரீதேவி) ஸ்பர்சத்தால் (தொடுவதால்) ஆகும். திருப்பாவையில்(18) – பந்தார் விரலி – என்று கூறுவது போன்று இவள் கைவிடாமல் உள்ள பந்து. (செழும்பந்து) – அழகான பந்து. (கொண்டு அடியா நின்றேன் நான்) – அந்தப் பந்தை அடிந்து விளையாடியபடி, மறைமுகமாக அவன் வருவானா என்று எதிர்பார்த்தபடி நின்றேன்.

(நீரார்கமலமித்யாதி) – என் உத்யோகம் ஒன்றுமன்று என்னும்படி அவனுத்யோகமிருந்தபடி. (நீரார்கமலம் போல் செங்கண்மால்) – ஒரு தடாகம் பரப்புமாறத் தாமரை பூத்தாற்போலே திருக்கண்கள். ஒரு தடாகத்தை ஒரு தாமரையே கண்செறியிட அலர்ந்தாற்போலேயாயிற்று வடிவுடையக் கண்ணாயிருந்தபடி. கமலம் போல் செங்கண் என்கையாலே குளிர்த்தி, மென்மை, நாற்றம், விகாஸம் எல்லம் சொல்லுகிறது. (என்றொருவன்) – ஒருவனென்னும் ஆபாதப்ரதீதி அமையுங்கீடீர். இப்படிப்பட்டானென்று உள்ளபடியெல்லாம் பரிச்சேதிக்கப்போச்சுதில்லை என்றபடி. சார்ங்கமுடைய அடிகளை இன்னொரென்றறியேன் என்கையாலே அடையாளஞ்சொல்லா நிற்கச்செய்தே அறிந்திலேனென்னும்போது உள்ளபடியெல்லாம் பரிச்சேதிக்கப்போச்சுதில்லை என்றபடி. (பாரோர்களெல்லாம் மகிழ) – சிறியார், பெரியார், விலக்ஷணர், அவிலக்ஷணர் என்னாதபடி இருந்ததே குடியாக ப்ரியப்படும்படி வந்து தோன்றினான். பாரோர்களெல்லாமென்கையாலே மத்யமரையும் கூட்டிக் கொண்டு ப்ரியப்படும்படி வந்து தோன்றினானென்கை. (பறை கறங்க) – கொல்லும் ஆனைக்குத் தலைப்பறையடிப்பாரைபோலே பறையடிக்க வந்து தோன்றினான். (சீரார் குடம்) – பதார்த்தங்களுக்குச் சீர்மையாவது அவனொடு ஏதேனுமொரு ஸ்பர்சமுண்டாகையிறே. சீரார் குடம் என்று தன்னுடைய நோயாசையிருக்கிறபடி. (இரண்டு) – ஒரு பந்தைப் பொகடுவிக்க எடுத்தது இரண்டு குடமிறே. (ஏந்தி) – வ்யாபரியா நிற்கச்செய்தே, ஏந்தியென்னும்போது ஆகாசத்திலே நிற்கிறாப்போலே நிற்கையும், கையிலும் அப்படியே பொருந்தியிருக்கிறாப்போலே மாறிமாறி வருகிற சடக்கிருக்கிறபடி.

விளக்கம் – (நீரார் கமலம் போல் செங்கண்மால்) – ஒரு குளத்தை முழுவதுமாக நிரப்பும்படி மலர்ந்து நிற்கும் ஒரு பெரிய தாமரை போன்ற திருக்கண்கள். ஒரு குளம் முழுவதுமாக ஒரு தாமரை மலர் மட்டுமே முழுவதும் மறைத்து நிற்கும்படி, அவனது அழகான திருமேனியே கண்கள் போன்று இருந்தபடி. கமலம் போல் செங்கண் – என்பதன் மூலம் குளிர்ச்சி, மென்மை, நறுமணம், மலர்தல் ஆகிய அனைத்தும் தாமரை போன்று இவன் கண்களுக்கும் உள்ளன என்ற கூறப்பட்டது. (என்றொருவன்) – அவனை சிறிது பார்த்தாலே மயங்குவதற்கு ஏதுவாகும். அவன் எப்படிப்பட்டவன் என்று ஆராய இயலாதபடி உள்ளவன். பெரிய திருமொழி(10–10–9) – சார்ங்கம் உடைய அடிகளை இன்னார் என்று அறியேன் – என்று அடையாளம் கூறியபோதிலும் அவனை உள்ளபடி அறிய மாட்டோம் என்று இவரே(திருமங்கையாழ்வார்) கூறினார் அன்றோ? (பாரோர்கள் எல்லாம் மகிழ) – சிறியவர்கள், பெரியவர்கள், உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்று ஏற்றத்தாழ்வு பாராமல்,

அனைவரும் தன் மீது ஆசை கொள்ளும்படி வந்து நின்றான். (பறை கறங்க) – கொல்லக் கூடிய யானை ஓடி வருகிறது என்று பறையை அடிப்பது போல், பெண்களை வீழ்த்தக்கூடிய இவன் வருகிறான் என்று பறை அடிக்க இவன் வந்தான். (சீரார் குடம்) – பொருள்களுக்கு மேன்மை என்பது அவனது தொடுதல் கிட்டுவதே ஆகும். கண்ணன் குடக்கூத்து ஆடியபோது அவன் திருக்கரங்களால் தீண்டப்பட்ட குடங்களுக்கு ஏற்பட்ட மேன்மை, தங்களது ஸ்தனங்களுக்கு ஏற்படவில்லை என்று வருந்துகிறார்கள். (இரண்டு) – கையில் உள்ள ஒரு பந்தை கைவிடுவதற்காக, இரண்டு குடங்களைக் கையில் எடுத்து நின்று. (ஏந்தி) – இரண்டு குடங்களையும் மாறி மாறி, ஒரு கையிலிருந்து மற்றொரு கைக்குத் தூக்கி அடித்து, அவை ஆகாயத்தில் நிற்பது போன்றும், தனது கையில் உள்ளது போன்றும் விளையாடி நின்றான்.

(செழுந்தெருவே) – அகல நீளங்களாலே குறைவற்ற தெரு. வீதியாரவருவான் என்று வடிவைப் பாரித்துக் கொடுவந்த தெருவிறே. (ஆராரெனச்சொல்லி) – காரிகையார் நிறைகாப்பவர் யார் என்னுமாபோலே. என்னுடைய உத்யோகமிருந்தபடி கண்டதிறே. ஸ்த்ரீத்வாபிமாநமுடையவர்களே, உங்கள் ஸ்த்ரீத்வத்தைக் காக்கவல்லார் காத்துக்கொள்ளுங்கள் என்பாரைபோலே வந்து தோன்றினானென்கை. (ஆடுமது கண்டு) – அக்குடக்கூத்தாடுகிறபடியைக் கண்டு. (ஏராரிளமுலையார்) – அக்குடக்கூத்துக்கண்டு குறியழியாத முலை படைத்தவர்கள். (என்னையருமெல்லாரும்) – விலக்கக்கண்ட தாய்மாரும், மற்றுமுள்ளாரும். (வாராயோவென்றார்க்குச் சென்றேனென் வல்வினையால்) – ஹிதஞ்சொல்லுவாரோடு ப்ரியஞ்சொல்லுவாரோடு வாசியற எல்லாருமொக்க கெடுவாய், கெட்டாயிறே, வந்து கொள்ளாய் என்றழைத்தார்கள். (வாராயோ என்றார்க்கு) – பலகால் அழைத்து வாராதாரை அழைக்குமாபோலே, கடுக வந்துகொள்ளாயென்கிறார்கள். கண்ணை அங்கே வைத்து வாயாலே வாராயோ என்கிறார்கள். (சென்றேனென் வல்வினையால்) – கௌரவ்யர் சொன்னபடி செய்யவேணுமிறே என்று சென்றேன். (என் வல் வினையால்) – என்னுடைய மஹாபாபத்தாலே. வல்வினை என்கிறது, இப்போது பக்தியையிறே. உத்தேச்ய விரோதி பாபமாமித்தனையிறே.

விளக்கம் – (செழுந் தெருவே) – அகல–நீளங்களால் குறைவில்லாத வீதி. நாச்சியார் திருமொழி(14–5) – வீதியார வருவான் – வீதிகள் அனைத்திலும் தனது திருமேனியின் ஒளியை வீசியபடி வந்து – என்னும்படியாக வருவான். (ஆர் ஆர் எனச் சொல்லி) – என்னுடைய விளையாட்டைப் பார்த்தீர்களா? பெண்ணாக உள்ளோம் என்ற சிந்தனை உள்ளவர்களே, உங்களது பெண்மையைக் காத்துக்கொள்ளுங்கள் – என்று கூறுவது போன்று வந்து நின்றான். (ஆடும் அது கண்டு) – இப்படியாக அவன் கூத்தாடும் எழில் கண்டு. (ஏர் ஆர் இளம் முலையீர்) – அந்த கூத்தைக் கண்டும் தங்கள் ஸ்தனங்களின் அழகு கெடாமல் உள்ளவர்கள். (என்னையாரும் எல்லாரும்) – அவனிடம் செல்லாதே என்று என்னைத் தடுத்து எனது தாய்மார்களும் தோழிகளும். (வாராயோ என்றார்க்குச் சென்றேன் என் வல்வினையால்) – இவ்விதம் என்னைத் தடுத்த அவர்களே எனக்கு நல்லது சொல்லும் விதமாக, அனைவரும் கூடி நின்று – இவன் ஆடுவதைப் பார்க்காமல் நீ இதுவரை கெட்டது போதும், இனியாவது வந்து இவனைக் காண்பாய் – என்று அழைத்தனர். (வாராயோ என்றார்க்கு) – பலமுறை அழைத்தும் வராமல் இருப்பவர்களை அழைப்பது போன்று என்னை அழைக்கிறார்கள். தங்கள் கண்களை அவன் மீதிருந்து எடுக்காமல், என்னைப் பாராமல், தங்கள் வாயால் மட்டுமே வாராய் என்று அழைக்கிறார்கள். (சென்றேன் என் வல்வினையால்) – மதிக்கப்பட வேண்டிய தாய்மார்கள் கூறியபடி செய்ய வேண்டும் என்பதால் நானும் அங்கு சென்றேன். (என் வல்வுனையால்) – என்னுடைய மஹாபாவத்தால் சென்றேன். வல்வினை என்று உறுதியான பக்தியே கூறப்பட்டது. யார் ஒருவருக்கு எது விருப்பமாக உள்ளதோ, அது அவர்களுக்கு விரோதியாக மாறுவதே பாவம் என்பதாகும்.

(காரார்மணி நிறமும் கைவளையும் காணேன் நான்) – அவனோடு கலந்து பெற்ற நிறமும், அத்தாலே தரித்த வளைகளும் கண்டிலேன். காரார் மணி நிறக் கண்ணனோடே கலந்து பெற்ற நிறமும், அத்தாலே தரித்த வளைகளும் கண்டிலேன். தன் நிறத்தைத் தான் காரார்மணி நிறம் என்பானென்னென்னில் நீலமணிபோலே ஒருவடிவிருக்கும்படியே என்று அவனை வாய்ப்புலத்தக் கேட்டவாஸனையாலே காரார்மணிநிறம் என்று சிலாகிக்கிறாள். (நான் காணேன்) – எதிர்த்தலையை இக்காட்சி காணக்கடவ நான். அத்தலை இத்தலையாய் நான் காணேன். ஒளிவளையும் மா நிறமும் கொண்டார் என்று எப்போதும் அவன் விரும்பிக் கொள்வது இவையிறே.

விளக்கம் – (கார் ஆர் மணி நிறமும் கை வளையும் காணேன் நான்) – அவனுடன் கலந்து நின்றதால் நான் பெற்ற நிறமும், எனது கைவலையல்களும் காணவில்லை. இவளோ

பொன்னிறம் ஆனவள், அப்படி உள்ளபோது தனது நிறத்தை – கார் ஆர் மணி நிறம் – என்று ஏன் கூறவேண்டும்? நீல மணி போல் ஒரு வடிவிருக்கும்படியே – என்று தாய்மார்களும், தோழிகளும் அவனைக் கூறுவதைக் கேட்ட சொற்களாலும், தனது வாஸனையாலும் தன்னையும் அவன் நிறமாகவே கொள்கிறாள். (நான் காணேன்) – என்னை அடைவதற்கு முன்பு அவனுக்கு உண்டான துன்பங்கள் அனைத்தும், அவன் சென்றபின் எனக்கு ஏற்பட்டது. திருநெடுந்தாண்டகம்(21) – ஒளிவளையும் மாநிறமும் கொண்டார் – என்பதற்கு ஏற்ப, அவன் மிகவும் விரும்புவது நிறத்தையும் வலையல்களையும் அல்லவோ?

(ஆரானும் சொல்லிற்றும் கொள்ளேன்) – ப்ரியஞ்சொல்லுவாரும் ஹிதஞ்சொல்லுவாரும் சொல்லும் வார்த்தைகளும் கொள்ளேன். அதாவது பிரிவாற்றாமைக்கு ஆச்வாஸஹேதுவாக வ்ருத்த கீர்த்தநம்பண்ணி தரிக்கக் கடவதிறே. ஸ்ரீஜநகராஜன் திருமகள், ஏகாக்ஷி ஏககர்ணிகளுக்கு அகப்பட்டவன்று பன்னிரண்டாண்டு நானும் பெருமாளும் எங்கள் மாமனார் மாளிகையிலே ரஸித்தோங்காணுங்கோள் என்று தன் ஆற்றாமையாலே ராக்ஷஸிகளுக்குச் சொல்லி தரித்தாளிறே. அப்படி நான் சொல்ல மாட்டாவிட்டால், பந்துக்கள் சொல்லிற்றுக்கேட்கலாமிறே. அதுவும் மாட்டிற்றிலேன்.

விளக்கம் – (ஆரானும் சொல்லிற்றும் கொள்ளேன்) – எனக்கு நன்மைய் அளிப்பவற்றைக் கூறும் தாய்மார்களும், இன்பம் அளிப்பவற்றைக் கூறும் தோழிகளும் உரைக்கும் சொற்களைக் கேட்காமல் இருந்தேன். பிரிவுத் துன்பம் நீங்க அவர்கள் சேர்ந்து உள்ளபோது, நடந்தவற்றைக் கூறி ஆறுதல் அடையலாம் அல்லவா? சீதை அரக்கிகளிடம் இருந்தபோது, பன்னிரண்டு ஆண்டுகள் நானும் பெருமாளும் எனது மாமனாரின் அரண்மனையில் இன்பமாக இருந்தோம் எனக் கூறி, தனது பிரிவுத் துன்பத்தைச் சற்று தணித்து கொண்டாள். இவ்விதம் நான் செய்யவில்லை என்றாலும், என்னுடைய உறவினர்கள் கூறுவதையாவது கேட்கலாம் அல்லவோ? அதனையும் செய்யவில்லை.

அதுக்கு நிபந்தநமென்னென்னில், (அறிவழிந்து) – கேட்கைக்குப் பரிகரமில்லாமையாலே. (தீராவுடம்போடு) – இப்படி ஆற்றாமை மிக்கால் அச்சேத்யம் அதாஹ்யம் என்னும் ஆத்ம வஸ்துவைப்போலே ஆகவேணுமோ அழியக்கடவதான உடம்பு? (பேதுறுவேன் கண்டிரங்கி) – இப்படி ஆற்றாமையாலே அறிவுகெட்டுக் கிடக்கிற என்னைக் கண்டு இரங்கி. ஆச்ரயத்தில் இரக்கம் குடிபுகுராமல் வார்த்தை சொல்லவிறே இவள் கற்றது. அவளும் ச்ராவ்யமாக வார்த்தை சொல்லக் கற்றாள்காணும். என் தசாவிபாகம் இருந்தபடி. (ஏரார்கிளிக்கிளவி) – கிளியின் பேச்சு–பேய்ப்பாட்டு என்னும்படி காணும் இவள் பேச்சின் இனிமை. (எம்மனை) – இதுக்கு நிபந்தநமென்னென்னில் பெற்ற தாயாகையாலே. அதாவது அதிமாத்ரப்ராவண்யம் ஆகாது என்று நிஷேதிக்குமதுக்கு மேற்பட என் ஸத்தையை அழியவிடாளிறே. (தான் வந்தென்னை) – என் ஆற்றாமை கண்டபடியாலே தானே வந்து.

விளக்கம் – அதையும் செய்யவில்லை. இவ்விதம் கேட்காமல் இருந்ததற்கு என்ன காரணம் என்றால். (அறிவழிந்து) – கேட்பதற்கு ஏற்ற அறிவு இல்லாமல் இருந்தேன். (தீரா உடம்போடு) – பிறவித் துன்பம் அதிகமாக ஏற்படும் இந்த நேரத்தில், அழியக்கூடியது என்று அனைவராலும் சொல்லப்படும் இந்த உடம்பு அழியாமல், ஆத்மாவானது – அச்சேத்யம் அதாஹ்யம் – வெட்டவும் எரிக்கவும் இயலாதது – என்று எவ்விதம் அழிக்க இயலாமல் உள்ளதோ, அதுபோன்று அழியாமல் உள்ளதே. (பேதுறுவேன் கண்டு இரங்கி) – இப்படியாகப் பிரிவுத்துன்பம் காரணமாக, அறிவு தடுமாறி நிற்கும் என்னைப் பார்த்து, என் மீது எனது தாய் இரக்கம் கொண்டாள். இதுவரை இனிமையான சொற்களைக் கூறாமல் என்னைக் கடிந்தபடி இருந்த அவள், எனது நிலை இருந்து கண்டு, இரக்கம் கொண்டு, இரக்கம் நிறைந்த சொற்களை எவ்விதம் கூறுவது என்று கற்றுக் கொண்டாள் போலும். இப்படியாக இருந்தது எனது நிலை. (ஏரார் கிளிக்கிளவி) – என் தாயின் சொற்கள் அழகான கிளியின் பேச்சு போன்று இருந்தது. (எம்மனை) – இவள் இவ்விதம் பேசக் காரணம் என்னவென்றால் – எனது தாயாக இருப்பதாலேயே ஆகும். அவள் பொதுவாக என்னிடம் – அவனிடம் அதிக அன்புடன் உள்ளது சரியல்ல – என்று கண்டிப்பாள். ஆனால் எனது நிலையைக் கண்டு மேலும் என்னை வருத்தி அழிக்க மாட்டாள். (தான் வந்து என்னை) – எனது துன்பம் கண்டு தானாகவே எனது தாய் என் அருகில் வந்தாள்.

(சீரார் செழும்புழுதிக் காப்பிட்டு) – மாயன் தமரடி நீறுகொண்டு அணியமுயலில் மற்றல்லை கண்டீர் இவ்வணங்குக்கு என்றிருக்கும் வைஷ்ணவ ஸ்ந்தாநமாகையாலே, தன் பாதரேணுவை வாங்கி ரக்ஷையாக இட்டாள். (செங்குறிஞ்சி) – என் ஆற்றாமையைக் கண்ட கலக்கத்தாலே தன் பாதரேணுவை எனக்கு ரக்ஷையாக இட்டவளவில் பர்யவஸியாமை, தேவதாந்தரங்களென்றால் அருவருக்கும் குடியாயிருந்துவைத்து, தேவதாந்தரங்களின் காலிலே விழும்படி ஆயிற்றுக்காணும். (செங்குறிஞ்சித் தாரார் நறுமாலைச் சாத்தற்கு) –

ஒரு திருத்துழாய் பரிமாறாத தேவதையாக வேணுமோ பின்னை? (தான் பின்னும் நேராதன ஒன்று நேர்ந்தாள்) – தான் வகுத்த விஷயத்திலே ஓரஞ்ஜலி பண்ணினால் அது ஸாதநத்தில் அந்வயிக்கிற்செய்வதென் என்றிருக்கக்கடவ தான், ஓரஞ்ஜலியுமகப்படப் பண்ணினாள் போலே காணும்.

விளக்கம் – (சீரார் செழும்புழுதிக் காப்பிட்டு) – திருவாய்மொழி (4–6–6) – மாயன் தமரடி நீறு கொண்டு அணிய முயலில் மற்றில்லை கண்டீர் இவ்வணங்குக்கு – என்று சிந்தித்தபடி உள்ள வைஷ்ணவ குலத்தில் பிறந்ததால், எனது தாய் பாகவதர்களின் திருவடித் தூசிகளைச் சேகரித்து, எனக்குக் காப்பாக, என் நெற்றியில் இட்டாள். (செங்குறிஞ்சி) – எனது துன்பத்தைக் கண்டு மனம் கலங்கி பாத தூசிகளை இட்டவள் அத்துடன் நிற்கவில்லை. அதில் மனம் நிறைவு கொள்ளாமல், எம்பெருமானைத் தவிர வேறு ஒரு தெய்வம் என்றாலே அருவருப்பு கொள்ளும் குலத்தில் பிறந்த எனது தாய், குறிஞ்சி மாலை அணிந்த க்ஷுத்ர தெய்வத்தின் காலில் விழுந்தாள். (செங்குறிஞ்சித் தாரார் நறுமாலைச் சாத்தற்கு) – துளசி மாலை அணியாத க்ஷுத்ர தெய்வத்தின் கால்களிலா விழவேண்டும்? (தான் பின்னும் நேராதன ஒன்று நேர்ந்தாள்) – பகவானின் விஷயத்தில் அஞ்சலி செய்து விட்டால், அந்த உபாயம் மூலம் நன்மை எற்படுவது இருக்க, மற்ற தேவதையிடம் சென்று இவ்விதம் செய்து விட்டாளே.

(அதனாலும் தீராதென் சிந்தை நோய்) – பண்டே மிக்கு வருகிற நோவு தேவதாந்தர ஸ்பர்சத்தால் அற மிக்கது. (தீராதென் பேதுறவு) – அறிவு குடிபுகுந்ததில்லை. (வாராது மாமை) – நிறம் வருமென்கைக்கு ஹேதுவின்றிக்கே இருக்கச்செய்தே, நிறம் வந்ததில்லை என்றாளிறே. என் ஆற்றாமை கண்டால் நிறம் தானே வரவேணும் என்றிருக்கிறாள் காணும். (மற்றாங்கே யாரானும் மூதறியும் அம்மானைமார் சொல்லுவார்) – தங்களை அழையாதிருக்கச்செய்தே மூதறிவாட்டிகளானவர்கள் சொல்லுகிறார்கள். (மூதறியும் அம்மானைமார் சொல்லுவார்) – இந்த்ரன் படிகளிருக்கும்படியென் என்று ஒருத்தி ஒருத்தியைக் கேட்க தொண்ணூற்றெட்டு இந்த்ராதிகளை ஸேவித்தேன், இந்த்ரன்படி கேட்கிறாய், வேணுமாகில் சொல்கிறேன் என்றாளிறே. அப்படியே பழையராய், நோய்களுமறிந்து, நோய்க்கு நிதானமுமறிந்து பரிஹாரமும் பண்ணுவித்துப் போரும் மூதறிவாட்டிகள் சொல்லுகிறார்கள். (பாரோர் சொலப்படும் கட்டுப்படுத்திரேல்) – பூமியில் அறிவாரும் அறியாதாருமொக்கக் கட்டுபடுத்தக்கால் நோய்க்கு நிதாநம் தெரியும் என்று சொல்லா நிற்பர்கள். அத்தைச் செய்யுங்கோளென்ன, அதுக்கு ப்ரயோஜனமென்மென்னில், (ஆரானும் மெய்ப்படுவனென்றார்) – பெண்களைத் தீம்புசெய்து முகங்காட்டாதேயிருக்கும் க்ருஷ்ணனேயாகிலும் வெளிப்படுமென்றார்கள்.

விளக்கம் – (அதனாலும் தீராதென் சிந்தை நோய்) – எனது மனநோய் முன்பே அதிகமாக இருந்தது. இப்போது க்ஷுத்ர தெய்வத்தின் தொடர்பால் மேலும் அதிகமாகிவிட்டது. (தீராதென் பேதுறுவு) – எனது அறிவு மீண்டும் என்னிடம் வரவில்லை. (வாராது மாமை) – இவள் இழந்த நிறம் மீண்டும் வந்து விடும் என்று இவள் இருந்தபோது, அது வருவதற்கான காரணமே இல்லாமல் இருந்ததால், நிறம் மீண்டும் வரவில்லை என்றாள். (மற்றாங்கே யாதானும் மூதறியும் அம்மனைமார் சொல்லுவார்) – எனது நிலையைக் கண்டு, நான் அழைக்காமல் இருந்தபோதிலும், அவர்களாகவே நான் உள்ள இடம் தேடி வந்த சில வயதான, அறிவுள்ள கிழவிகள் கூறுகிறார்கள். (மூதறியும் அம்மனை மார் சொல்லுவார்) – அதில் ஒரு கிழவி மற்றவளிடம் – இந்த்ரன் எப்படி இருப்பான் என்று உனக்குத் தெரியுமா – என்று கேட்டாள். அதற்கு மற்றொரு கிழவி – தொண்ணூற்றெட்டு இந்த்ரன்களை நான் கண்டுள்ளேன், என்னிடமா இந்த்ரனைப் பற்றித் தெரியுமா என்று கேட்டாயா? இதோ சொல்லுகிறேன் – என்றாள். அந்தக் கிழவியை போன்று வயது முதிர்ந்தவர்களாக, என் போன்ற பெண்களுக்கு ஏற்படும் மன நோயை அறிந்தவர்களாக, அந்த நோய்க்கான காரணம் அறிந்தவர்களாக உள்ள கிழவிகள் கூறத் தொடங்கினர். (பாரோர் சொலப்படும் கட்டுப்படுத்திரேல்) – இந்தப் பூமியில் உள்ள பல மனிதர்களில், அறிந்தவர்கள் மற்றும் அறியாதவர்கள் ஆகிய அனைவரும், குறி கேட்பதன் மூலம் இந்த நோய் ஏற்படுவதற்கான காரணம் தெரியும் என்று கூறுவதை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள், அதனையே செய்யவேண்டும் என்று கிழவிகள் கூறினர். இந்த முறையால் உண்டாகக்கூடிய பலன் என்ன? (ஆரானும் மெய்ப்படுவன் என்றார்) – பெண்களிடம் வம்பு செய்து விட்டு, தனது முகத்தை காண்பிக்காமல் உள்ள கண்ணனாகவே இருந்தாலும் நமக்கு வெளிப்படுவான் என்றனர்.

(அதுகேட்டு) – கட்டுப்படுத்துங்கோள் என்றார்கள் மூதறிவாட்டிகள். இவர்களும், கட்டுப்படுப்பாராக இசைந்தார்கள். அவ்வளவிலே தன்னை அழையாதிருக்கச் செய்தே, இவர்களிசைவைக் கேட்டுத் தானே வந்து புகுந்தாள் கட்டுவிச்சி. பகவத் விஷயங்களைக் கேட்கைக்கு ருசி உண்டென்றறியுமித்தனையிறே வேண்டுவது ஆசார்யர்கள் தாங்களே வந்து சொல்லுவர்களிறே. முன்புத்தை ஆசார்யர்கள் பகவத் விஷயம் சொல்லும்போது, நாலிரண்டு பேருக்காயிற்றுச் சொல்லுவது. அதுதானும் அவர்கள் படியறிந்தால் சொல்லுவது. அங்ஙனன்றிக்கே, ருசியுடையார் என்று தோற்றினவளவிலே சொல்லுவர் எம்பெருமானார். அப்படிக்காணும் இக்கட்டுவிச்சியும்.

விளக்கம் – (அது கேட்டு) – கிழவிகள் குறி கேட்கவேண்டும் என்று உபதேசம் செய்தனர். அது கேட்டு எனது உறவினர்கள் குறி கேட்க முடிவு செய்தனர். அந்த நேரத்தில், நாங்கள் யாரும் அழைக்காமல், இந்தக் கிழவிகளின் பேச்சைக் கேட்டு, தானாகவே அங்கு ஒரு கட்டுவிச்சி வந்தாள் (கட்டுவிச்சி என்பவள் மறைமுகமாக ஆசார்யனை குறிக்கும்). பகவானைப் பற்றிய விஷயங்களை கேட்பதற்கு ஒருவனுக்கு விருப்பம் உள்ளது என்று அறிந்து கொண்டவுடன், அங்கு ஆசார்யர்கள் தாங்களாகவே வந்து நிற்பார்கள். எம்பெருமானாருக்கு முன்னே இருந்த ஆசார்யர்கள், பகவத் விஷயத்தை மிகவும் சிறந்த சிலருக்கு மட்டுமே, அவர்களது தன்மைகளை ஆராய்ந்து பார்த்து உபதேசித்தனர். ஆனால் எம்பெருமானாரோ, பகவான் மீது ஒருவனுக்குப் ப்ரியம் உள்ளது என்று அறிந்தவுடன் அவனுக்கு ஓடி வந்து உபதேசிப்பார். இது போன்று அல்லவா இந்தக் கட்டுவிச்சி வந்தாள்?

(காரார் குழல் கொண்டை) – கட்டுப்படுத்தினவள் சொல்லும் வார்த்தையிலுங் காட்டில், இவள் மயிர்முடியே இவளுக்கு போக்யமாயிருக்கிறபடி. ஆசார்யர்களுடைய ஆத்ம குணங்களிலுங்காட்டில் தேஹகுணமே உத்தேச்ய மாயிருக்கிறபடி. (கட்டுவிச்சி கட்டேறி) – தேவாவிஷ்டையானாள். அதாவது கொட்டாவி கொள்ளாதே மூரி நிமிராதே செய்தபடி. (சீரார் சுளகில்) – சுளகுக்குச் சீர்மையாவது – பதராறுத்து, மணியும் மணியாக்கிப் பதரும் பதராக்குமதிறே. இச்சுளகும் – தேவதாந்தரங்களாகிற கூளத்தையும் பதரையுமறுத்து, மணியே மணிமாணிக்கமே என்கிற மணியைக் காட்டப்புகுகிற சுளிகிறே. ஆகையால் சீரார்சுளகு. (சில நெல் பிடித்தெறியா) – அவையுஞ்சில நெல்லே என்கிறாள். (வேரா விதிர்விதிரா மெய்சிலிரா) – பகவத்விஷயம் சொல்லப்புக்குத் தான் உடைகுலைபட்டபடி. மொய்த்துக் கண்பனிசோர மெய்கள் சிலிர்ப்ப என்னக்கடவதிறே. முநே வக்ஷ்யாம்யஹம் புத்த்வா ஜ்ஞாதுமேவம் விதம் வரம் என்று ப்ரச்நம் பண்ணின ஸ்ரீவால்மீகி பகவானுக்கு, ஸ்ரீநாரத பகவான் சொல்லுகிறேன் என்றான். அதுக்கு கருத்தென்னென்னில் அங்யபராய் ப்ரக்ருதி ஸத்தரானவாறே சொல்லுகிறே னென்றானிறே. பதார்த்தங்களை உள்ளபடி அறிந்திருக்கிறவன் இனி ப்ரக்ருதி ஸ்தனானவாறே சொல்லுகிறேனென்றது – ப்ரச்நரூபத்தாலே ராமகுணங்களை ஸ்மரித்து, நெஞ்சை உடைகுலையப்பண்ணினானாயிற்று. தெளிந்து நான் ப்ரக்ருதி ஸ்தனானவாறே சொல்லுகிறேன் என்றானாமித்தனையிறே. நினைதொறும் சொல்லுந்தொறும் நெஞ்சிடிந்துகும் என்னுமாபோலே. (கண்டு வணங்கினார்க்கு இத்யாதி) (காமனுடல் கொண்ட தவத்தாற்கு) – தன்னையும் அபிமத விஷயத்தையும் சேர்த்ததுவே குற்றமாகக் காமனை தஹித்த அக்நிவர்ணனாவனிறே ருத்ரன். அவனுக்கு, (உமையுணர்த்த இத்யாதி) – ப்ரஸ்நரூபத்தாலே இப்படிப்பட்ட திருநாமங்களை உடையவன் ஆர்? என்று உமை கேட்க, சிஷ்யாசார்ய க்ரமமறியாத தான், தென்றலும் சிறுதுளியும் பட்டாற்போலே, அவன், அவளைத் திருநாமங்களைச் சொல்லவிட்டுத் தான் கேட்டிருந்தானாயிற்று. (அங்கு ஆரலங்கல் ஆனமையால் ஆய்ந்து) – கேட்டுக் குறுயழியாதேயிருந்தானோவென்னில் முடியுண்ட மாலைபோலே ஓசிந்திருந்தான். திருநாம ப்ரஸங்கத்தாலே வன்னெஞ்சனான ருத்ரன் பட்டபடி கண்டால், (கண்டு வணங்கினார்க்கென்னாங்கொல்) – ஸாக்ஷாத்கரித்தார் எனபடுகிறார்களோ?

விளக்கம் – (கார் ஆர் குழல் கொண்டை) – தனது கூந்தலைக் கட்டுப்படுத்திய அவள் கூறும் சொற்களை விட, அவளது கூந்தலே எனது தாய்க்கு இதமாக இருந்தது. இந்த நிலை, ஆசார்யர்களின் ஆத்ம குணங்களை விட, அவர்களின் தேஹ குணமே ஏற்றதாக இருப்பது போன்றதாகும். (கட்டுவிச்சி கட்டேறி) – தெய்வத்தினால் தூண்டப்பட்டு, கொட்டாவி விடாமல், தன்னை மறந்து நிற்கும் நிலை. (சீரார் சுளகில்) – சுளகு என்றால் முறம் என்பதாகும். முறத்தின் பெருமை எனவென்றால், நெல்லையும் பதரையும் தனித்தனியே பிரிப்பதாகும். இங்கு இந்தக் கட்டுவிச்சி, மற்ற தெய்வங்கள் என்னும் பதரை அறுத்து, பெரிய திருமொழியில் (11–8–8) – மணியே மணி மாணிக்கமே – என்று கூறப்படும் எம்பெருமானைக் காட்டித் தரப்போகிறாள். எனவே சீரார் சுளகு – மேன்மையான் சுளகு – என்றார். (சில நெல் பிடித்து அறியா) – அவற்றை சில நெல் என்று கூறுகிறாள். (வேறா விதிர் விதிரா மெய் சிலிரா) – பகவத் விஷயம் கூறுவதால் கட்டுவிச்சியின் உடல்

நடுங்கியது. பெருமாள் திருமொழியில் (2–9) – மெய்த்துக் கண்பனி சோர மெய்கள் சிலிர்ப்ப – என்றது போல் கட்டிவிச்சியின் நிலை இருந்தது. வால்மீகி நாரதனிடம் – ஜ்ஞாதும் ஏவம் விதம் நரம் – மிகவும் சிறந்தவனாக இந்த உலகில் உள்ளவன் யார் – என்று கேட்டார். அதற்கு நாரதன் – முநே வக்ஷ்யாம்யஹம் புத்த்வா – நான் தெளிந்து கூறுகிறேன் – என்றான். இவ்விதம் நாரதன் ஏன் கூறவேண்டும்? வால்மீகி ஒவ்வொரு குணங்களாகக் கூறி, அவை யாருக்கு உள்ளது என்று கேட்டபடி இருந்தார். ஒவ்வொரு கேள்வியின்போதும் அந்தக் குணங்களுக்கு இருப்பிடம் இராமனே என்று இராமனை எண்ணியபடி நாரதன் மயங்கி நின்றுவிட்டான். நாரதன் வால்மீகியிடம் – எனது மனதை இராமன் தகர்த்துவிட்டான், அத்தகைய மயக்கம் தெளிந்த பின்னர் விடை தருகிறேன் – என்றான். இதனால்தான் – தெளிந்து கூறுகிறேன் – என்றான். இதனைத் திருவாய்மொழி (9–6–2) – நினைதொறும் சொல்லுந்தொறும் நெஞ்சிடிந்துகும் – என்றது காண்க. நான்முகன் திருவந்தாதியில் (78) பரவச நிலையைப் பற்றிக் கூறுவது காண்போம். அந்தப் பாசுரம் கீழே உள்ளது:

கண்டு வணங்கினார்க்கு என்னாங்கொல் காமனுடல்
கொண்ட தவத்தாற்கு உமை உணர்த்த வண்டலம்பும்
தாரலங்கல் நீண்முடியான்றன்பெயரே கேட்டிருந்தங்
காரலங்கல் ஆனமையால் ஆய்த்து.

இதன் பொருளை பெரியவாச்சான்பிள்ளை இங்கு விளக்கியுள்ளார். (காமனுடல் கொண்ட தவத்தாற்கு) – தானும் தனது நாயகியும் சேர்ந்ததற்குக் காரணமானவன் என்பதால் மன்மதனை எரித்த ருத்ரன். (உமை உணர்த்த) – அவனிடம் பார்வதி தனது முகக்குறிப்பால் – இப்படிப்பட்ட திருநாமங்களை உடையவன் யார் – என்ற கேள்வி மூலம் பதிலையும் உணர்த்தினாள். அப்போது சிவன் சிஷ்ய–ஆசார்ய இலக்கணங்களை மறந்து, தென்றல் காற்றும் மழைத்துளியும் தன் மேனியில் பட்டதையும் மறந்து, அவளிடம் எம்பெருமானின் திருநாமங்களைக் கூறும்படிச் சொல்லி, தன்னை மறந்து நின்றான். காமனை எரித்த கல்நெஞ்சம் படைத்த சிவனின் கதியை நேரில் கண்டவர்கள் என்னாவரோ?

(கைமோவா) – பாவநாப்ரகர்ஷத்தாலே விரைகுழவு நறுந்துளவம் மெய்ந்நின்று கமழும் என்கிறபடியே கை திருத்துழாய் நாறுமிறே. (பேராயிரமுடையானென்றாள்) – நாமம் பலவுமுடை நம்பியிறே இப்படி பண்ணினானும். (பேராயிரமுடையானென்றாள்) – ஒன்று தோற்றிற்று, இரண்டு தோற்றிற்று, நாலு தோற்றிற்று, பத்து தோற்றிற்று, நூறு தோற்றிற்று, ஆயிரம் பேர் தோன்றா நின்றதீ என்றாள். (பேர்த்தேயும் காரார் திருமேனி காட்டினாள்) – ச்ரமஹரமான மேகத்தைக் காட்டி வடிவைக் காட்டினாள். காரார் திருமேனி கண்டதுவே காரணமாகவிறே இவள்தான் இப்படிப்பட்டது.

விளக்கம் – இனி கட்டுவிச்சி தான் கண்டறிந்த உண்மைகளை சாடையாகக் கூறத் தொடங்குகிறாள். (கைமோவா) – திருவாய்மொழி (10–6–7) – விரை குழவு நறுந்துளவம் மெய்ந்நின்று கமழும் – என்று கூறுவது போல், எம்பெருமானைப் பற்றியே எப்போதும் நினைத்துள்ளதால், இவளது கைகளில் துளசி மணம் வீசுகின்றது. (பேர் ஆயிரம் உடையான் என்றாள்) – இவளை இவ்விதம் செய்பவன் பெரிய திருமொழியில் (10–8–4) நாமம் பலவும் உடை நம்பி – என்பது போன்று ஆயிரம் நாமங்கள் உடையவன் – என்று கட்டுவிச்சி கூறினாள். இவனது பெயரைக் கண்டுபிடிப்போம் என்றால் ஒன்று வந்து, இரண்டு வந்தது, நான்கு வந்தது, நூறு வந்தது, ஆயிரம் வந்ததும் நிற்கவில்லை. (பேர்த்தேயும் கார் ஆர் திருமேனி காட்டினாள்) – காண்பவர்களின் மனதை, அவர்கள் துன்பத்தில் இருந்து விடுபடச் செய்யவல்ல, நீர் கொண்ட மேகத்தைக் காட்டி, அவனது திருமேனி இந்த நிறமே – என்று கட்டுவிச்சி கூறினாள்.

(கையதுவும் சீரார் வலம்புரியேயென்றாள்) – ஒரு கையிலே ஸ்ரீபாஞ்சஜன்யத்தை உடையவனென்றாள். சந்த்ரோதயம்போலே இருளன்ன மாமேனிக்குப் பரபாகமான ஸ்ரீபாஞ்சஜன்யத்தைச் சொன்னாள். வலம்புரிக்குச் சீர்மையாவது (உண்பது சொல்லில் உலகளந்தான் வாயமுதம்) – உண்ணும்படிச் சொல்லில் அவன் வாயாலே ஊட்ட உண்பது. (கண்படை கொள்ளல் கடல்வண்ணன் கைத்தலத்தே) – அவன் வடிவைக் கடைக்கணித்துக் கொண்டு திருக்கையிலேயாயிற்று இடம் வலம் கொள்வது. ப்ரஸாதத்தைச் சூடிக் கைப்புடையிலே கிடப்பாரைப்போலே. (பெண்படையார் உன்மேல் பெரும்பூசல் சாற்றுகின்றார்) – இவன் பெண்களுக்குத் துறையாயிருக்கும். ஸ்ரீமதுரையிலும் திருவாய்ப்பாடியிலுமுள்ள பெண்கள் கையெடுத்துக் கூப்பிடா நின்றார்கள். (பண்பல

செய்கின்றாய்) – பகவத் விஷயத்திலே ப்ரத்யாஸந்நர் செய்வதும் செய்கிறிலை. அவர்கள் தனியே அனுபவியார்களிறே. (பாஞ்சசன்னியமே) – நீ வந்து சேர்ந்த இடத்துக்குத்தகாது உன் குணம். உன் பிறப்புக்குச் சேருமத்தனை. பாஞ்சஜன்யமிறே. (திருத்துழாய் தாரார் நறுமாலை கட்டுரைத்தாள்) – உபவிபூதி நாதனாக இட்ட தனிமாலையைச் சொன்னாள். தாமத்துளப நீண்முடிமாயன் தனக்கிறே இவள் மடலெடுக்கிறது.

விளக்கம் – (கையதுவும் சீரார் வலம்புரியே என்றாள்) – ஒரு கையில் ஸ்ரீபாஞ்சஜன்யம் என்ற சங்கைக் கொண்டவன் என்றாள். இருளில் சந்த்ரன் உதிப்பது போன்று, இவனது கறுத்த திருமேனியில் வெண்மையான சங்கு உள்ளது. இருள் போன்ற நிறத்துக்கு நிறச்சேர்த்தி போன்ற சங்கைக் கூறினாள். வலம்புரிச் சங்கின் சீர்மை(= மேன்மை) என்ன? கீழே உள்ள பல வரிகள் காண்க:

- நாச்சியார் திருமொழி (7–8) – உண்பது சொல்லில் உலகளந்தான் வாயமுதம் – இந்தச் சங்கு உண்ணும் விதத்தைக் கூறவேண்டும் என்றால், அவன் தனது திருவாயால் ஊட்ட, இது உண்ணுகிறது.

- நாச்சியார் திருமொழி (7–8) – கண்படை கொள்ளல் கடல்வண்ணன் கைத்தலத்தே – உண்ட மயக்கம் தீர அவனது திருக்கரத்தில், அவனது அழகான திருமேனியைக் கடைக்கண்களால் கண்டபடி படுத்துக் கொள்கிறது. நாயகன் கையால் மாலைகள் சூட்ட, அவனது கைகளில் சாய்ந்துள்ள நாயகி போன்று சங்கின் நிலை உள்ளது.

- நாச்சியார் திருமொழி (7–8) – பெண்படையார் உன்மேல் பெரும்பூசல் சாற்றுகின்றார் – இவனது திருவாயில் உள்ள அமிர்தம் பெண்கள் அனைவருக்கும் பொதுவானதாக இருப்பதாகும். ஆனால் இதனை இப்போது, இந்தச் சங்கு மட்டும் பருகுவதைக் கண்ட மதுரா நகரத்திலும், ஆய்ப்பாடியிலும் உள்ள பெண்கள் – இது முறையல்ல – என்று கையைக் காண்பித்து மறுக்கின்றனர்.

- நாச்சியார் திருமொழி (7–8) – பண்பல செய்கின்றாய் – சங்கே. உனக்குப் பண்பாக இல்லாத செயலைச் செய்கின்றாய். பகவத் விஷயத்தில் அடியார்கள் அவனைத் தனியே அனுபவிக்க மாட்டனர். ஆனால் நீயோ இப்படிச் செய்கிறாய்.

நீ இப்போது உள்ள இடத்திற்கு ஏற்காத செயலைச் செய்கிறாய். அதற்குக் காரணம் நீ பஞ்சசனன் என்ற அசுரனின் வயிற்றில் பிறந்ததால் உனது குணமும் பிறப்பும் இவ்விதம் உள்ளது போலும். (திருத்துழாய் தாரார் நறுமாலை கட்டுரைத்தாள்) – தானே உபயவிபூதி நாதன் என்று உணர்த்துவதற்காக சிறந்த துளசி மாலையை அணிந்துள்ளான் என்றாள். பெரிய திருமொழி (6–5–10) – தாமத்துளப நீண்முடிமாயன் – என்று தன்னால் எப்போதும் கூறப்படுபவனுக்கு அல்லவோ இவள் மடல் எடுக்கிறாள்?

கீழ்ச்சொன்னவையடைய ஸ்வகதமாகச் சொன்னாள்.(கட்டுரையா) – அவற்றைத் தன்னிலே சொன்ன அநந்தரம். (நீர் ஏதுமஞ்சேன்மின்) – நீங்கள் ஏதேனும் சிலவென்று பயப்படாதே கொள்ளுங்கோள். தேவதாந்தரஸ்பர்சமில்லை. நீங்கள் அஞ்சாதே கொள்ளுங்கோள் என்கிறாள். (நூம் மகளை நோய் செய்தான் ஆரானுமல்லன்) – இவள் நோவுபடுங்காட்டில் உங்களையும் மறக்க வேணுமோ? உங்கள் வயிற்றிலே பிறந்தாரை அவரதேவதைகளால் நோவப் பார்க்கவொண்ணுமோ? (ஆரானுமல்லன்) – நாய் தீண்டிற்றில்லை.

விளக்கம் – இதுவரை கட்டுவிச்சி, தான் அறிந்த உண்மைகளை தாய்க்கும் மற்றவர்களுக்கும் சைகை முறையிலே உரைத்து வந்தாள். இப்போது அவைகளைத் தனது வாயால் கூறுகிறாள். (கட்டுரையா) – இதுவரை தனக்குள் கூறியவற்றை உரைக்கத் தொடங்கினாள். (நீர் ஏதும் அஞ்சேன்மின்) – இவளை ஏதோ ஒன்று பிடித்துக் கொண்டது என்று நீங்கள் அஞ்ச வேண்டாம். இவளை எந்த க்ஷூத்ர தேவதையும் பிடிக்கவில்லை. ஆகவே நீங்கள் அஞ்சாதீர்கள். (நூம் மகளை நோய் செய்தான் ஆரானுமல்லன்) – இவள் இப்படியாக மனநோயினால் பாதிக்கப்பட்டவுடன் உங்களை நீங்களே மறந்து விட்டீர்களா? உங்கள் வயிற்றிலே பிறந்த இவளை ஏதேனும் க்ஷூத்ர தேவதை தீண்டவும் இயலுமா?

(அறிந்தேன் அவனை நான்) – ஸ்வயத்நத்தாலே காணப்புக்கு யதோ வாசோ நிவர்த்தந்தே என்று மீண்ட வேதம் போலன்றியே, அவன் காட்டின வெளிச்செறிப்பாலே அவனைக் கண்ட நான் அறிந்தேன். (கூரார்வேல் கண்ணீர்) அறிந்தாளாகில் இவள் ஆரென்று தலைக்கட்டப் புகுகிறாளென்று சொல்லி எல்லாருமொக்கத் தன்னை கூர்க்கப் பார்த்துக்கொண்டு நின்றவர்களை ஸம்போதிக்கிறாள். (உமக்கறியக் கூறுகேனோ) – இவளுடைய நோய்க்கு தேவதாந்தரங்களின் காலிலே விழும்படி கலங்கியிருக்கும் நீங்களுங்கூட அறியும்படி வார்த்தை சொல்லவோ?

விளக்கம் – (அறிந்தேன் அவனை நான்) – தங்களது முயற்சியால் அவனைக் காண முயன்ற வேதங்கள் – யதோ வாசோ நிவர்த்தந்தே – சொல்லும் மனமும் திரும்புகின்றன – தோல்வி அடைந்து திரும்பியது போன்று நான் செய்யவில்லை. அவன் எனக்கு அளித்த ஞானம் கொண்டு அவனை நான் கண்டுகொண்டேன். (கூரார்வேல் கண்ணீர்) – அங்கிருந்த அனைவரும் இவள் யார் என்று கண்டுபிடித்துவிட்டாள், அதனை இப்போது கூறி விடுவாள் என்று புரிந்துகொண்டு, தங்கள் கண்களையும் காதுகளையும் கூராக்கிக் கொண்டு, கட்டுவிச்சியையே பார்த்தபடி நின்றனர். அவர்களிடம் கூறத் தொடங்கினாள். (உமக்கறியக் கூறுகேனோ) – இவளுடைய நோய் நீங்கவேண்டும் என்பதற்காக உங்கள் அறிவிழந்து க்ஷுத்ர தேவதைகளின் கால்களில் விழுந்தீர்கள். இப்படி அறிவற்ற நீங்களும் புரிந்துகொள்ளும்படிக் கூறுகிறேன்.

(ஆரால் இவ்வையம் அடியளப்புண்டதுதான்) – பூமிப்பரப்பைத் தன் காற்கீழ் இட்டுக்கொண்டவர் ஆர்? ஆரால் என்கையாலே ஈபாவஞ்செய்து அருளாலளிப்பாரார் என்றால், அவன் என்ன வேண்டும் ப்ரஸித்தியை உபஜீவித்து நின்று சொல்லுகிறாள். (இவ்வையம்) மண்ணையிருந்து துழாவி வாமனன் மண்ணிதுவென்னும் பூமிப்பரப்பையடையத் துழாவியிருந்து, அவன் அடிச்சுவடு மோந்தவரைப்போலே சொல்லும். விச்வாமித்ரமஹர்ஷி யாகம் காக்கப் பெருமாள் எழுந்தருளுகிறபோது – ருஷியே. இங்கே தோற்றுகிற ஆச்ரமம் ஏது? – என்று கேட்டருள, ஸ்ரீவாமனன் எழுந்தருளியிருந்து தபஸ்ஸு பண்ணின ஸித்தாச்ரமம், அவன் எழுந்தருளியிருந்து போன இடம் என்று நான் இம்மண்ணை மோந்துகொடு கிடப்பன் – என்றானிறே. அப்படியே இவ்வையமென்று அடிச்சுவடு தோன்றுகிறபடி. (ஆரால் இவ்வையம் அடியளப்புண்டது தான்) – இத்தால் புவனியெல்லாம் நீரேற்றளந்த நெடிய பிரான் அருளாவிடுமே என்னுமாபோலே தன்னுடைமையை இரந்து பெறுமவனன்றோ? இவளை விட்டுவைக்குமோ? என்றபடி. மண்ணை இரந்து அளந்து கொள்ளுமவன் பெண்ணை நோவுபட விட்டு வைக்குமோ? என்றபடி.

விளக்கம் – (ஆரால் இவ்வையம் அடியளப்புண்டதுதான்) – இந்தப் பூமி முழுவதையும் தனது திருவடிகளின் கீழ் வைத்தவன் யார்? ஆரால் என்ற பதத்தை ஏன் உபயோகித்தாள்? திருவாய்மொழி (2–2–2) – ஈ பாவம் செய்தருளால் அளிப்பார் ஆர் – என்ற கேள்வி கேட்கும்போது, அவனே என்று பதிலளிக்கும் விதமாக, ஆரால் என்று கேட்டாள். (இவ்வையம்) – திருவாய்மொழி (4–4–1) – மண்ணையிருந்து துழாவி வாமனன் மண்ணிதுவென்னும் – என்று கூறியது போன்று, இவள் பூமிப்பரப்பு முழுவதும் ஆராய்ந்து, முகர்ந்து பார்த்து, இந்த மண் வாமனனின் திருவடிகள் பட்ட மண் என்று மண்ணின் வாசனை மூலம் கூறுவாள். விச்வாமித்ரரின் யாகத்தைக் காக்க இராமன் வந்தபோது, அங்கு இருந்த ஓர் ஆச்ரமத்தைக் கண்டான். அவன் விச்வாமித்ரரிடம் – முனிவரே, இங்கு உள்ள ஆச்ரமம் யாருடையது – என்றான். அதற்கு விச்வாமித்ரர் இராமனிடம் – இந்த இடம் வாமனன் எழுந்தருளி இருந்து தவம் செய்த இடமாகும், அவன் இங்கு இருந்தான் என்ற காரணத்தினால் நான் இந்த மண்ணின் வாசத்தையே சுவாசம் செய்தபடி இங்கேயே உள்ளேன் – என்றார். ஆழ்வார் போன்றும், விச்வாமித்ரர் போன்றும் இவள் அவனது திருவடித் தடத்தை அறிந்தவளாகக் கூறுகிறாள். (ஆரால் இவ்வையம் அடியளப்புண்டதுதான்) – திருவிருத்தத்தில் (69) – புவனியெல்லாம் நீரேற்றளந்த நெடிய பிரான் அருளாவிடுமே – என்று கூறியது போன்று, இவன் தனக்கு உரிமையாக உள்ள பொருள் எதுவாக இருந்தாலும் யாசித்துப் பெற்றுக் கொள்வான் அல்லவோ? அப்படிப்பட்ட இவன், தனக்கு மிகவும் உரிமையான பரகாலநாயகியை விடுவானோ? மண்ணையே அளந்து பெற்றவன், அதனை விட உயர்ந்த பெண்ணைத் தவிக்க விடுவானோ?

(ஆரால் இலங்கை பொடிபொடியா வீழ்ந்தது) – வரபலபுஜபலங்களாலே மிக்க இலங்கை யாராலே துகளாயிற்று? (ஆரால்) – தங்கள் தரமறியாதே வரத்தைக் கொடுத்து அவனாலே குடியிருப்பிழந்து கழுத்தும் கப்படமுமாய்க் கூப்பிட்டுத் திரிந்த ப்ரஹ்மாதிகளாலேயோ? புதுக்கும்பிடாகையாலே செய்வதறியாதே செய்தபடி. இத்தால், ஒருத்திக்காக உண்ணாதுறங்காது ஒலிகடலையூடறுத்து இப்படி அரியனசெய்து கைக்கொள்ளுமவன் இவளை நோவுபட்டிருக்க விடான் என்றபடி. (மற்றாராலே கல்மாரி காத்ததுதான்) –

பசிக்கோபத்தாலே இந்த்ரன் வர்ஷிக்க, அவ்வர்ஷம் நோக்கப்பட்டது ஆராலே? அவ்வர்ஷத்திலே அகப்பட்ட இடையராலும் பசுக்களாலுமோ? இத்தால் தன்னால் வந்த நலிவும் தானே பரிஹரிக்கும் என்றபடி.

விளக்கம் – (ஆரால் இலங்கை பொடிபொடியா வீழ்ந்தது) – அதிகமான வரங்கள் மூலம் பெற்ற பலம், புஜங்களின் பலம் ஆகியவை நிறைந்த இலங்கை பொடிப்பொடியானது யாரால்? (ஆரால்) – இராவணன் ப்ரம்மன் முதலான தேவர்களிடம் பல வரங்கள் கேட்டான். இவனுக்கு வரங்கள் அளித்தால், அந்த வரங்கள் கொண்டு நம்மையே தாக்கினால் நம்மால் சமாளிக்க இயலுமா என்று தங்களது வலிமை குறித்து ஆராயாமல், அவனுக்கு வரங்கள் அளித்தனர். தன் பின்னர், அந்த இராவணனாலேயே தங்கள் இருப்பிடம் இழந்து, கழுத்து அறுபடாமல் தப்பித்து, கட்டியிருந்த ஆடையுடன் எம்பெருமானைத் தேடி அலைந்தனர். இப்படிப்பட்ட ப்ரம்மன் முதலான தேவர்கள் மூலமாகவா இலங்கை அழிந்தது? புதியதாகத் தன்னைக் கும்பிடுபவர்களைக் கண்டு மதிமயங்கி உதவுபவர்கள் போன்று தேவர்கள் செய்தனர், அதன் பின்னர் என்ன செய்வது என்று அறியாமல் திகைத்தனர். இப்படியாக, நாச்சியார் திருமொழி (11–7) கூறுவது போன்று – உண்ணாது உறங்காது ஒலி கடலை ஊடறுத்து – என்றபடி, ஒரு பெண்ணிற்காக இத்தனை பாடுபட்டவன், இவளைத் தவிக்க விடமாட்டான் என்று கருத்து. (மற்றாராலே கல்மாரி காத்ததுதான்) – தன்னுடைய உணவு பறிக்கப்பட்டதால் உண்டான பசிக்கோபம் காரணமாக இந்த்ரன் கல்மழை பிழிந்தான். அந்த மழையிலிருந்து அனைவரையும் காப்பாற்றியது யார்? அந்த மழையில் அகப்பட்டுத் தவித்தபடி நின்ற இடையர்களும் பசுக்களுமா தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொண்டன? ஆக, தன்னால் ஒருவருக்கு ஏற்படும் துன்பத்தைத் தானே வந்து துடைப்பான் என்று கருத்து (க்ருஷ்ணன் இந்த்ரனுக்கு பூஜை செய்யவேண்டாம் என்று தடுத்ததால் அல்லவா இந்தத் துன்பம் ஏற்பட்டது? தன்னால் வந்த துன்பத்தைத் தானே கோவர்த்தன மலையை எடுத்துக் காத்தான் என்று கருத்து).

(ஆழிநீர் ஆரால் கடைந்திடப்பட்டது) – அப்ரமேயோ மஹோததி: ஒருவராலும் பரிச்சேதிக்க ஒண்ணாதபடி பேராழத்தையுடைத்தாயிருக்கிற ஸமுத்ரத்தைக் கடைந்து, கடைந்து கலக்குறுத்து உடலுட்புகுந்து நின்றூறலறுத்தவர் என்கிறபடியே அதில் நற்சீவனான அம்ருதத்தைக் கொண்டார் ஆர்? கடலைக் கடையவென்று உபக்ரமித்துக் கை வாங்கின தேவர்களாலும் அஸுரர்களாலுமன்றிறே. அன்று தேவரசுரர் வாங்க இத்யாதியிறே. தேவர்களும் அஸுரர்களும் கைவாங்கின பின்பிறே கடலைக் கடையப்புக்கது. இத்தால் பல வடிவைக் கொண்டு உடம்பு நோவ ப்ரயோஜநாந்தர பரர்க்குமகப்படக் கார்யம் செய்யுமவன், அமுதில் வரும் பெண்ணமுதை நோவுபட வைக்குமோ என்றபடி. விண்ணவர் அமுதுண அமுதில் வரும் பெண்ணமுதுண்டவனிறே.

விளக்கம் – (ஆழிநீர் ஆரால் கடைந்திடப்பட்டது) – இராமாயணம் கூறுவது போன்று – அப்ரமேயோ மஹோததி: – ஆழம் காண இயலாத ஸமுத்ரம் – என்னும்படி, யாராலும் ஆழம் காண இயலாதபடி உள்ள கடலைக் கடைந்தது யார்? நாச்சியார் திருமொழி (10–9) கூறுவது போன்று – கடைந்து கலக்குறுத்து உடலுள் புகுந்து நின்று ஊறலறுத்தவர் – என்னும்படி உடல் என்ற கடலில் புகுந்து அதில் உள்ள ஜீவன் என்னும் அமிர்தத்தைத் தேடிக்கொண்டவன் யார்? கடலைக் கடையவேண்டும் என்று தொடங்கிய பின்னர், அது இயலாமல் நின்ற தேவர்களும் அசுரர்களுமா கடலைக் கடைந்தனர்? நம்மாழ்வார் திருவாய்மொழியில் (7–1–7) – அன்று தேவர் அசுரர் வாங்க – என்றது போன்று, அவர்கள் கை விட்டபின்னர் அல்லவோ இவன் கடலைக் கடைய வந்தான்? இப்படியாகத் தன்னைப் பெற முயற்சிக்காமல் அமிர்தம் பெறுவதில் குறியாக இருந்த தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் உதவ, பல வடிவங்கள் எடுத்துத் தன்னை வருத்திக் கொண்டான். அப்படி உள்ள இவன், பெரியதிருமொழி (6–1–2) கூறுவது போன்று – அமுதில் வரும் பெண் அமுதை – மஹாலக்ஷ்மி போன்ற பரகாலநாயகியைக் கைவிடுவானோ? பெரியதிருமொழி (6–1–2) – விண்ணவர் அமுதுண அமுதில் வரும் பெண்ணமுதுண்டவன் – அல்லவோ இவன்?

(அவன்காண்மின்) – இவ்வபதாநங்களெல்லாம் செய்தவனுக்கு உங்கள் மகள் நோவுபடுமித்தனையல்லது வேறு தேவதாந்தரங்களுக்கு நோவுபடுமோ? (ஊராநிரை மேய்த்து) – தங்களுக்குப் பசுக்கள் அளவு பட்டு ஊராநிரை மேய்க்கிறானன்றிறே. உங்கள்தம் ஆநிரையெல்லாம் வந்து புகுதரும்போது என்று கண்ணெச்சிலாம்படியிறே இவர்கள் கோஸம்ருத்தியிருப்பது. அப்படியிருக்கச் செய்தேயும், கோரக்ஷணத்திலே அந்வயித்தவனாகையாலே ஊராநிரை மேய்க்கும். ஒருவன் ஒரு ரக்ஷணத்திலே உத்யுக்தனானால் ரக்ஷ்யவர்க்கம் பெற்றதில் பர்யாப்தனாகானிறே. அப்படியே ஊராநிரையையெல்லாம் மேய்க்கும்.

விளக்கம் – (அவன் காண்மின்) – அவனது வீட்டில் பசுக்கள் குறைவு என்பதால் அடுத்தவர்களின் பசுக்களையும் மேய்க்கிறான் என்று கூற முடியாது. காரணம், பெரியதிருமொழி (10–4–8) கூறுவது போன்று – உங்கள்தம் ஆநிரையெல்லாம் வந்து புகுதருபோது – என்னும்படி, காண்பவர்கள் கண் வைக்கும்படியாக அல்லவா நந்தகோபரின் வீட்டில் பசுக்கள் இருந்தன? ஆயினும் பசுக்களைக் காப்பதற்காகவே பிறந்தவனாகையால், ஊரிலுள்ள அனைத்துப் பசுக்களை மேய்த்தான் என்று கருத்து. ஒருவன் காக்கும் செயலில் சிறந்தவன் என்றால் தன்னால் காக்கப்படும் பொருள்கள் எத்தனை பெற்றாலும், மனம் நிறைவு கொள்ளாமல் இருப்பது போன்று, இவன் ஊரில் உள்ள அனைத்துப் பசுக்களையும் மேய்த்தான்.

(உலகெல்லாமுண்டுமிழ்ந்தும்) – ப்ரளயத்தில் அகப்பட்ட லோகங்களையெல்லாம் திருவயிற்றிலே நோவுபடாமே வைத்து, அங்கே நெருக்குண்ணாதபடி வெளிநாடு காண உமிழ்ந்தும், ஊராநிரை மேய்த்து உலகெல்லாமுண்டுமிழ்ந்தும் என்று ஊராநிரை மேய்த்ததோடு உலகெல்லாமுண்டுமிழ்ந்ததோடு வாசியின்றியே இருக்கிறது காணும் இவர்க்கு. (ஆராத தன்மையனாய்) – ரக்ஷ்யவர்க்கத்தையெல்லாம் ரக்ஷித்தாலும், தான் ஒன்றும் செய்யாதானாயிருக்கிறபடி. அதாவது – தன்னை விச்வஸித்து உடன் கிடந்தவனை மடிதடவினவன் நெஞ்சாறல் படுமாபோலேயாயிற்று, ரக்ஷ்யவர்க்கத்தை நோவுபடக்கொடுத்து நோக்குகையாவது என்னென்புது என்று அவன் புண்பட்டிருக்கும்படி. ஸ்ரீதண்டகாரண்யத்தில் ருஷிகள் ராக்ஷஸராலே நோவுபட்ட சரீரங்களை ஏஹி பஸ்ய சரீராணி என்று காட்டி அந்யாயப்பட, ஒரு ரக்ஷகனுளன் என்று சொல்லிப் பட்ட நோவால் வந்த லஜ்ஜையிறே உங்களுக்கு, கர்ப்ப பூதாஸ் தபோதநா: என்று உங்கள் கையிலே உங்களை ரக்ஷித்துக் கொள்ளும் கைம்முதலுண்டாயிருக்கச் செய்தே, கர்ப்பபூதரைப்போலே உங்களுடைய ரக்ஷணத்துக்கு நீங்கள் கடவி கோளன்றியிலே இருக்கிற உங்களுக்கு வந்த லஜ்ஜை ஸஹிக்கலாம், நோவுபடுவிகோளும் நீங்களேயாய், வந்து அறிவிப்புதிகோளும் நீங்களேயாம்படி பிற்பாடரானோமென்பதாய்க்கொண்டு லஜ்ஜை நம்மால் பொறுக்கவொண்ணாது – என்றானிறே. அப்படியே இங்கு ஆராத தன்மையனாய். (அங்கு) – ரக்ஷணமில்லாத தேசத்திலே பிறக்கும் பரிமாற்றம். (ஒருநாள்) – காலக்ருத பரிணாமமுள்ள தேசத்திலே பிறந்தபடி கேட்கலாகாதோ? (ஆய்ப்பாடி) – பரமபதம்போலே காணும் திருவாய்பாடியும். அவர்களுக்கு ஜன்மவ்ருத்தமில்லாதாற்போலே இவர்களுக்கும் ஜந்மவ்ருத்தமில்லாதபடி. (சீரார்கலையல்குல்) – யசோதைப் பிராட்டி சாத்தின பரியட்டத்துக்கு ஸம்பத்து எங்ஙனே வந்ததென்னில், பிள்ளை சீறாமைக்காக அழுக்குக்கழித்து ஒப்பித்திருக்கும், இவனுடைய பற்றுமஞ்சளும் கண்ணும் மையுமாயிருக்குமலங்காரம். அல்குலுக்குச் சீர்மையாவது – எடுத்துக்கொள்ளில் மருங்கையிறுத்தியுடும் – என்கிறபடியே க்ருஷ்ணனையெடுத்து ஒசிந்த இடை. முற்காலத்திலே பெரியதிருநாள் ஸேவித்த முதலிகள் – திருநாள் ஸேவித்த இரட்டை – என்று மேலைத்திருநாள் வருமளவும் அவ்விரட்டையை மடித்துக் கொடியிலேயிட்டுவைத்துப் பார்த்துப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். (சீரடி) – மடியிலேயிருந்து இவன் தீம்பு செய்தால் தள்ளுமிறேயிழிய, தள்ளினால் இவன் கட்டிக்கொள்ளும் கால், அரிசினத்தால் ஈன்ற தாய் அகற்றிடினும் மற்றவள் தன் அருள் நினைந்தே அழுங்குழவி என்னக்கடவதிறே. (செந்துவர்வாய்) – காலைக் கட்டி கொண்டவாறே இவள் உதறுமே, உதற உதற இவன் கட்டிக்கொள்ளுமிறே, கட்டிக்கொண்டவாறே ஸ்மிதம் பண்ணும் வாய். (வாரார் வனமுலையாள்) – ஸ்மிதம் பண்ணினவாறே கோபம் மாறினாளென்று முலையிலே அபேக்ஷை பண்ணுமிறே. பசல்கள் அலையாமைக்கு ஔஷதம் இட்டுவைப்பாரைப்போலே கச்சையிட்டு ஆர்த்துவைக்குமிறே, வல்லையாகில் விடுத்துக்கொள்ளுகாண் என்னும் முலை.

விளக்கம் – (உலகு எல்லாம் உண்டு உமிழ்ந்து) – ப்ரளயத்தின் போது துன்பத்தில் அகப்பட்ட உலகங்கள் அனைத்தையும் தனது வயிற்றில் துன்பம் நெருங்காமல் வைத்துக் கொண்டான். அவை நீண்டகாலம் தனது வயிற்றில் நெருக்கிக் கொண்டு இருப்பதைப் பார்த்து பொறுக்க முடியாமல், வெளியில் உமிழ்ந்தான். இங்கு, மாடுகளை மேய்ப்பதும், உலகத்தை வயிற்றுக்குள் வைத்து உமிழ்வதும் ஒரே போன்று, சுலபமான செயலாக வேறுபாடு இல்லாமல் கட்டுவிச்சிக்கு உள்ளது என்று கருத்து. (ஆராத தன்மையனாய்) – காப்பாற்றப் படவேண்டிய அனைத்தையும் காப்பாற்றிய பின்னரும், தான் ஏதும் செய்யவில்லை என்று நினைத்தபடி உள்ளான். அவன் தனது மனதில் – என்னை முழுவதுமாக நம்பிய ஜீவன்களை, ப்ரளயகாலத்தில் துன்பப்படவைத்துவிட்டு, காலம் கடந்து காப்பாற்றியதில் என்ன பெருமை உள்ளது – என்று மனம் புண்பட்டபடி இருப்பவன் ஆவான். தன்னையே நம்பி, தனது மடியில் உறங்கும் ஒருவனது மடியில் உள்ள் பொருளைக் களவு செய்தவன், பின்னர் எப்படித் துடிப்பானோ அது போன்று இவன் துடிக்கிறான். தண்டகாரண்ய வனத்தில், அரக்கர்களால் துன்பப்பட்ட உடல்களை முனிவர்கள் இராமனிடம் – ஏஹி பச்ய சரீராணி – எங்கள் உடம்புகளைக் காண்பாயாக –

என்று முறையிட்டனர். இதனைக் கண்ட இராமன் அவர்களிடம் – நீங்கள் நம்மைக் காக்க ஒருவன் உள்ளான் என்று நம்பினீர்கள். அவன் வந்து காப்பாற்றாமல் துன்பப்பட்டபோது, உங்களது நிலை கண்டு வெட்கம் கொண்டீர்கள். கர்ப்ப பூதாஸ் தபோதநா: என்னும்படி கர்ப்பத்தைப் பத்திரமாகப் பாதுகாக்கும் தாய்போன்று உங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் வல்லமையாகிய தவம் என்ற வலிமை உங்களிடம் இருந்த்து. ஆயினும், உங்கள் ஸ்வரூபம் கருதி அவ்வாறு செய்யாமல் நின்று, பின்னர் துன்பம் அடைந்ததைக் கண்டு வெட்கம் கொண்டீர்கள். அந்த வெட்கத்தையும் நீங்கள் பொறுத்துக் கொண்டீர்கள். ஆனால், நீங்கள் என்னிடம் வந்து, நீங்கள் அடைந்த துன்பத்தை நீங்களே சொல்லுவதைக் கேட்டு எனக்கு உண்டாகும் வெட்கம் பொறுக்க இயலாமல் உள்ளது – என்றான். இவ்விதம் பொறுத்துக் கொள்ள இயலாதவனாக எங்கு இருந்தான்? (ஆங்கு) – ஆபத்து வரும் காலங்களில் வந்து காப்பாற்ற வேண்டிய அவசியம் இல்லாத இடத்தில் இருந்து கொண்டு. (ஒருநாள்) – மாற்றங்கள் பல அடையும் இந்த உலகில் இவன் அவதரித்துச் செய்த செயல்களைக் கேளுங்கள். (ஆய்ப்பாடி) – ஆய்ப்பாடியும் பரமபதம் போன்றது எனக் கூறலாம். எப்படி? நித்யஸூரிகளுக்கு பிறப்பால் உண்டாகும் ஏற்ற தாழ்வுகள் இல்லை என்பது போன்று, ஆய்ப்பாடியில் உள்ளவர்களுக்கும் ஆகும். (சீரார்க்கலையல்குல்) – யசோதையின் ஆடைகளுக்கு ஏற்றமென்ன? கண்ணனின் திருமேனியில் பூசப்படும் மஞ்சள், அவன் கண்களில் தீட்டப்படும் மை ஆகியவை இவள் புடவையில் ஒட்டிக் கொண்டிருப்பதே ஏற்றமாகும். அவையே இவளது ஆடைக்கு அலங்காரம் போன்றுள்ளது. தான் அழுக்காக ஆடை அணிந்தால் கண்ணன் கோபித்துக் கொள்வான் என்று தனது புடவையில் உள்ள அழுக்கை நீக்கிக் கொள்வாள், ஆனால் சிறிது நேரத்திலேயே மீண்டும் அவற்றைக் கண்ணன் அழுக்கேற்றிவிடுவான். இடுப்புக்கு உள்ள மேன்மை என்ன? பெரியாழ்வார் திருமொழியில் (1–2–9) கூறப்பட்டது போன்று – எடுத்துக்கொள்ளில் மருங்கை இறுத்திடும் – என்னும்படி, கண்ணனை எடுத்து அமர்த்திக் கொள்வதற்கு ஏற்றபடி இருப்பதே யசோதையின் இடுப்புக்கு உள்ள மேன்மையாகும். முற்காலத்தில், பெரியதிருநாள் ஸேவித்த பெரியவர்கள், அந்தத் திருநாளிற்குக் கட்டிக் கொண்டு போன ஆடைகளை – இவை திருநாள் கண்ட ஆடைகள் – என்று பத்திரமாக மடித்து வைத்து, அவற்றை அவ்வப்போது கண்டு வணங்கியபடி இருப்பர். இது போன்றே யசோதையின் ஆடைகளும் இருந்தன. (சீரடி) – யசோதையின் திருவடிகளும் மேன்மை பெற்றவை. எப்படி? தனது மடியில் கண்ணனை வைத்துள்ளபோது, அவன் ஏதேனும் வம்பு செய்வான், அப்போது யசோதை கோபம் கொண்டு அவனைத் தரையில் விட்டுவிடுவாள், உடனே கண்ணன் அழுதபடி இவள் கால்களைக் கட்டிக் கொள்வான், அப்படிப்பட்ட மேன்மை உடையது யசோதையின் திருவடிகள். பெருமாள் திருமொழி (5–1) – அரிசினத்தால் ஈன்ற தாய் அகற்றிடினும் மற்றவள் தன் அருள் நினைந்தே அழும் குழவி – என்றது காண்க. (செந்துவர்வாய்) – கண்ணன் யசோதையின் கால்களைக் கட்டிக்கொள்ள, அவள் உதறுவாள். இவ்விதம் அவள் உதற உதற இவன் மேலும் இறுக்கமாகக் கட்டிக் கொள்வான். இதனைக் கண்டு அவள் தனது அழகான வாய் திறந்து சிரிப்பாள். (வாரார் வனமுலையாள்) – யசோதை சிரிப்பதைக் கண்ட கண்ணன், இவளுக்குக் கோபம் நீங்கி விட்டது என்று எண்ணி, தாய்ப்பால் பருக விருப்பம் கொள்வான். குழந்தைகள் அதிகமாக உண்ணக்கூடாது என்பதற்காக, இனிப்பில் சிறிது மருந்து கலந்து வைப்பது போன்று, இவள் தனது ஸ்தனங்களைக் கச்சை கொண்டு கட்டி வைத்திருப்பாள். அவளது ஸ்தனங்கள் கண்ணனிடம் – முடிந்தால் அவிழ்த்துக் கொள்வாய் – என்னும்படி இருக்கும்.

(மத்தாரப் பற்றிக்கொண்டு) – இவனோடு அலைபொருது காலம் போக்கவொண்ணாதே, கார்ஹஸ்த்யதர்மம் அனுஷ்டிக்கவேணுமிறே. குார்ஹஸ்த்ய தர்மம் இவள்தானே அனுஷ்டிக்கும்படி அளவுபட்டிருக்குமோ என்னை – இவன் அமுது செய்யும் த்ரவ்யமானபடியாலே தானே கைதொட்டுக் கடைய வேண்டியிருக்கும். ஜாத்யுசித தர்மமாகையாலும் தானே செய்யவேண்டியிருக்கும். ஐச்வர்யமுண்டென்றால் ஸந்த்யாவந்தநாதிகளுக்கு ஆளிடுவாரில்லையிறே. (மத்தாரப் பற்றிக்கொண்டு) – தயிர்த்தாழியிலே மத்தை நாட்டி இரண்டிழுப்பு இழுத்தவாறே இளைத்து, ஸௌகுமார்யத்தாலே தன்னாலே கடையவொண்ணாமே பிடித்துக் கொண்டு நிற்கும் நிலை. (ஏராரிடை நோவ) – இவளிடைக்கு அழகு க்ருஷ்ணன் எப்போதுமிருக்குமிடை என்றிறே. (எத்தனையோர் போதுமாய்) – கிழக்கு வெளுத்தவாறே தயிர் கடையவென்று புக்கு அஸ்தமித்தாலும் தலைக்கட்டாது காணும் இவள் ஸௌகுமார்யம். (சீரார் தயிர் கடைந்து) – தயிருக்குச் சீர்மையென்னென்னில், கடைவதுக்கு முன்னே இவனெச்சில் பட்டு, கடைகிறபோது இவனெச்சில் பட்டு, கடைந்து சமைந்தால் இவனெச்சில் படுமதிறே.

விளக்கம் – (மத்தாரப் பற்றிக் கொண்டு) – இந்தக் குழந்தையுடன் நேரத்தைக் கடத்த முடியாது. தனது வீட்டுவேலைகளைச் செய்ய வேண்டும் அல்லவா? இவளது வீட்டில் இவளேதான் வேலை செய்ய வேண்டுமோ, வேலையாட்கள் இல்லையா என்ற கேள்வி

எழலாம். இவளது வீட்டில் வேலைக்காரர்கள் உண்டு, ஆனால் கண்ணன் அமுது செய்யப் போவதால் தனது கையால் தொட்டு, தானே தயிர் கடைகிறாள். வீட்டில் செல்வம் இருக்கிறது என்பதால் சந்த்யாவந்தனம் போன்ற கர்மங்களை வேறு ஆள் வைத்தா செய்யமுடியும்? (மத்தாரப் பற்றிக் கொண்டு) – தயிர் கடையும்போது அந்தப் பானையில் மத்தை நிறுத்தி, இரண்டு முறை கயிறை இழுத்தவுடன், மென்மையான உடல் சோர்ந்து, மேலும் கடைய முடியாமல் மத்தை ஆதரவாக பற்றி நிற்கிறாள். (ஏரார் இடைநோவ) – இவளுடைய இடுப்புக்கு அழகு என்பது எப்போதும் அங்கு கண்ணன் அமர்ந்து இருப்பதே ஆகும். (எத்தனையோர் போதுமாய்) – இவளது திருமேனி மிகவும் மென்னையானது, ஆகையால் கிழக்கு வெளுத்து சூரியன் உதிக்கும்போது தயிர் கடையத் தொடங்கிய இவள், சூரிய அஸ்தமனம் ஆன பின்னரும் கடைந்து கொண்டே இருக்கிறாள். (சீர் ஆர் தயிர் கடைந்து) – சீர் ஆர் தயிர் என்பதன் மூலம் தயிருக்கு என்ன சிறப்பு என்ற கேள்வி எழலாம். கடைவதற்கு முன்னால் கண்ணனது எச்சில் பட்டு, கடையும் போதும் கண்ணனது எச்சில் பட்டு, கடைந்த பின்னரும் கண்ணனின் எச்சில் படுவதே சிறப்பு.

(வெண்ணெய் திரண்டதனை) – கடைந்ததாகில் வெண்ணெய் திரண்டதனை என்ன வேணுமோ? ஆயிருக்கச்செய்தே திரண்டதனை என்னும்போது தைவயோகத்தாலே இவன் நினைவைப் பார்த்துத் தானே திரண்டதுபோலே. ஈட்டிய வெண்ணய் உண்டானிறே இவன்தான்.

விளக்கம் – (வெண்ணை திரண்டு அதனை) – தயிர் கடைந்தால் வெண்ணெய் தானாகவே திரண்டு வராதோ? தனியாக எதற்குக் கூறவேண்டும்? இதன் காரணம் இவனுக்கு வெண்ணெய் மீது உள்ள ஆசையைக் கண்டு, வெண்ணெய் தானாகவே திரண்டுவிட்டதோ என்னும்படி இருந்தது என்று கருத்து. திருவாய்மொழியில் – (7–7–2) – ஈட்டிய வெண்ணெய் உண்டான் – என்று இவன் கூறப்பட்டான் அல்லவா?

(வேரார்நுதல்மடவாள்) – கடலைக்கடைய என்று உபக்ரமித்து, தேவர்கள் இளைத்திருந்தாற்போலே காணும் இவள் ஆயாஸத்தாலே வேர்த்த நெற்றியும் தானுமாயிருந்தபடி. சொல்லிச் சொல்லாத ஆத்மகுணங்களால் குறைவற்றிருக்கிறபடி. (வேறோர் கலத்திட்டு) – வெண்ணெய் பரிமாறும் கலத்திலே இட்டுவைக்கில், நாற்றமே குறியாக அறியுமென்று த்ரவ்யாந்தரம் பரிமாறும் கலத்திலே இட்டு வைத்தாள் காணும். (நாராருறியேற்றி) – விரலை நுழைக்கவொண்ணாத உறியிறே. (ஏற்றி) – முகவணைக்கல் ஏற்றுவாரைப்போலே அருமைப்பட்டு ஏற்றினபடி. (நன்கமையவைத்ததனை) – வெண்ணெயை வைத்துக் கள்ளக்கயிற்றை உருவிச் சேமப்பட வைத்தபடி. அழகியதாகச் சேமப்பட வைத்தாளிறே என்று க்ஷேபிக்கிறாள் கட்டுவிச்சி.

விளக்கம் – (வேர் ஆர் நுதல் மடவாள்) – கடலைக் கடந்த தேவர்கள், மிகுந்த களைப்பு அடைந்தது போன்று யசோதையும், தயிர் கடைந்த களைப்பால் வியர்த்த நெற்றியுடன் நின்றாள். (வேறோர் கலத்திட்டு) – வெண்ணெயை எப்போதும் வைக்கும் பாத்திரத்திலே வைத்தால், அதன் நறுமணத்தை வைத்தே கண்ணன் கண்டு பிடித்து விடுவான், ஆகவே வேறு பொருள்கள் வைக்கின்ற பாத்திரத்தில் வெண்ணெயை வைத்தாள். (நார் ஆர் உறி ஏற்றி) – கண்ணன், அவனது விரலைக் கூட நுழைக்க முடியாதபடி நாரால் செய்யப்பட்ட மூடிகொண்டு மூடப்பட்ட உறியில் வெண்ணெயை வைத்து. (ஏற்றி) – கோபுரத்தின் முகப்புக்கல்லை உயரமாக வைப்பது போன்று, மிகவும் சிரமத்துடன் உறியை உயரத்தில் ஏற்றி வைத்தாள். (நன்கு அமைய வைத்ததனை) – அப்படியும் மீறி வெண்ணெயைக் களவு செய்ய முயன்றால், பிடித்துக் கொள்ளும் பொறி போன்று கயிறு ஒன்றை அமைத்தாள். அவனுக்காகச் செய்த வெண்ணெயை எடுக்க அவனுக்கே தடையை விதிக்கிறாளே என்று கட்டுவிச்சி கோபிக்கிறாள்.

(பேரார் வேல்கண் மடவாள் போந்தனையும் பொய்யுறக்கம்) – எங்கேனும் வைக்கிறபோது இவன் காண்கிறானென்று பரகுபரகென்று இவள் பார்க்கும்படி. (போந்தனையும்) – இவனுக்கு ஒரு பகல் ஆயிரமூழியாயிருக்கிறபடி. வெண்ணெயில் சாபலமில்லாமல் கிடக்கிறானல்லன், களவின் மிகுதியாலே ஆறக் கிடக்கிறபடி. (பொய்யுறக்கம்) – அவன் உறங்கினானென்றிறே இவளிருப்பது, யோக நித்ரை போலே. (ஓராதவன் போலுறங்கி) – இவனுக்கு வேறொரு நினைவில்லை, உறக்கமேயோ என்று தோன்றக் கிடந்தபடி. (அறிவுற்று) – சில அசித் பதார்த்தங்களுக்கு அறிவு குடி புகுந்தாற்போலேயிருக்க, உறங்கி உணர்ந்தானாக இருந்தபடி. அவள் போனவாறே உறங்கி உணர்வார் உணருமாபோலே உணர்ந்தபடி. நடுவே வந்து அவள் புகுந்தாளேயாகிலும் உறங்கினவன் உணர்ந்தான் என்று அவளுக்குத் தோற்றக் கிடந்தானென்றபடி. அறிவு குடிபுகுந்து மூரிநிமிர்வது, கொட்டாவி கொள்ளவதாயுணர்ந்தபடி.

விளக்கம் – (போர் ஆர் வேல்கண் மடவாள் போந்தனையும் பொய்யுறக்கம்) – தான் அந்த வெண்ணையை எங்கே வைக்கிறோம் என்று கண்ணன் பார்க்கிறானா எனச் சுற்றுமுற்றும் பார்த்தாள். (பொய் உறக்கம்) – திருவாய்மொழி (10–3–1) – ஓர் பகல் ஆயிரம் ஊழி – என்று இவனைக் காணாத அடியார்களுக்கு ஒரு பகல் பொழுதே ஆயிரம் கல்பங்கள் போன்று தோன்றுவது போல், யசோதையின் கைப்பட்ட வெண்ணெய் கிடைக்காமல் இவனுக்கு ஒரு நொடியும் ஆயிரம் கல்பங்கள் போன்று தோன்றுகிறது. வெண்ணெய் அங்கு இருக்கும்போது இவன் அந்த வெண்ணையை விரும்பாத காரணத்தினால்தான் எடுக்காமல் உள்ளான் என்று கருத்தல்ல. பல பேர் வீடுகளில் சென்று, அங்குள்ள வெண்ணெயைத் திருடி உண்டதால், பசியில்லாமல் இருக்கிறான் என்று கொள்ளவேண்டும். (பொய் உறக்கம்) – அவன் உறங்குகிறான் என்று யசோதை நினைக்க, இவன் யோக நித்திரையில் இருந்தான். (ஓராதவன் போல் உறங்கி) – இவன் வேறு நினைவு இல்லாமல் உறங்குகிறான், உறக்கத்தை விட்டு வேறு எதுவும் இவன் அறியவில்லையோ என்னும்படிக் கிடந்தான். (அறிவுற்று) – அசேதனங்களுக்கு திடீர் என அறிவு வருவது போன்று இவன் எழுந்தான். யசோதை அங்கிருந்து சென்றவுடன், எழுந்து அமர்ந்து, உண்மையாகவே விழித்து எழுபவர்கள் செய்வது போன்று கொட்டாவி விட்டு, சோம்பல் முறித்து அமர்ந்தான். இது ஏன் என்றால், திடீரென்று யசோதை அங்கு வந்து விட்டால் – இவன் உண்மையாகவே உறங்கித்தான் எழுந்தான் – என்று அவள் நினைத்து கொள்வதற்காக இப்படி செய்தான்.

(தாரார் தடந்தோள்கள்) – மாலையோடேகூட வெண்ணெய்க் குடத்திலே கையை விட்டான். (தாரார் தடந்தோள்கள்) – வைகலும் வெண்ணெய் கைகலந்துண்டான். (உள்ளளவும் கைநீட்டி) – வெண்ணெயில் ஆழக்கையிட்டதனையும் வயிறுநிறையும் என்றிருக்கிறான் காணும் மௌக்த்யத்தின் மிகுதியாலே. தாரார் தடந் தோள்களுள்ளளவும் கைநீட்டினான் என்று இவளறிந்தபடி எங்ஙனே? – என்று ஜீயர் பட்டரைக் கேட்க, கோயிற் சாந்தைக் குடத்தின் விளிம்பிலே கண்டாள்போலே காணும் – என்றார். (ஆராத வெண்ணெய்) – முன்பு அமுது செய்த வெண்ணெய், பின்பு அமுது செய்யும் வெண்ணெய்க்குக் கண்டீரமாய்க்காணும் இருப்பது. (விழுங்கி) – வெண்ணெயை நிச்சேஷமாக அமுதுசெய்து.

விளக்கம் – (தார் ஆர் தடம் தோள்கள்) – அணிந்திருந்த மாலையும் வெண்ணெய் பானைக்குள் நுழையும்படி கைவிட்டான். திருவாய்மொழியில் (1–8–5) – வைகலும் வெண்ணெய் கைகலந்து உண்டான் – என்றார் அல்லவா? (உள்ளளவும் கை நீட்டி) – எத்தனை தூரம் வெண்ணெய் பானைக்குள் கையை விட்டானோ அந்தளவு தனது வயிறு நிரம்பும் என்று எண்ணுகிறான். நஞ்சீயர் பட்டரிடம் – தார் ஆர் தடம் தோள்கள் உள்ளளவும் கை நீட்டினான் என்று யசோதை எப்படியறிந்தாள் – என்று கேட்டார். அதற்கு பட்டர் – கண்ணன் தனது தோள்களில் பூசியுள்ள சாந்து, குடத்தின் விளிம்பில் உள்ளதைக் கண்டிருப்பாள் போலும் – என்றார். (ஆராத வெண்ணெய்) – முதலில் இவன் உண்ணும் வெண்ணெயானது, இவனது பசியைத் தூண்டும் மருந்தாக மாறி, அதனால் மேலும் வெண்ணெயை உண்கிறான். (விழுங்கி) – மீதம் கைக்காமல் முழுவதுமாக உண்டான்.

(அருகிருந்த மோரார் குடமுருட்டி) – வெண்ணெய் விழுங்கி வெறுங்கலத்தை வெற்பிடையிட்டிறே போவது. பாகவதருருகே கழனிமிண்டரிருந்தால் அஸஹ்யமாயிருக்குமாபோலே, வெண்ணெய்குடத்தருகே மோர்க்குடமிருந்தது இவனுக்கு அஸஹ்யமாயிருக்கையாலே உருட்டினபடி. பட்டர், ஆழ்வார்கள் திருமண்டபத்திலேயிருந்து திருமடலருளிச்செய்யாநிற்கச்செய்தே, இவ்விடத்தே – ப்ராஹ்மணர் தநத்தையெல்லாம் பாழே போக்கினான் – என்று அருளிச்செய்தார். (முன் கிடந்த தானத்தே) – ஆரேனும் காண்கிறார்கள் என்று இவன் பதறி விழுந்தான், தைவயோகத்தாலே அது பழைய ஸ்தானமாயிற்றித்தனை. (முன் கிடந்த தானத்தே) – களவுகண்டானென்று சொல்லிலும் படுக்கையோடேயோ எழுந்திருந்து களவுகண்டது என்னும்படி கால் போட்டவிடத்தே கால் போட்டுக், கைபோட்டவிடத்தே கைபோட்டுக் கிடந்தபடி. (ஓராதவன் போல் கிடந்தானை) – வெண்ணெய் ப்ரஸங்கம் இவன் நினைவிலுமில்லையீ என்னும்படி இவ்வர்த்தம் முதலிலே அறியாதானாய்க் கிடந்தபடி. தானுருட்டின மோர் படுக்கையிலே வந்து தொங்கச் செய்தேயும் அறியாதவனாய்க் கிடந்தபடி. (கண்டவளும்) – இவனைப் பெற்றவளிறே அவளும், இவன் கிடந்த கிடையிலே இவனையே சங்கித்தாள். (வாராத் தான் வைத்தது காணாள்) – வந்ததும் வாராததுமாக உறியிலே கையையிட்டாள். யாதொருபடி வைத்தாள், அக்குறிப்படியே கண்டிலள்.

விளக்கம் – (அருகிருந்து மோரார் குடம் உருட்டி) – பெரியாழ்வார் திருவாய்மொழியில் (2–9–1) – வெண்ணெய் விழுங்கி வெறும் கலத்தை வெற்பிடை இட்டு – என்னும்படி, உண்ட பின் வெண்ணெய் இருந்த பாத்திரத்தை உடைத்து விட்டுச் செல்கிறான். பக்தர்களுக்கு

நடுவில் பகவத் விரோதிகள் இருந்தால் பொருத்தம் இல்லாமல் உள்ளது போன்று, வெண்ணெய் குடங்களுக்கு நடுவில் மோர்க்குடங்கள் இருந்தால் அதனைப் பொறுக்காமல் உருட்டி விடுகிறான். பட்டர் திருமடலின் வ்யாக்யானத்தை விளக்கும்போது – ப்ராஹ்மணருடைய தனத்தையெல்லாம் போக்கினான் – என்றார். இதன் பொருள் என்ன? அந்தணர்கள் தாங்கள் இயற்றும் யாகங்களில் உள்ள பால், தயிர், மோர் முதலானவற்றையே தங்கள் செல்வமாக எண்ணுவார்கள். இப்படியாக அவர்கள் தன்னை விட்டு மற்ற பொருள்களை எண்ணியுள்ளதைக் கண்ட எம்பெருமான், பால் மற்றும் தயிரைத் தானே உண்டு, மோரையும் உருட்டிவிட்டு, அவர்களுக்கு தன்னை மட்டுமே கிட்டும்படிச் செய்து, மற்ற தனங்களை அழித்தான் என்று கருத்து. (முன் கிடந்த தானத்தே) – தான் இவ்விதம் மோர்க்குடங்களை உருட்டி விட்டதை யாராவது பார்த்து விட போகிறார்களே என்று பதறினான். ஆனால் மோர் கொட்டிய இடம் முன்பே மோர் கொட்டப்பட்டிருந்த இடமாக இருந்தது. ஆகவே நிம்மதி அடைந்து, மீண்டும் சென்று தான் முன்பு படுத்திருந்த இடத்திலேயே, முதலில் காலை எப்படி வைத்திருந்தானோ அதே போன்று வைத்து, கையை எப்படி வைத்திருந்தானோ அதே போல் வைத்து, யாராவது பார்ப்பவர்கள் – படுக்கையுடன் எழுந்து சென்றா திருடியிருப்பான், முன்பு கிடந்தது போலவே அல்லவா இவன் கிடக்கிறான் – என்று நினைக்கும்படி உள்ளான். (ஓராதவன் போல் கிடந்தானை) – இவனுக்கு வெண்ணெயைப் பற்றிய நினைவு இல்லை போலும் என்று மற்றவர்கள் நினைக்கும்படி, ஏதும் அறியாதவனாகக் கிடந்தான். தான் உருட்டி விட்ட மோரானது, தனது படுக்கையை நனைத்தபடி உள்ளபோதே, ஏதும் அறியாதவனாக் கிடந்தான். (கண்டவளும்) – இவனைப் பெற்றவள் அல்லவா யசோதை? இவன் பேசாமல் கிடந்ததைக் கண்டு, இவன் ஏதோ செய்துள்ளான் என்று அறிந்தாள். (வாராத் தான் வைத்தது காணாள்) – வேகமாக வந்தவள் உறியில் கையை வைத்தாள். அங்கு, தான் வெண்ணெயை எப்படி வைத்தோமோ அப்படி இல்லாததை அறிந்தாள்.

(வயிறடித்து) – வெண்ணெயிழந்தேன் என்று வயிறடிக்கிறாளன்றிறே, இது இவனுக்கு ஸஹியாதொழிகிறதோ என்னும் வயிறெரித்தலாலேயாதல், இன்று வெண்ணெயாகிறது, நாளை பெண்களாகிறது, இது என்னாய் முடிகிறதோ என்றாதல். (இங்காரார் புகுதுவார்) – லங்கைபோலேயிறே வெண்ணெயை அரண் செய்து வைத்தபடி. (ஐயரிவரல்லால்) – முதலியாரேயிறே இது செய்வார். (நீராம் இது செய்தீரென்று) – உம்முடைய கைவழியே போனவித்தனையிறே வெண்ணெய், வேறு சிலருண்டோ என்று கையைப் பிடித்து உறங்குகிறவனைத் தூக்கி எடுத்து.

விளக்கம் – (வயிறடித்து) – வெண்ணெய் பறிபோனது என்பதால் இவள் புலம்பவில்லை. இத்தனை வெண்ணெய் உண்டால் இவனது இளம்வயிற்றுக்கு ஒத்துக்கொள்ளுமா என்ற எண்ணத்தால் புலம்பினாள். இன்று வெண்ணெயை எடுத்தான், நாளை பெண்களை அபகரிப்பான், இது இங்கு சென்று முடியப்போகிறதோ என்று எண்ணிப் புலம்பினாள். (இங்காரார் புகுதுவார்) – எவராலும் புக முடியாத காவலுடன் கூடிய இலங்கை போன்று அல்லவா வெண்ணெயை இவள் பாதுகாப்பாக வைத்தாள்? (ஐயர் இவர் அல்லால்) – இந்தச் செயலை உயர்ந்தவனான இவனை விட்டால் இங்கு வந்து வேறு யார் செய்யப் போகின்றனர்? (நீராம் இது செய்தீரென்று) – உறங்குவது போல் பாசாங்கு செய்து கொண்டிருந்த கண்ணனின் கையைப் பிடித்துத் தூக்கி – உனது இந்தக் கை வழியாகத்தானே வெண்ணெய் களவு போனது? இதனை நீ மட்டும் செய்தாயா அல்லது துணைக்கு வேறு யாரும் வந்தனரா – என்றாள்.

(ஓர் நெடுங்கயிற்றால்) – வெண்ணெய் களவுகாண்பானாகவும், தான் இவனை அடிப்பாளாகவும் முன்பே கயிறு தேடி வைத்திலளிறே, கைக்கெட்டிற்றொரு கயிற்றாலே. (நெடுங்கயிற்றால்) – வ்யாக்யானம் பண்ணுமவர்கள் கண்ணிக் குறுங்கயிறு என்றார்களிறே. நெடுமை விபரீதலக்ஷணை. அன்றியே, இவன் திருமேனியோட்டை ஸ்பர்சத்தாலே நெடுங்கயிறு என்றாளாதல். திருமேனி நீ தீண்ட பெற்று, மாலும் கருங்கடலே என்நோற்றாய் என்னக்கடவதிறே. (ஊரார்களெல்லாருங்காண) – வெண்ணெய் களவு கொடுத்தாரும், பெண்களவு கொடுத்தாரும் காண. எல்லாரும் காண மடலெடுக்க இருந்தாளிவள், நான் அது உபதேசிக்கவிருந்தேன், எங்களையொழிய அடைய ஸர்வஸ்வதாநத்தே அகப்பட்டது காணும். அதாவது– காணலுமாய்த் தவிரலுமாயிருக்கும் மனிச்சர்காணும் கண்டது. காணுமளவும் மடலெடுத்தல்லது தரிக்கமாட்டாத நாங்கள் காணப்பெற்றிலோம்.

விளக்கம் – (ஓர் நெடுங்கயிற்றால்) – இவன் வெண்ணெயைத் திருடப்போகிறான், நாம் இவனை அடிக்கப் போகிறோம் என்று முன்னமே எதிர்பார்த்து யசோதை கயிறு எதனையும் தயாராகத் தேடி வைக்கவில்லை. எனவே கையில் அகப்பட்ட கயிறு ஒன்றை எடுத்தாள்.

(நெடுங்கயிற்றால்) – இங்கு பெரிய திருமொழியில் (11–5–5) – கண்ணிக் குருங்கயிறு – என்று சிறிய கயிறாக கூறிவிட்டு, இவரே நீண்டகயிறு என்றும் கூறுவது காண்க. அல்லது முதல் திருவந்தாதியில் (19) – திருமேனி நீ தீண்டப் பெற்று மாலும் கருங்கடலே என் நோற்றாய் – என்று எம்பெருமானின் திருமேனியுடன் சேர்த்தி ஏற்பட்டதால் கடலுக்கு மேன்மை உண்டானது – என்று கூறுவது போல், கண்ணனின் திருமேனியொடு பட்டதால் அந்தக் கயிறுக்குப் பெருமை அதிகமானது. இதனை விளக்கவே நெடுங்கயிறு என்றார் என்றும் கூறலாம். (ஊரார்கள் எல்லோரும் காண) – கண்ணனிடம் வெண்ணெயைக் களவு கொடுத்தவர்கள், அவனிடம் தங்கள் வீட்டுப் பெண்களை இழந்தவர்கள் என்று பலரும் காணும்படி. எல்லாரும் காணும்படி அவன் கட்டுண்டான், இவள் எல்லாரும் பார்க்கும்படியாக மடல் எடுத்தாள், கட்டுவிச்சியாக நான் உங்களுக்கு அதனை விளக்கியபடி இருந்தேன். ஆக எங்களைத் தவிர அனைவரும் அவனது குணங்களையும் அழகையும் பருகினர். அவனைக் கண்டாலும் காணாவிட்டாலும் ஒரே போன்று இருப்பவர்கள் அவனைக் கண்டார்கள். ஆனால் அவனைக் காணாமல் உயிர் தாங்கமாட்டோம் என்று மடல் எடுத்த எங்களால் அவனைக் காண இயலவில்லை.

(உரலோடே) – இவனிருந்தவிடத்தே உரலை உருட்டாதே, உரலிருந்தவிடத்தே இவனை இழுத்துக் கொண்டு போனாள். (தீரா வெகுளியளாய்) – இவன் பக்கல் ப்ரேமத்துக்கு அவதியுண்டாகிலிறே, சீற்றத்துக்கு அவதியுண்டாவது. (சிக்கென ஆர்த்தடிப்ப) – சிக்கெனக் கட்டுவதும் செய்தாள், சிக்கென அடிப்பதும் செய்தாள். (ஆரா வயிற்றினோடாற்றாதான்) – இவன் செய்ததென்னென்னில் பெரிய திருநாளிலே சிறைப்பட்டிருப்பாரைப்போலே, வெண்ணெயும் பெண்களும் ஆழமோழையாய்ச் செல்லுகிற அமளியிலே நாம் புகுந்திருப்பதே என்றிருந்தான். (ஆற்றாதான்) – ஆற்றமாட்டாதேயிருந்தான். என்னியவென்னில, எங்கே வெண்ணெயை ஒளிக்கிறார்கள், எங்கே பெண்ணை ஒளிக்கிறார்களென்று.

விளக்கம் – (உரலோடே) – இவன் உள்ள இடத்திற்கு உரலைக் கொண்டு வராமல், உரல் இருந்த இடத்திற்கு இவன் திருமேனி நோகும்படி இழுத்துக் கொண்டு போனாள். (தீரா வெகுளியளாய்) – இவன் மீது உள்ள அன்பு காரணமாக யசோதைக்கு இந்தக் கோபம் வந்தது. அந்த அன்பு அதிகமாக உள்ளதால், கோபமும் அதிகமாக உள்ளது. (சிக்கென ஆர்த்தடிப்ப) – சட்டென்று அவனைப் பிடித்து உரலில் கட்டினாள், கயிற்றால் அடிக்கவும் செய்தாள். (ஆரா வயிற்றினோடாற்றாதான்) – அப்போது இவன் என்னசெய்தான்? அரங்கனின் பெரியகோவிலில் வைகுண்ட ஏகாதசி உற்சவம் நடக்கும்போது எதோ சில காரணத்தால் வர இயலாமல் தங்கள் ஊரிலேயே இருக்க நேர்ந்தவர்கள் வருந்துவார்கள். அது போன்று இவன் – வெண்ணெயும் பெண்களும் வெள்ளம் போன்று ஆங்காங்கு ஓடும்போது, நாம் இங்கு இப்படிச் சிறை பட்டோமே – என்று நொந்து கொண்டான். (ஆற்றாதான்) – பொறுக்க மாட்டாமல் தவித்தான், எதற்கு என்றால் – வெண்ணெயையும் பெண்களையும் நாம் அறியாமல் எங்கே ஒளித்து வைப்பார்களோ என்று சிந்தித்தான்.

(அன்றியும்) – அதுக்கு மேலே பிறந்ததோரபாயம் கேட்கலாகாதோ? ஸ்நேஹிநியான யசோதைப் பிராட்டி கையாலே கட்டுண்டு அடியுண்ட அடியிறே கீழ்ச் சொல்லிற்று, ப்ரதிகூலனான காளியனாலே கட்டுண்டபடி சொல்லுகிறது மேல். நியாமிகையுமாய், ஸ்நேஹிநியுமான அவள் கையாலே கட்டுண்டது பாடாற்றலாமிறே. காளியன் செய்த செயலைக்கேளீர்.

விளக்கம் – (அன்றியும்) – இதற்கும் மேல் அவனுக்கு உண்டான ஆபத்தைக் கேட்க வேண்டுமே. தன் மீது அன்பு கொண்ட யசோதையின் கையால் கட்டுண்டு, அடிப்பட்டு நின்றது கூறப்பட்டது. இனி தன்னுடைய விரோதியான காளியனால் கட்டுண்ட நிலை கூறப்படுகிறது. இவள் அவனது தாயானதால், அவன் மீது உரிமை உள்ளதால், அவள் கையால் கட்டுண்டதைப் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் காளியன் செய்ததைக் கேளுங்கள்.

(நீரார் நெடுங்கயத்தை) – இட்டமான பசுக்களை இனிது மறித்து நீரூட்டி, தனக்கு ஒதுங்க நிழலாயிருக்கிற பசுக்களுக்கு நீரூட்ட வேண்டும் ஜலஸம்ருத்தியையுடைய பொய்கையை தூஷித்தானாயிற்று காளியன், தன் ரக்ஷ்ய வர்க்கத்தினுடைய ரக்ஷணத்துக்குக் குறைவற வேண்டும் ஜலஸம்ருத்தி காளியனாலே தூஷிதமாயிற்று.

விளக்கம் – (நீரார் நெடுங்கயத்தை) – நாச்சியார் திருமொழியில் – இட்டமான பசுக்களை இனிது மறித்து நீரூட்டி – என்னும்படி, அவ்வழியாகச் செல்லும் பெண்களை வசதியாக அமர்ந்து கொண்டு வம்புக்கு இழுக்க ஏற்றதாக உள்ள மரங்கள் சூழ்ந்ததும்,

பசுக்களுக்குத் தேவையான நீர் அளிக்கவல்லதும் ஆகிய மடுவில் காளியன் தனது விஷத்தைக் கலந்தான். தன்னால் காக்கப்பட வேண்டிய பசுக்களை, காப்பதற்குத் தேவையான நீரானது காளியனால் மாசுபடுத்தப்பட்டது.

(சென்றலைக்க நின்றுரப்பி) – தன்னோராயிரம் பிள்ளைகளும் தானுமாய்ப் பொய்கையைக் காலாலே உழக்குவது, கல்லைவிட்டு எறிவதாய் ஆர்த்துக்கொள்வதானான். நால்வாயுங் கரைக்கு மேலே நீர்வழியும்படி நின்று உரப்பினானாயிற்று. லங்கையை அடைமதிள் படுத்தி ராக்ஷஸர் தாங்களே புறப்படும்படி பண்ணினாற்போலே. இதுக்குமுன் பண்ணின மௌக்த்யமே போந்திருக்க, அதுக்கு மேலே பண்ணின மௌக்த்யத்தைக் கேட்கலாகாதோ? (ஓராயிரம் பண வெங்கோவியல் நாகத்தை) – காளியனன்று கிடீர், பையல் ம்ருத்யுகிடீர். (ஓராயிரம் பணம்) – நீண்முடியைந்திலும் நின்று நடஞ்செய்து என்னச்செய்தே ஆயிரம் என்கிறதென்னென்னில், முக்தனான அவன் மேலே காளியன் வந்தானென்னுங்காட்டில் இவளுக்கு ஆயிரமாய்த் தோற்றினபடி.

விளக்கம் – (சென்றலைக்க நின்றுரப்பி) – பெரியாழ்வார் திருமொழியில், தன்னோராயிரம் பிள்ளைகள் – என்னும்படி, ஆயர் சிறுவர்களும் தானுமாகச் சேர்ந்து சென்று, அந்த மடுவைக் காலால் கலக்குவது, கல்லை விட்டு அதில் எறிவது என்ற விளையாட்டுக்கள் புரிந்து, தானாகவே வலியச்சென்று காளியனின் சூழ்ச்சியில் அகப்பட்டான். அந்த குளத்தில் உள்ள நீரானது, நான்கு கரைகளுக்கும் மேலே வழிந்து செல்லும்படி குளத்தில் நின்று, அதன் நீரைக் கலக்கினான். இலங்கையை சூழ்ந்து கொண்டு அரக்கர்கள் தாங்களாகவே போருக்கு கிளப்பியதைப் போன்று, தானே காளியனின் கோபத்தைக் கிளருவதாக இருக்கையில், இவன் மேலும் செய்ததைக் கேளுங்கள். (ஓர் ஆயிரம் பண) – அந்தக் காளியன் வெறும் நாகம் அல்லன். யமனே அந்த உருவில் நின்றான். (ஓர் ஆயிரம் பணம்) – பெரியாழ்வார் திருமொழியில் – நீர் முடி ஐந்திலும் – என்று, காளியனுக்கு ஐந்து தலைகளைக் கூறும் போது, இங்கு கட்டுவிச்சி ஏன் ஆயிரம் தலைகள் என்று கூறவேண்டும்? குழந்தையான இவனை எதிர்த்துக் காளியன் வந்ததால், அவனது 5 தலைகளும் 1000 தலை போன்று தோன்றியது.

(வெங்கோவியல் நாகத்தை) – இந்த யமனுக்கு வெம்மையை ஊட்டினான் கிடீர். (வெங்கோ இயல்) – வெவ்வியானொரு யமனுடைய ஸ்வபாவத்தையுடைய நாகத்தை. (வாராயெனக்கென்று) – முதலிகள் லங்கையை எனக்கு, எனக்கு என்றாற்போலேகிடீர். தன்னோராயிரம் பிள்ளைகளும் காளியனை எனக்கு எனக்கு என்று நின்றபடி, அவர்கள் நடுவே எனக்கு வாராய் என்றான். (மற்றதன் மத்தகத்து) – அக்காளியன் பணத்திலே. (சீரார் திருவடியால் பாய்ந்தான்) – பிராட்டி திருமுலைத்தடங்களிலே வைத்துக்கொள்ளும்போது கூசவேண்டும்படியிருக்கிற திருவடிகளைக் கொண்டு, விஷத்ருஷ்டியான பணத்திலே பாய்ந்தான். வடிவிணையில்லா மலர்மகள் மற்றை நிலமகள் பிடிக்கும் மெல்லடியிறே.

விளக்கம் – (வெங்கோவியல்) – காளியனுக்கு எமன் கூட ஈடாக மாட்டான் என்பதால் எமனின் தன்மையைக் கொண்ட நாகம் என்று கருத்து. (வாராய் எனக்கென்று) – வானரங்கள் அனைவரும் – இலங்கையை நானே அழிப்பேன், நானே அழிப்பேன் – என்று இராமனிடம் மன்றாடியது போல, கண்ணனின் தோழர்கள் அனைவரும் காளியனிடம் – என்னிடம் வா – என்று அழைத்தனர். இவன் அவர்கள் நடுவில் நின்று கொண்டு – என்னிடம் வா – என்றான். (மற்றதன் மத்தகத்து) – அந்தக் காளியனின் படம் எடுத்த தலையிலே. (சீர் ஆர் திருவடியால் பாய்ந்தான்) – பெரியபிராட்டியின் மென்மையான ஸ்தனங்களில் இவன் திருவடிகளை வைத்தால் கூட, அந்தத் திருவடிகள் நோவுபடுமோ என்னும்படி மென்மையான திருவடிகளைக் கொண்டவன், அப்படிப்பட்ட தனது மென்மையான திருவடிகளைக் கொண்டு, விஷம் நிறைந்த பார்வையுடைய காளியனின் தலையில் குதித்தான். திருவாய்மொழியில் – வடிவிணை இல்லா மலர் மகள் மற்றை நிலமகள் பிடிக்கும் மெல்லடி – என்பது போன்று மென்மையான திருவடிகள்.

(தன் சீதைக்கு நேராவனித்யாதி) பிராட்டியோடு ஸாம்யை யாவேனென்று வந்து சூர்ப்பணகையை விரூபையாக்கிவிட அவள் போய் கரன் காலிலே விழ, ஸபரிகரனாய் வந்த கரனை நிரஸித்தபடியைச் சொல்லுகிறது. (தன் சீதை) – ராகவோர்ஹதிவைதேஹீம் தனக்கு உயரஞ்சொல்லிலும் அவளைச் சொல்லித் தன்னைச் சொல்ல வேண்டும்படியிருக்கும் பிராட்டிக்குக்காணும் ஸத்ருசையாவேனென்று வந்தது. (நேராவனென்று) – ஸர்வலக்ஷணத்தாலும் விலக்ஷணையான பிராட்டிக்கு விரூபையாயிருக்கிற தான் காணும் ஒப்பாவனென்று வந்தாள். (ஓர் நிசாசரி) – பெற்ற தாயோடே சீறுபாறென்று வந்தவள் என்று பிணந்தின்னி என்கிறாள் காணும் இவள். (தான்) – பெருமாளுக்கு மேலான

பிராட்டிக்குப் பெருமாளோடும் ஒவ்வாத தான் காணும் ஒப்பாவன் என்று வந்தாள். (தன் சீதைக்கு நேராவனென்றோர் நிசாசரிதான் வந்தாளை) – த்ரைலோக்யராஜ்யம் ஸகலம் ஸீதாயா நாப்நுயாத் கலாம் என்று பெருமாள் தாமும் தம் விபூதியும் ஒரு தட்டுக்குங்கூடப் போராதிருக்கக்காணும், தான் நேராவனென்று வந்தது. (வந்தாளை) – பெருமாள்பாடே வந்தவாறே – நான் ஏகதார வ்ரதனாயிருப்பன், அக்ருத விவாஹராயிருக்கிற இளைய பெருமாள் பாடேபோ – என்ன, அங்கே சென்றவாறே, அவர் – நான் தாஸனாயிருப்பன், எனக்கு நீ கடவையானால் நீயும் தாஸியாய் அந்வயிக்குமத்தனையன்றோ? பெருமாள்பாடே சென்றாலன்றோ உனக்குப் பட்டங்கட்டி ஏக ஸிம்ஹாஸநத்திலே இருக்கலாவது – என்ன, அங்கே போவது இங்கே வருவதாய்த் திரிந்தவாறே – இவளன்றோ இதெல்லாம் ஒட்டாதொழிகிறாள் – என்று பிராட்டியுடைய பாடே வந்து – உன்னைத் தின்னுமித்தனை – என்று வீழ.

விளக்கம் – (தன் சீதைக்கு நேராவள்) – தன்னுடைய பிராட்டியுடன் சமமாக இருப்பேன் என்று வந்த சூர்ப்பணகையின் காது மூக்குகளை அறுத்தான். அவள் சென்று கரனின் கால்களில் விழுந்தாள். படையுடன் வந்த கரனை அழித்த விதத்தை அடுத்து கூறுகிறது. (தன் சீதை) – இராமாயணத்தில் ராகவே அர்ஹதி வைதேஹீம் – ராகவனுக்கு ஏற்ற சீதை என்னும் படி உள்ள சீதைக்கு ஒத்தவளாவேன் – என்று கூறியபடி சூர்ப்பணகை வந்தாள். (நேராவன் என்று) – அனைத்து லக்ஷணங்களாலும் பெருமை மிகுந்த பிராட்டிக்கு, தான் ஒத்தவள் என்று கூறியபடி கோரமான ரூபம் கொண்ட அவள் வந்தாள். (ஓர் நிசாசரி) – இந்த உலகின் தாயான சீதையிடம் கோபம் கொண்டு வந்தவள் என்பதால் கட்டுவிச்சி சூர்ப்பணகையை பிணம் தின்பவள் என்று கூறினாள். (தான்) – இராமனை விட உயர்ந்தவள் சீதை, அவளுக்கு எந்த வகையிலும் ஈடாகாத தன்னை, அவளுக்கு ஒப்பவள் என்று கூறி வந்தாள். (தன் சீதைக்கு நேராவனென்றோர் நிசாசரிதான் வந்தாளை) – இராமாயணத்தில் – த்ரைலோக்ய ராஜ்யம் ஸகலம் ஸீதாயா நாப்னுயாத் கலாம் – என்று மூன்று உலகமும் சீதையின் ஒரு பகுதிக்கு இணையாகாது – என்று அல்லவா கூறப்பட்டுள்ளது? ஒரு தராசில் சீதையை ஒரு தட்டிலும், இராமனுடைய அனைத்து விபூதிகளை மற்றொரு தட்டிலும் வைத்தாலும், சீதையின் தட்டு தாழ்ந்தே இருக்கும். அப்படி உள்ள சீதைக்கு, தான் சமம் என்று சொல்லி வந்தாள். (வந்தாளை) – இராமனிடம் அவள் வந்தவுடன் இராமன் அவளிடம் – நான் ஒரே மனைவி என்ற விரதம் பூண்டவன், திருமணம் ஆகாத இலட்சுமணனிடம் நீ செல் – என்றான். இவள் அவனிடம் சென்றாள். உடனே இளையவன் இவளிடம் – இராமனுக்கு நான் தாசனாக உள்ளவன், எனக்கு நீ உரிமையானால் அவனுக்கு அடிமை செய்ய வேண்டும், ஆனால் நீ அவனை மணந்தால் மட்டுமே உனக்கு பட்டம் சூட்டி அவனுக்கு சரிசமமாக இருக்கையில் அமரவிடுவார்கள் – என்று கூறினான். இவ்விதம் இராமனிடமும் இலட்சுமணனிடமும் மாறிமாறி விரட்டப்பட்ட அவள் – இந்த சீதை அல்லவா எனது விருப்பத்தை ஒழிக்கிறாள் – என்று கூறி சீதையிடம் வந்து – உன்னை தின்று விடுகிறேன் – என்று கூறியபடி அவள் மீது பாய முனைந்தாள்.

(கூராந்தவாளால் இத்யாதி) – தம்முடைய கையாலேயிறே தண்டிப்பது, ராமஸ்ய தக்ஷிணோ பாஹு: – தம்முடைய தோளாயிருக்கிற இளையபெருமாளை இடுவித்து தண்டிப்பித்தார். (கூரார்ந்த வாளால்) – கூர்மை மிக்கிருக்கிற வாளாலே. முரட்டுடம்பிலே வ்யாபரியா நின்றால் ரக்தஸ்பர்சமில்லாதபடி வ்யாபரிக்கலாம் வாள். (கொடி மூக்கும் காதிரண்டும் ஈரா விடுத்து) – பிராட்டியோடொப்பாக்கி அங்கவிசேஷங்களைப் பேணிவர, அவற்றைப் போக்கிவிட்டார். (ஈரா விடுத்து) – வாளின் கூர்மை சொல்லுகைக்காக கூரார்ந்த வாள் என்கிறது அங்கு, ஈர்ந்தது என்கையாலே ஈருகைக்கு அரிதான உடம்பின் திண்மை சொல்லிற்று இங்கு. (ஈரா விடுத்து) – பிறந்தகத்தில் நின்றும் புக்ககத்திற்கு வந்தாற்போலன்றியே புக்ககத்தில் நின்றும் பிறந்தகத்துக்குப் போம்போது ஓராதிக்யம் பண்ணிவிட வேணுமிறே. பெருமாளை ஆசைப்படச் செய்தேயும் பிராட்டி பக்கல் அபராதம் பண்ணுகையாலே விரூபையானாளிறே. ஆகையாலே இவ்விஷயத்திலே ஆசையுண்டானாலும் ததீயர் பக்கலிலே அபராதமுண்டானால் பலிக்கும் பலம், சூர்ப்பணகை பலம் என்கை. இவளாசைப்பட்ட விஷயமிறே சிந்தயந்தியும் ஆசைப்பட்டது. இப்படி அபராதமில்லாமையாலே அவள் பெற்றுப் போனாளிறே. (விடுத்து) – தருணௌ ரூபஸம்பந்நௌ என்று கரன் காலிலே விழும்படி பண்ணி.

விளக்கம் – (கூரார்ந்த வாளால்) – இங்கு இராமன் தன் கையால் தண்டித்தான் என்று ஏன் கூறவேண்டும்? இராமாயணத்தில் (ஆரண்ய காண்டம்) – ராமஸ்ய தக்ஷிணோ பாஹு: – இராமனின் வலது கை லக்ஷ்மணன் – என்று கூறப்பட்டது. ஆக தன்னுடைய தோளாக உள்ள லக்ஷ்மணன் செய்ததை, தான் செய்தது என்று கூறலாம் அல்லவோ? (கூரார்ந்த வாளால்) – கூர்மை மிகுந்த வாள் கொண்டு. அவளது உடல் முரட்டு உடம்பாக உள்ளதால், அதனை அறுக்கும்போது கடினமாக இருக்கும், ஆகவே அவ்வாறு அறுக்கும்போது

அவளது இரத்தம் தன் மீது படாமல் இருக்கவேண்டுமானால் வாள் கூர்மையாக இருந்தால், இரத்தம் படும் முன்பாக வேகமாக அறுத்துவிடும் அல்லவா? (கொடி மூக்கும் காதிரண்டும்) – தன்னுடைய மூக்கையும், காதுகளையும் சீதையுடையது போன்று மாற்றி அமைத்து வந்ததால், அவற்றை அறுத்தான். (ஈரா விடுத்து) – கூர்மையான வாள் என்று உணர்த்துவதற்காக மேலே கூரார்ந்த வாள் என்றார், அந்த வாளால் அறுப்பதற்குக் கடினமான உடல் என்று உடலின் கடினத்தை இங்கு கூறுகிறார். (ஈரா விடுத்து) – ஒரு பெண் பிறந்து வீட்டில் இருந்து புகுந்த வீடு செல்லும்போது எந்தச் சிறப்பும் செய்யாமல், புகுந்த வீட்டிலிருந்து பிறந்த வீட்டுக்குச் செல்லும்போது அவளுக்கு மேன்மையை அளிக்கும்படிச் செய்வது உலக வழக்கம். இது போல் இவளுக்கு மூக்கை அறுத்து மேன்மை செய்தார் போலும். இவள் இராமன் மீது ஆசை கொண்டது தவறில்லை என்றாலும், சீதையைப் பகைத்து இராமன் மீது ஆசைக்கொண்டதால் தனது மூக்கை இழந்தாள். ஆகவே பகவான் மீது ஆசை ஏற்பட்டாலும், அவன் அடியார்களிடம் அபராதம் செய்தால் சூர்ப்பணகைக்கு நேர்ந்த கதியே உண்டாகும் என்று அறிக. இவளைப் போன்றே சிந்தயந்தி என்னும் கோபிகை ஒருவள் கண்ணன் மீது ஆசை கொண்டாள். ஆனால் அவள் சூர்ப்பணகை போன்று பாகவத அபராதம் செய்யாமல் இருந்ததால் கண்ணனை அடைந்தாள். (விடுத்து) – இராமாயணம் கூறுவது போன்று – தருணௌ ரூபஸம்பந்நௌ – மிகவும் அழகாக உள்ளனர் – என்று இவர்களது மேன்மையைக் கூறியபடியே கரனின் கால்களில் சென்று விழும்படி செய்தனர் (கரன் என்பவன் சூர்ப்பணகையின் சகோதரன்).

(அவட்கு மூத்தோனை) – அநுகூலரானார் பக்கல் ஸம்பந்தி ஸம்பந்திகளளவும் ராகம் பலிக்குமாபோலே காணும், ப்ரதிகூலரானார் பக்கல் ஸம்பந்தி ஸம்பந்திகளளவும் த்வேஷம் பலிக்கும்படி. (வெந்நரகம் சேரா வகையே சிலை குனித்தான்) – வளைந்த வில்லுங்கையுமாய் முஷ்டியிலே நின்ற பெருமாளைக்கண்ட கரன் மேலே போய் ஒரு நரகானுபவம் பண்ண வேண்டா என்னும்படி வயிறெரித்தலோடே எல்லாவனுபவமும் இங்கே அனுபவிக்கும்படி பண்ணினான். பூர்வாச்ரமத்திலே நஞ்சீயரெழுந்தருளியிருக்கச்செய்தே திருமடலருளிச் செய்கிறபோது – பட்டர் இவ்விடத்துக்கு இவ்வார்த்தை அருளிசெய்தார் – என்று சொல்ல, – இவ்வார்த்தையருளிச்செய்தவரைக் காணவேணும் – என்று காணும் பட்டர் ஸ்ரீபாதத்தில் நஞ்சீயர் ஆச்ரயித்தது.

விளக்கம் – (அவர்க்கு மூத்தோனை) – தன்னிடம் அன்பு கொண்டவர்கள் விஷயத்தில் அவனுடைய உறவினர்கள், உறவினர்கள் என்று தொடர்ந்து பல ஸந்ததிகளிடம் எம்பெருமானுக்கு அன்பு ஏற்படுகிறது. அதே போன்று தன்னிடம் அன்பு இல்லாதவர்களிடம் அவர்கள் உறவினர்கள், அவர்கள் உறவினர்கள் என்று பல ஸந்ததிகளிடம் பகவானுக்குக் கோபம் ஏற்படுகிறது. (வெந்நரகம் சேரா வகையே சிலை குனித்தான்) – வளைந்தவில்லும் கையுமாய் நின்ற இராமனைக் கண்ட கரனுக்கு அதற்கு மேல் அனுபவிக்க வேண்டிய நரகம் ஒன்றும் இல்லை என்று கூறும்படி, அனைத்துத் துயரங்களையும் இங்கேயே அனுபவித்தான். நஞ்ஜீயர் ஒருமுறை பட்டரின் சிஷ்யர் ஒருவரிடம் – இந்த இடத்தில் பட்டர் எந்த முறையில் விளக்கம் அளித்திருப்பார்? – என்று கேட்டார். அதற்கு அந்த சிஷ்யர் – மேலே கூறியபடி இராமனை வில்லும் கையுமாகக் கண்ட கரன் நரகத்தை இங்கேயே அனுபவித்தான் என்பது பட்டர் அருளிச்செய்த கருத்தே ஆகும் – என்றார். இதனைக் கேட்ட நஞ்ஜீயர் – இப்படிப்பட்ட பட்டரை நான் உடனே காண வேண்டும் – என்று கூறி பட்டரின் திருவடிகளில் விழுந்தார்.

(செந்துவர்வாய் இத்யாதி) – கரவதத்தினன்று, போய்ச்சொல்லுகைக்கு ஆளில்லாதபடி அகம்பநனெருவன் தப்பிப் பெண்ணுடையுடுத்துப்போய், ராவணனுக்கு பிறந்த வ்ருத்தாந்தத்தை அறிவிக்க, அவர் மாரீசனையுங் கூட்டிக்கொண்டுவந்து பிராட்டியையும் பெருமாளையும் கடலுக்கு அக்கரையும் இக்கரையுமாக உடலையும் உயிரையும் பிரித்தாற்போலே பிரிக்க, அதுவே ஹேதுவாக ராவணனை நிரஸித்தபடி சொல்லுகிறது மேல்.

விளக்கம் – (செந்துவர்வாய் இத்யாதி) – கரன் கொல்லப்பட்ட விஷயத்தை இராவணனிடம் சென்று கூறுவதற்குக் கூட ஆள் இல்லை. அதனால் அகம்பனன் ஒருவனே பெண் போன்று ஆடை அணிந்து, இராமனிடம் இருந்து தப்பி, இராவணனிடம் சென்று இந்த விஷயத்தைத் தெரிவித்தான். உடனே இராவணன் மாரீசனைக் கூட்டி வந்தான். உடலையும் உயிரையும் பிரித்தது போன்று கடலுக்கு அக்கரையும் இக்கரையுமாக, இராமனையும் சீதையையும் பிரித்தான். இந்தச் செயலே இராவணனை அழிக்கக் காரணமாக உருவெடுத்த விதத்தை இனி கூறுகிறார்.

(செந்துவர்வாய்) – ஜகத் ஸசைலம் பரிவர்த்தயாமி – நாட்டிற்குத் தண்ணீர்ப்பந்தல்போலே ரக்ஷகராகக் கண்ட பெருமாள் – நாட்டையழிப்பன் – என்னப்பண்ணின முறுவலிறே. புரேவ மே சாருததீமநிந்திதாம் – மானைக்கண்ட போது – பெருமாளே. இம்மானைப் பிடித்துத் தரவேணும் – என்று இரப்போடே கூடின முறுவலோடே காட்டார்களாகில் லோகத்தையெல்லாம் கூட்டிக் குலையாக அறுத்துப் போகவிடுவன் என்றாரிறே. (வாரார் வனமுலையாள்) – மலராள் தனத்துள்ளான் என்று பெருமாள் கிடக்குமிடமிறே. (வைதேவி) – விதேஹஸுதாம் என்று பெருமாள் வாய்புலற்றுங் குடிப்பிறப்பிறே. (காரணமா) – அவள் ஹேதுவாக. (ஏரார் தடந்தோளிராவணனை) – ஒன்றுக்கும் விக்ருதனாகாத திருவடியும் அஹோ ரூபமஹோ தைர்யம் என்று விக்ருதனாம்படி வடிவுபடைத்தவனிறே ராவணன். (ஈரைந்து சீரார்சிரமறுத்து) – பத்துத்தலையையும் ஒருகாலே அறாதே ஐயைந்தாக அறுத்து லீலைகொண்டாடினபடி. (சீரார் சிரமறுத்து) – அறுப்புண்டு விழுகிற தலைகளும் ரஞ்ஜநீயஸ்ய விக்ரமை: என்று பெருமாள் வீரப்பாட்டைக்கண்டு சிரித்துக்கொண்டு விழுகிறபடி. அறுப்புண்டு விழுந்த தலைகளைக் கழுகும் பருந்தும் இசிக்கக்கண்டு நிற்கிற தலைகள் – நாம் முற்பாடராகப் பெற்றிலோம் – என்றாசைப்படுகிறபடி. (செற்று) – வந்தானை ஓரம்பாலே கொல்லாதே, சதுரங்கபலத்தைக் கொன்று குதிரைகளைக் கொன்று ஸாரதியைக் கொன்று தேரையழித்துக் கொடியையறுத்து தலையைச் சிரைத்துத் தோள்களைத் துணித்துத் தலைகளையறுத்து இவற்றையெல்லாங்கண்டு அவன் நெஞ்சாறல் படும்படி பண்ணி, பின்னை அவனைக் கொன்றபடி. (உகந்து) – ருஷிகளுக்குக் களையறுக்கப் பெற்றோம் என்றும், ஸ்ரீவிபீஷணாழ்வான் தலையிலே அபிஷேகம் பண்ணப்பெற்றோம் என்றும் உகந்த. (செங்கண்மால்) – ஆஸ்ரித விரோதிகளைப்போக்கி, அவர்களுக்கு உகப்பாகப் பெற்றோம் என்று வ்யாமோஹமும் வாத்ஸல்யமும் திருக்கண்ணிலே தோற்றினபடி.

விளக்கம் – (செந்துவர்வாய்) – இராமாயணம் (ஆரண்ய காண்டம்) – ஜகத் ஸ சைலம் பரிவர்த்தயாமி – சீதையை மீண்டும் என்னிடம் சேர்க்கவில்லை என்றால் இந்த உலகைத் தலைகீழாகக் கவிழ்த்து விடுவேன் – என்று, உலகிற்கே தண்ணீர்ப்பந்தல் போன்று காப்பாற்றும் இராமன், நாட்டை அழிப்பதாகக் கூறும்படிச் செய்தது சீதையின் புன்னகை அல்லவா? மானைக்கண்டபோது என்னிடம் (இராமன்) – பெருமானே. இந்த மானைப் பிடித்துத் தரவேண்டும் – என்று அப்பாவியாகக் கேட்ட சீதையின் புன்னகையை எனக்குக் காண்பிக்கவில்லை என்றால் இந்த உலகம் அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்து, வாழைக்குலை போல் அறுத்து விடுவேன் – என்றான் அல்லவா? (வார் ஆர் வனமுலையாள்) – மூன்றாம் திருவந்தாதி (3) கூறுவது போன்று – மலராள் தனத்துள்ளான் – என்பதற்கு ஏற்ப இராமன் உள்ள இடமாகும் இவளது ஸ்தனங்கள். (வைதேவி) – விதேஹ ஸுதாம் – என்று இராமனும் பிரமிக்கும் குடிப்பிறப்பைக் கொண்டவள் அல்லவா? (காரணமா) – இத்தகைய பெருமை நிறைந்த அவள் காரணமாக. (ஏரார் தடம் தோள் இராவணனை) – இராமனையும் சீதையையும் தவிர வேறு யாரையும் மதிக்காத அனுமன் – அஹோ ரூபம் அஹோ தைர்யம் – என்ன ஒரு உருவம், என்ன தைர்யம் – என்று வியக்கும்படியான உருவம் கொண்ட இராவணன். (ஈரைந்து சீரார் சிரம் அறுத்து) – அவனுடைய பத்துத் தலைகளையும் ஒரே நேரத்தில் அறுத்து எறிந்தால், தான் (இராமன்) அவன் தலையை அறுப்பதை அவனால் (இராவணால்) கண்டு ரசிக்க முடியாது என்று கருதி, ஐந்து ஐந்து ஆக அறுத்தான். (சீரார் சிரம் அறுத்து) – அப்படி அறுந்து விழும் தலைகள் – ரஞ்ஜநீயஸ்ய விக்ரமை: – வீரச் செயல்களால் புகழத்தக்கவனான இராமனை – என்று இராமனுடைய வீரத்தைக் கண்டு சிரித்தபடியே தரையில் விழுந்தன. அறுந்து விழுந்த தலைகளைக் கழுகும் பருந்தும் உண்பதைக் கண்டு, எஞ்சி இருந்த மற்ற தலைகள் – நாம் முன்னரே விழுந்திருக்கலாமே – என்று ஆசையுடன் நின்றன. (செற்று) – இராவணனை ஓர் அம்பினால் கொல்லாமல், நான்கு அங்கங்கள் கொண்ட சேனையை அழித்து, குதிரைகளைக் கொன்று, தேர்ப்பாகனைக் கொன்று, தேரை அழித்து, தேர்க்கொடியை அறுத்து, தலை முடியைச் சிரைத்து, தோள்களை வெட்டி, தலைகளை அறுத்து, இவை அனைத்தும் கண்ட இராவணன் மனவேதனை அடையும்படிச் செய்து, அவனைக் கொன்றான். (உகந்த) – முனிவர்களின் துன்பத்தை அறுத்தோம் என்றும், விபிஷணனின் தலையிலே முடி சூட்டினோம் என்றும் மகிழ்ந்த. (செங்கண்மால்) – நமது அடியார்களின் விரோதிகளை அழித்து, அவர்களுக்கு மகிழ்வு உண்டாகினோம் என்ற சிந்தனை காரணமாக அன்பும், வாத்ஸல்யமும் திருக்கண்களில் தோன்றியபடி.

(கூராந்தவாளால் இத்யாதி) – தம்முடைய கையாலேயிறே தண்டிப்பது, ராமஸ்ய தக்ஷிணோ பாஹு: – தம்முடைய தோளாயிருக்கிற இளையபெருமாளை இடுவித்து தண்டிப்பித்தார். (கூரார்ந்த வாளால்) – கூர்மை மிக்கிருக்கிற வாளாலே. முரட்டுடம்பிலே வ்யாபரியா நின்றால் ரக்தஸ்பர்சமில்லாதபடி வ்யாபரிக்கலாம் வாள். (கொடி மூக்கும் காதிரண்டும் ஈரா விடுத்து) – பிராட்டியோடொப்பாக்கி அங்கவிசேஷங்களைப் பேணிவர, அவற்றைப் போக்கிவிட்டார். (ஈரா

விடுத்து) – வாளின் கூர்மை சொல்லுகைக்காக கூரார்ந்த வாள் என்கிறது அங்கு, ஈர்ந்தது என்கையாலே ஈருகைக்கு அரிதான உடம்பின் திண்மை சொல்லிற்று இங்கு. (ஈரா விடுத்து) – பிறந்தகத்தில் நின்றும் புக்ககத்திற்கு வந்தாற்போலன்றியே புக்ககத்தில் நின்றும் பிறந்தகத்துக்குப் போம்போது ஓராதிக்யம் பண்ணிவிட வேணுமிறே. பெருமாளை ஆசைப்படச் செய்தேயும் பிராட்டி பக்கல் அபராதம் பண்ணுகையாலே விரூபையானாளிறே. ஆகையாலே இவ்விஷயத்திலே ஆசையுண்டானாலும் ததீயர் பக்கலிலே அபராதமுண்டானால் பலிக்கும் பலம், சூர்ப்பணகை பலம் என்கை. இவளாசைப்பட்ட விஷயமிறே சிந்தயந்தியும் ஆசைப்பட்டது. இப்படி அபராதமில்லாமையாலே அவள் பெற்றுப் போனாளிறே. (விடுத்து) – தருணௌ ரூபஸம்பந்நௌ என்று கரன் காலிலே விழும்படி பண்ணி.

விளக்கம் – (கூரார்ந்த வாளால்) – இங்கு இராமன் தன் கையால் தண்டித்தான் என்று ஏன் கூறவேண்டும்? இராமாயணத்தில் (ஆரண்ய காண்டம்) – ராமஸ்ய தக்ஷிணோ பாஹு: – இராமனின் வலது கை லக்ஷ்மணன் – என்று கூறப்பட்டது. ஆக தன்னுடைய தோளாக உள்ள லக்ஷ்மணன் செய்ததை, தான் செய்தது என்று கூறலாம் அல்லவோ? (கூரார்ந்த வாளால்) – கூர்மை மிகுந்த வாள் கொண்டு. அவளது உடல் முரட்டு உடம்பாக உள்ளதால், அதனை அறுக்கும்போது கடினமாக இருக்கும், ஆகவே அவ்வாறு அறுக்கும்போது அவளது இரத்தம் தன் மீது படாமல் இருக்கவேண்டுமானால் வாள் கூர்மையாக இருந்தால், இரத்தம் படும் முன்பாக வேகமாக அறுத்துவிடும் அல்லவா? (கொடி மூக்கும் காதிரண்டும்) – தன்னுடைய மூக்கையும், காதுகளையும் சீதையுடையது போன்று மாற்றி அமைத்து வந்ததால், அவற்றை அறுத்தான். (ஈரா விடுத்து) – கூர்மையான வாள் என்று உணர்த்துவதற்காக மேலே கூரார்ந்த வாள் என்றார், அந்த வாளால் அறுப்பதற்குக் கடினமான உடல் என்று உடலின் கடினத்தை இங்கு கூறுகிறார். (ஈரா விடுத்து) – ஒரு பெண் பிறந்து வீட்டில் இருந்து புகுந்த வீடு செல்லும்போது எந்தச் சிறப்பும் செய்யாமல், புகுந்த வீட்டிலிருந்து பிறந்த வீட்டுக்குச் செல்லும்போது அவளுக்கு மேன்மையை அளிக்கும்படிச் செய்வது உலக வழக்கம். இது போல் இவளுக்கு மூக்கை அறுத்து மேன்மை செய்தார் போலும். இவள் இராமன் மீது ஆசை கொண்டது தவறில்லை என்றாலும், சீதையைப் பகைத்து இராமன் மீது ஆசைக்கொண்டதால் தனது மூக்கை இழந்தாள். ஆகவே பகவான் மீது ஆசை ஏற்பட்டாலும், அவன் அடியார்களிடம் அபராதம் செய்தால் சூர்ப்பணகைக்கு நேர்ந்த கதியே உண்டாகும் என்று அறிக. இவளைப் போன்றே சிந்தயந்தி என்னும் கோபிகை ஒருவள் கண்ணன் மீது ஆசை கொண்டாள். ஆனால் அவள் சூர்ப்பணகை போன்று பாகவத அபராதம் செய்யாமல் இருந்ததால் கண்ணனை அடைந்தாள். (விடுத்து) – இராமாயணம் கூறுவது போன்று – தருணௌ ரூபஸம்பந்நௌ – மிகவும் அழகாக உள்ளனர் – என்று இவர்களது மேன்மையைக் கூறியபடியே கரனின் கால்களில் சென்று விழும்படி செய்தனர் (கரன் என்பவன் சூர்ப்பணகையின் சகோதரன்).

(அவட்கு மூத்தோனை) – அநுகூலரானார் பக்கல் ஸம்பந்தி ஸம்பந்திகளளவும் ராகம் பலிக்குமாபோலே காணும், ப்ரதிகூலரானார் பக்கல் ஸம்பந்தி ஸம்பந்திகளளவும் த்வேஷம் பலிக்கும்படி. (வெங்நரகம் சேரா வகையே சிலை குனித்தான்) – வளைந்த வில்லுங்கையுமாய் முஷ்டியிலே நின்ற பெருமாளைக்கண்ட கரன் மேலே போய் ஒரு நரகானுபவம் பண்ண வேண்டா என்னும்படி வயிறெரித்தலோடே எல்லாவனுபவமும் இங்கே அனுபவிக்கும்படி பண்ணினான். பூர்வாச்ரமத்திலே நஞ்சீயரெழுந்தருளியிருக்கச்செய்தே திருமடலருளிச் செய்கிறபோது – பட்டர் இவ்விடத்துக்கு இவ்வார்த்தை அருளிசெய்தார் – என்று சொல்ல, – இவ்வார்த்தையருளிச்செய்தவரைக் காணவேணும் – என்று காணும் பட்டர் ஸ்ரீபாதத்தில் நஞ்சீயர் ஆச்ரயித்தது.

விளக்கம் – (அவர்க்கு மூத்தோனை) – தன்னிடம் அன்பு கொண்டவர்கள் விஷயத்தில் அவனுடைய உறவினர்கள், உறவினர்கள் என்று தொடர்ந்து பல ஸந்ததிகளிடம் எம்பெருமானுக்கு அன்பு ஏற்படுகிறது. அதே போன்று தன்னிடம் அன்பு இல்லாதவர்களிடம் அவர்கள் உறவினர்கள், அவர்கள் உறவினர்கள் என்று பல ஸந்ததிகளிடம் பகவானுக்குக் கோபம் ஏற்படுகிறது. (வெங்நரகம் சேரா வகையே சிலை குனித்தான்) – வளைந்தவில்லும் கையுமாய் நின்ற இராமனைக் கண்ட கரனுக்கு அதற்கு மேல் அனுபவிக்க வேண்டிய நரகம் ஒன்றும் இல்லை என்று கூறும்படி, அனைத்துத் துயரங்களையும் இங்கேயே அனுபவித்தான். நஞ்ஜீயர் ஒருமுறை பட்டரின் சிஷ்யர் ஒருவரிடம் – இந்த இடத்தில் பட்டர் எந்த முறையில் விளக்கம் அளித்திருப்பார்? – என்று கேட்டார். அதற்கு அந்த சிஷ்யர் – மேலே கூறியபடி இராமனை வில்லும் கையுமாகக் கண்ட கரன் நரகத்தை இங்கேயே அனுபவித்தான் என்பது பட்டர் அருளிச்செய்த கருத்தே ஆகும் – என்றார். இதனைக் கேட்ட நஞ்ஜீயர் – இப்படிப்பட்ட பட்டரை நான் உடனே காண வேண்டும் – என்று கூறி பட்டரின் திருவடிகளில் விழுந்தார்.

(செந்துவர்வாய் இத்யாதி) – கரவதத்தினன்று, போய்ச்சொல்லுகைக்கு ஆளில்லாதபடி அகம்பநனெருவன் தப்பிப் பெண்ணுடையுடுத்துப்போய், ராவணனுக்கு பிறந்த வ்ருத்தாந்தத்தை அறிவிக்க, அவர் மாரீசனையுங் கூட்டிக்கொண்டுவந்து பிராட்டியையும் பெருமாளையும் கடலுக்கு அக்கரையும் இக்கரையுமாக உடலையும் உயிரையும் பிரித்தாற்போலே பிரிக்க, அதுவே ஹேதுவாக ராவணனை நிரஸித்தபடி சொல்லுகிறது மேல்.

விளக்கம் – (செந்துவர்வாய் இத்யாதி) – கரன் கொல்லப்பட்ட விஷயத்தை இராவணனிடம் சென்று கூறுவதற்குக் கூட ஆள் இல்லை. அதனால் அகம்பனன் ஒருவனே பெண் போன்று ஆடை அணிந்து, இராமனிடம் இருந்து தப்பி, இராவணனிடம் சென்று இந்த விஷயத்தைத் தெரிவித்தான். உடனே இராவணன் மாரீசனைக் கூட்டி வந்தான். உடலையும் உயிரையும் பிரித்தது போன்று கடலுக்கு அக்கரையும் இக்கரையுமாக, இராமனையும் சீதையையும் பிரித்தான். இந்தச் செயலே இராவணனை அழிக்கக் காரணமாக உருவெடுத்த விதத்தை இனி கூறுகிறார்.

(செந்துவர்வாய்) – ஜகத் ஸசைலம் பரிவர்த்தயாமி – நாட்டிற்குத் தண்ணீர்ப்பந்தல்போலே ரக்ஷகராகக் கண்ட பெருமாள் – நாட்டையழிப்பன் – என்னப்பண்ணின முறுவலிறே. புரேவ மே சாருததீமநிந்திதாம் – மானைக்கண்ட போது – பெருமாளே. இம்மானைப் பிடித்துத் தரவேணும் – என்று இரப்போடே கூடின முறுவலோடே காட்டார்களாகில் லோகத்தையெல்லாம் கூட்டிக் குலையாக அறுத்துப் போகவிடுவன் என்றாரிறே. (வாரார் வனமுலையாள்) – மலராள் தனத்துள்ளான் என்று பெருமாள் கிடக்குமிடமிறே. (வைதேவி) – விதேஹஸுதாம் என்று பெருமாள் வாய்புலற்றுங் குடிப்பிறப்பிறே. (காரணமா) – அவள் ஹேதுவாக. (ஏரார் தடந்தோளிராவணனை) – ஒன்றுக்கும் விக்ருதனாகாத திருவடியும் அஹோ ரூபமஹோ தைர்யம் என்று விக்ருதனாம்படி வடிவுபடைத்தவனிறே ராவணன். (ஈரைந்து சீரார்சிரமறுத்து) – பத்துத்தலையையும் ஒருகாலே அறாதே ஐயைந்தாக அறுத்து லீலைகொண்டாடினபடி. (சீரார் சிரமறுத்து) – அறுப்புண்டு விழுகிற தலைகளும் ரஞ்ஜநீயஸ்ய விக்ரமை: என்று பெருமாள் வீரப்பாட்டைக்கண்டு சிரித்துக்கொண்டு விழுகிறபடி. அறுப்புண்டு விழுந்த தலைகளைக் கழுகும் பருந்தும் இசிக்கக்கண்டு நிற்கிற தலைகள் – நாம் முற்பாடராகப் பெற்றிலோம் – என்றாசைப்படுகிறபடி. (செற்று) – வந்தானை ஓரம்பாலே கொல்லாதே, சதுரங்கபலத்தைக் கொன்று குதிரைகளைக் கொன்று ஸாரதியைக் கொன்று தேரையழித்துக் கொடியையறுத்து தலையைச் சிரைத்துத் தோள்களைத் துணித்துத் தலைகளையறுத்து இவற்றையெல்லாங்கண்டு அவன் நெஞ்சாறல் படும்படி பண்ணி, பின்னை அவனைக் கொன்றபடி. (உகந்து) – ருஷிகளுக்குக் களையறுக்கப் பெற்றோம் என்றும், ஸ்ரீவிபீஷணாழ்வான் தலையிலே அபிஷேகம் பண்ணப்பெற்றோம் என்றும் உகந்த. (செங்கண்மால்) – ஆஸ்ரித விரோதிகளைப்போக்கி, அவர்களுக்கு உகப்பாகப் பெற்றோம் என்று வ்யாமோஹமும் வாத்ஸல்யமும் திருக்கண்ணிலே தோற்றினபடி.

விளக்கம் – (செந்துவர்வாய்) – இராமாயணம் (ஆரண்ய காண்டம்) – ஜகத் ஸ சைலம் பரிவர்த்தயாமி – சீதையை மீண்டும் என்னிடம் சேர்க்கவில்லை என்றால் இந்த உலகைத் தலைகீழாகக் கவிழ்த்து விடுவேன் – என்று, உலகிற்கே தண்ணீர்ப்பந்தல் போன்று காப்பாற்றும் இராமன், நாட்டை அழிப்பதாகக் கூறும்படிச் செய்தது சீதையின் புன்னகை அல்லவா? மானைக்கண்டபோது என்னிடம் (இராமன்) – பெருமானே. இந்த மானைப் பிடித்துத் தரவேண்டும் – என்று அப்பாவியாகக் கேட்ட சீதையின் புன்னகையை எனக்குக் காண்பிக்கவில்லை என்றால் இந்த உலகம் அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்து, வாழைக்குலை போல் அறுத்து விடுவேன் – என்றான் அல்லவா? (வார் ஆர் வனமுலையாள்) – மூன்றாம் திருவந்தாதி (3) கூறுவது போன்று – மலராள் தனத்துள்ளான் – என்பதற்கு ஏற்ப இராமன் உள்ள இடமாகும் இவளது ஸ்தனங்கள். (வைதேவி) – விதேஹ ஸுதாம் – என்று இராமனும் பிரமிக்கும் குடிப்பிறப்பைக் கொண்டவள் அல்லவா? (காரணமா) – இத்தகைய பெருமை நிறைந்த அவள் காரணமாக. (ஏரார் தடம் தோள் இராவணனை) – இராமனையும் சீதையையும் தவிர வேறு யாரையும் மதிக்காத அனுமன் – அஹோ ரூபம் அஹோ தைர்யம் – என்ன ஒரு உருவம், என்ன தைர்யம் – என்று வியக்கும்படியான உருவம் கொண்ட இராவணன். (ஈரைந்து சீரார் சிரம் அறுத்து) – அவனுடைய பத்துத் தலைகளையும் ஒரே நேரத்தில் அறுத்து எறிந்தால், தான் (இராமன்) அவன் தலையை அறுப்பதை அவனால் (இராவணால்) கண்டு ரசிக்க முடியாது என்று கருதி, ஐந்து ஐந்து ஆக அறுத்தான். (சீரார் சிரம் அறுத்து) – அப்படி அறுந்து விழும் தலைகள் – ரஞ்ஜநீயஸ்ய விக்ரமை: – வீரச் செயல்களால் புகழத்தக்கவனான இராமனை – என்று இராமனுடைய வீரத்தைக் கண்டு சிரித்தபடியே தரையில் விழுந்தன. அறுந்து

விழுந்த தலைகளைக் கழுகும் பருந்தும் உண்பதைக் கண்டு, எஞ்சி இருந்த மற்ற தலைகள் – நாம் முன்னரே விழுந்திருக்கலாமே – என்று ஆசையுடன் நின்றன. (செற்று) – இராவணனை ஓர் அம்பினால் கொல்லாமல், நான்கு அங்கங்கள் கொண்ட சேனையை அழித்து, குதிரைகளைக் கொன்று, தேர்ப்பாகனைக் கொன்று, தேரை அழித்து, தேர்க்கொடியை அறுத்து, தலை முடியைச் சிரைத்து, தோள்களை வெட்டி, தலைகளை அறுத்து, இவை அனைத்தும் கண்ட இராவணன் மனவேதனை அடையும்படிச் செய்து, அவனைக் கொன்றான். (உகந்த) – முனிவர்களின் துன்பத்தை அறுத்தோம் என்றும், விபிஷணனின் தலையிலே முடி சூட்டினோம் என்றும் மகிழ்ந்த. (செங்கண்மால்) – நமது அடியார்களின் விரோதிகளை அழித்து, அவர்களுக்கு மகிழ்வு உண்டாகினோம் என்ற சிந்தனை காரணமாக அன்பும், வாத்ஸல்யமும் திருக்கண்களில் தோன்றியபடி.

(தடமால் வரை இத்யாதி) – ப்ரயோஜநாந்தரபரர் கார்யஞ்செய்தபடி சொல்லிற்றுக்கீழ், அநந்ய ப்ரயோஜநனான ஸ்ரீ கஜேந்த்ராழ்வான் முதலையின் கையிலே அகப்பட, அவனகப்பட்ட மடுவின் கரையிலே அரைகுலையத் தலை குலைய வந்து விழுந்து, அவன் விரோதியைப் போக்கி அவனபிமதம் செய்துகொடுத்தபடி சொல்லுகிறது மேல். (தடமால் வரைபோலும்) – தடம் என்றும் மால் என்றும் சொல்லுகையாலே, பருத்து உயர்ந்த மலைபோலே இருக்கிறவன். இப்பெருமை சொல்லுகிறது இங்கு என்னென்னில், பெரியது நோவுபட்டால் ஆற்றமாட்டாதென்கைக்காக. (பேரானை) – யுத்தோந்முகனாய்த் திரிகிறானன்றிறே, செருக்காலே மலைகளோடே பொருது திரிகிறபடி.

விளக்கம் – (தடமால்) – பலனை விரும்பி இவனது திருவடிகளை அண்டிய தேவர்களுக்காக இவன் செய்த செயல்களை கீழே கூறினார். எந்தப் பலனையும் எதிர்பாராமல் நின்ற ஸ்ரீகஜேந்திரன், முதலையில் பிடியில் அகப்பட்டான். அப்படி இவன் சிக்குண்ட மடுவின் கரைக்கு, இடுப்பில் கட்டப்பட்டிருந்த பட்டாடை நழுவும்படியாகவும், அழகான கேசங்கள் கலையும்படியாகவும் விழுந்தடித்துக் கொண்டு ஓடிவந்து, அவனது விரோதியை அழித்து, அவனது கைங்கர்யத்தை ஏற்று, தன்னையே அளித்த விதத்தை கூறுகிறார். (தடமால்) – தடம் என்றும் மால் என்றும் கூறுவதால் பருத்த, உயர்ந்த மலையைப் போன்ற யானை எனக் கொள்ள வேண்டும். இங்கு யானையின் உடல் இத்தனை பெரியது என்று அதன் பெருமையை ஏன் கூற வேண்டும்? இத்தனை பெரிய உடல் கொண்ட யானைக்கு வேதனை வந்தால், அந்த வேதனை எத்தனை பெரியதாக இருக்கும் என்று விளக்கவே ஆகும். (போரானை) – மற்றவர்களுடன் ஸ்ரீகஜேந்த்ரன் தானாகவே சென்று போர் புரிய வல்லவன் என்று பொருள் கொள்ளக் கூடாது. தன்னுடைய மதம் காரணமாக மலைகளை முட்டியபடி நின்றதைக் கூறினார்.

(பொய்கைவாய்) – வெளி நிலமாகில் எதிரிகளைத் துணிக்குமிறே. தன்னிலமல்லாத நீர் நிலத்திலே. (கோட்பட்டு) – சத்ருவான முதலையின் கையிலே அகப்பட்டு. (நின்று) – அவன் நீருக்கு இழுக்க இவன் கரைக்கு இழுக்க, சில நாளெல்லாஞ்சென்று முதலையின் வ்யாபாரமேயாய்த் தன் வ்யாபாரமற்று நின்றபடி. (நீரார் மலர்க் கமலங்கொண்டோர் நெடுங்கையால்) – செவ்வி மாறாத தாமரைப்பூவைப் பிடித்த கையத்தனையுமொழிய நீரிலே அழுந்தினானாயிற்று. (நாராயணா ஓ) – ஸர்வ ஸ்வாமியானவனே என்றபடி. (மணிவண்ணா) – விடாய்த்தார்க்குத் தண்ணீர் வார்க்குமவனன்றோ நீ. இவ்வடிவை ஆசைப்பட்டார்க்குக் காட்டுமவனன்றோ நீ என்கை. (நாகணையாய்) – உன்னுடம்பை ஆசைப்பட்டார்க்குக் கொடுக்குமவனல்லையோ நீ என்றான். (வாராய்) – என்னுடைய ஆர்த்தி தீரும்படி அழகிய வடிவைப் பாரித்துக்கொண்டு இங்ஙனே எழுந்தருளவேணும். (என் ஆரிடரை நீக்காய்) – இப்போது இவன் ஆரிடர் என்கிறது, துக்க நிவ்ருத்தியைப் பண்ணாய் என்கிறானல்லன், இப்பூ செவ்வி மாறுங்காட்டில் திருவடிகளிலே இடுவித்துக் கொள்ளாயென்றபடி.

விளக்கம் – (பொய்கைவாய்) – தன்னுடைய இடமாக இருந்தால் எதிரிகளை அழிக்கும் வலிமை கொண்டவன், ஆனால் தனக்கு உரிமையான இடம் அல்லாத நீரில் அகப்பட்டான். (கோட்பட்டு) – எதிரியான முதலையின் வாயில் பிடிப்பட்டு. (நின்று) – முதலை இவனை நீருக்குள் இழுக்க, இவன் முதலையை கரைக்கு இழுக்க, இப்படியே பல நாட்கள் கழிந்த பின், முதலை வெற்றி கொள்ள, தான் சக்தி அற்று நின்றான். (நீரார்) – மலர்ச்சி மாறாமல் இருந்த தாமரையை, தூக்கிப்பிடித்த தன்னுடைய துதிக்கை தவிர, தனது முழு உடம்பும் நீரில் மூழ்கிய நிலையில் நின்றான். (நாராயணா ஓ) – அனைவருக்கும் ஸ்வாமியானவனே. (மணிவண்ணா) – தாகம் எடுத்தவர்களுக்கு இதம் அளிக்கும் தண்ணீர் போன்று, இந்த உலகில் ஸம்ஸார துன்பத்தால் வருந்துபவர்களுக்கு உனது திருமேனியை அளிப்பவனே. அத்தகைய திருமேனியைக் காணும் விருப்பம் கொண்டவர்களுக்கு உனது திருமேனியைக் காண்பிப்பவன் அல்லவோ நீ. (நாகணையாய்) – உனது திருமேனியை அனுபவிக்கும் ஆசை கொண்ட ஆதிசேஷனுக்கு அதனை அளித்தவன் அல்லவா நீ. (வாராய்) –

என்னுடைய துன்பம் அனைத்தும் நீங்கும் விதமாக, உனது அழகான திருமேனியுடன் இங்கு எழுந்தருளவேண்டும். (என்) – இவன் ஆரிடர் – பெரிய துன்பம் – என்று கூறுவது, தனக்கு நேர்ந்த துன்பத்தை விலக்க வேண்டும் என்பதற்காகக் கூறவில்லை, தான் கையில் பிடித்துள்ள தாமரையின் மலர்ச்சி மாறுவதற்குள்ளாக அவனது திருவடியில் அந்த மலரை அவன் சேர்த்துக் கொள்ளவில்லை என்றால், தனது கைங்கர்யம் தடைபட்டு விடுமே என்பதையே துன்பமாகக் கூறுகிறான்.

(என) – என்று இப்ரகாரத்திலே இவன் சொல்ல. (என வெகுண்டு) – ஸர்வேச்வரன் இவ்வார்த்தை செவிப்பட்டவாறே கோபித்தருளினான். (தீராத சீற்றத்தால்) – முதலையின் கையிலே அகப்படக்கொடுத்து, அகப்பட்டவன் நோவுபட்டதுக்குப் பின்பு அவனை ரக்ஷித்து என் செய்தோமானோம் என்று இன்னும் தீராதே கிடக்கிறதிறே. (சீற்றத்தால் சென்று) – வாஹநத்தின் மேலன்று போலே காணும் சென்றது, கோபம் வழிகாட்டச் சென்றானித்தனை, தானறிந்து சென்றானன்று காணும். (இரண்டு கூறாக ஈரா) – ஆனைக்கும் நோவு வராமல் முதலையை ஒரு பிளவாம்படி திருவாழியாலே பிளந்தருளினபடி. (அதனை இடர் கடிந்தான்) – அப்படி நோவுபட்டிருக்கிற ஸ்ரீகஜேந்திராழ்வானை, அம்முதலை பிடித்த ஸ்ரீபாதத்தைத் தன் திருக்கைகளாலே ஒத்துவதானான், திருப்பவளத்தாலே ஊதுவதும் திருப்பரிவட்டத் தலையாலே ஒத்துவதானான். (எம்பெருமான்) – ஸ்ரீகஜேந்திராழ்வானுக்கன்றிக்கே இவள் தான் பெற்றாளாம்படி தோற்ற இக்கட்டுவிச்சி என் நாயனே என்கிறாள்.

விளக்கம் – (என) – இப்படி அந்த யானை கூற (என வெகுண்டு) – இந்தச் சொற்கள் தன்னுடைய திருச்செவியில் விழுந்தவுடன் ஸர்வேச்வரனுக்கு மிகுந்த கோபம் உண்டானது. (தீராத சீற்றத்தால்) – ஏன் கோபம் என்றால், இந்த யானை முதலையின் பிடியில் அகப்படும்வரை நான் இருந்து விட்டு, அவன் அகப்பட்டபின், அவனுக்குத் துன்பம் உண்டான பின், அவனைக் காத்து என்ன பயன் – என்று எண்ணியதால் ஆகும். (சீற்றத்தால்) – இவன் சென்றதைக் கண்டால் கருடவாகனத்தின் மீது செல்லவில்லை போலும், கோபத்தையே வாகனமாகக் கொண்டு சென்றது போல் இருந்தது. தானாகவே கஜேந்திரன் உள்ள இடம் அறிந்து செல்லவில்லை, இவனது கோபம் வழிகாட்ட, அதனைத் தொடர்ந்து சென்றான். (இரண்டு கூறாக ஈரா) – யனைக்கு எந்தப் பாதிப்பு வராமல், முதலையை இரண்டாகப் பிளக்கும்படித் தனது திருச்சக்கரத்தை விடுத்தான் (அதனை இடர் கடிந்தான்) – இவ்விதமாகத் துன்பப்பட்ட கஜேந்திரனை, அந்த முதலை பிடித்திருந்த கஜேந்திரனின் திருவடியைத் தனது திருக்கைகளால் ஒற்றிக் கொடுத்தான். தனது திருவாயால் மெதுவாக ஊதினான், மென்மையான தனது திருபரிவட்டத்தை அவிழ்த்து, அதன் தலைப்பால் ஒற்றிக் கொடுத்தான். (எம்பெருமான்) – இப்படி கஜேந்திரன் பெற்ற பேற்றை இந்தக் கட்டுவிச்சி, தானே பெற்றதாக எண்ணி, என் அப்பனே என்று கூறினாள்.

(பேராயிரமுடையான்) – இப்படி ஆஸ்ரித ரக்ஷணத்துக்காகச் செய்த அபதாநங்களுக்கு வாசகமான திருநாமங்கள் எண்ணிறந்தவற்றை உடையவன். ஆஸ்ரிதர் இவ்விஷயத்தில் இழிகைக்குப் பல துறையுண்டானாற்போலே, அவர்களது ஸந்திக்கைக்கும் பல திருநாமங்களையுடையவன்.

விளக்கம் – (பேர் ஆயிரம் உடையான்) – இப்படியாகத் தனது அடியார்களைக் காப்பதற்காக செய்த எண்ணற்ற செயல்களை விளக்கவல்ல, எண்ணற்ற திருநாமங்கள் கொண்டவன். இவனைப் பற்றி இவனது அடியார்கள் ஈடுபடுவதற்கு எண்ணற்ற தன்மைகள் உள்ளது போன்று, அவர்கள் கூறி மகிழ பல திருநாமங்கள் கொண்டவன்.

(பேய்ப்பெண்டீர்) – ஸர்வேச்வரனடியாக வந்தது இந்நோய் என்றாலும், தேவதாந்தரஸ்பர்சமுண்டு என்று அதிசங்கை பண்ணுகிற அறிவு கேடிகளிறே நீங்கள். (நும் மகளை) – உங்கள் வயிற்றிலே பிறந்தவளை. உங்கள் வயிற்றில் பிறந்தவள் பரதேவதைக்கு நோவு படுமித்தனையல்லது அவர தேவதைக்கு நோவுபடுமோ? (தீரா நோய் செய்தானெனவுரைத்தாள்) – இந்நோய் தீரும்படியென்னென்று விசாரிக்கிறவர்களுக்கிறே தீரா நோய் செய்தான என்கிறது. இவளுக்கு ஸர்வேச்வரனடியாக வந்த நோயாகிறது தீரிற்செய்வதென் என்று அவர்கள் பயப்படுகிறார்களாகக் கருதி தீரா நோய் என்கிறாள் காணும். இப்போது தீராநோய் என்கிறது பக்தியையிறே. யாவதாத்மபாவியான நோயிறே. ப்ராப்திதசையிலும் அநுவர்த்திக்குமிறே.

விளக்கம் – (பேய் பெண்டீர்) – இவளுக்கு வந்துள்ள இந்த நோய் எம்பெருமானை இவள் பெறாமல் உள்ளதாலேயே ஆகும். ஆனால் நீங்களோ உங்கள் அறிவிழந்து, இவளுக்கு மற்ற தேவதைகளின் தீண்டுதலால் இந்த நோய் வந்ததோ என்று சந்தேகம் கொள்கிறீர்கள்.

(னும் மகளை) – உங்கள் வயிற்றில் பிறந்த இவள் பரம்பொருளுக்காக ஏங்குவாளே அல்லாமல் மற்ற தேவதைகளுக்காக ஏங்குவாளோ? (தீரா நோய் செய்தான் என உரைத்தாள்) – கட்டுவிச்சியிடம் அங்கு உள்ள மற்றவர்கள், இந்த நோய் எவ்விதம் தீரும் என்று விசாரித்தனர். அதற்குக் கட்டுவிச்சி, நீங்காத நோய் அல்லவா எம்பெருமான் கொடுத்துவிட்டான், என்றாள். அதற்கு அவர்கள், ஸர்வேச்வரன் மூலமாக வந்த இந்த நோய் மறைந்தால் என்ன செய்வது, என்று அச்சத்துடன் கேட்டனர். அதற்குக் கட்டுவிச்சி அவர்களிடம், இது தீராத நோய் என்றும், ஆத்மா உள்ளவரை, பரமபதத்தை அடைந்த பின்னரும் இந்த நோய் தொடரும், என்றாள்.

(எனவுரைத்தாள்) – தென்றலும் சிறுதுளியும் பட்டாற்போலே இருக்கிறது காணும் தனக்கினிதானபடி. (உரைத்தாள்) – என்றும் இந்நோய் கொண்டாலாகாதோ இவள் புகுந்து இப்படி பரிஹாரஞ் சொல்லப் பெறில்?

விளக்கம் – (என உரைத்தாள்) – கட்டுவிச்சியின் இந்தச் சொற்கள் நாயகிக்கு தென்றல் போலவும், தென்றலில் கலந்து வரும் மழைத்துளி போன்றும் இனிதாக உள்ளன. (உரைத்தாள்) – இவ்விதம் கட்டுவிச்சியின் இனிமையான சொற்களைக் கேட்பதற்கு வாய்ப்பு அளிக்கும் என்பதற்காக இந்த நோய் ஏற்படுவதில் தவறில்லை என்று நாயகி நினைத்தாள்.

கட்டுவிச்சி அப்படி சொன்னாளாகில், உங்கள் தாய்மார் செய்ததென்னென்னச் சொல்லுகிறாள் மேல். (சிக்கென மற்றாரானுமல்லாமை கேட்டெங்களம்மனையும்) – இந்த நோவு பேராயிரமுடையானடியாக வந்தது என்று சொன்னாள் கட்டுவிச்சி. என்னைப் பெற்ற தாயாரும், தேவதாந்தர ஸ்பர்சமில்லையிறே என்று பலகாலுங்கேட்டு. (போரார் வேல்கண்ணீர் அவனாகில் பூந்துழாய் தாராதொழியுமே) – பெண் பிள்ளைகள் பதறுகிற பதற்றத்தைக் கண்டு – நோவுக்கு நிதானம் ஸர்வேச்வரனானபின்பு, நீங்கள் இப்படி பதறவேணுமோ? புவனியெல்லாம் நீரேற்றளந்த நெடியபிரான் அருளாவிடுமே என்னுமாபோலே அவனாகையும் நம்முடைய அபேக்ஷிதம் செய்யானென்கையும் அக்நிநா ஸிஞ்சேத் போலே அஸங்கதமன்றோ? ராமோ த்விர்நாபிபாஷதே இதிவத். (தன்னடிச்சியல்லளே) – அபேக்ஷிதமானவை தானாகச் செய்யாதொழிந்தாலும் காலைக்கட்டியாகிலும் செய்வித்துக்கொள்ள ப்ராப்தியில்லையோ? என்று இப்படி தோழிமார்க்குச் சொல்லி. (மற்றாரானுமல்லனே யென்று) – தேவதாந்தரமான நாய் தீண்டிற்றில்லையிறே என்று தானே தெளிந்து நிர்ப்பரையானாள். எம்பெருமானோடே ஸம்பந்தமுடைய இவளுக்கு நான் கரைய வேணுமோ? என்று தளப்பமற்றாள். என்று அவள் செய்ததென்? என்னில், (ஒழிந்தாள்) – ஒழிந்தாள்.

விளக்கம் – கட்டுவிச்சி இவ்விதம் சொன்னதைக் கேட்டு உனது தாய்மார்கள் என்ன செய்தனர் என்று நாயகியிடம் கேட்க, அவள் கூறத் தொடங்கினாள். (சிக்கென மற்று ஆரானும் அல்லாமை கேட்டு எங்கள் அம்மனையும்) – இந்த நோயானது ஆயிரம் திருநாமங்களுடைய எம்பெருமானால் வந்தது என்று கட்டுவிச்சி கூறினாள். இதனைக் கேட்ட எனது தாயார் அவளிடம் என்னை வேறு ஒரு தெய்வமும் பீடிக்கவில்லையே என்று பலமுறை கேட்டு சமாதானம் அடைந்தாள். (போரார் வேல் கண்ணீர் அவனாகில் பூந்துழாய் தாராது ஒழியுமே) – தன் அருகில் உள்ள தன் மகளின் மற்ற தோழிகளின் பதற்றம் கண்டு அவர்களிடம் எனது தாய், இவளது இந்த நோய்க்குக் காரணம் ஸர்வேச்வரனே என்று அறிந்த பின் ஏன் இந்தப் பதற்றம்? திருவிருத்தத்தில் (69) கூறுவது போல – புவனியெல்லாம் நீரேற்ற அளந்த நெடியபிரான் அருளாவிடுமே – இவளை அவனே வந்து பற்றி உள்ளதால், இவளது விருப்பத்தை அவன் செய்யமாட்டான் என்று கூறுவது முரண்பாடு அல்லவா? நீங்கள் இவ்விதம் பதறுவது – அக்நிநா ஸிஞ்சேத் – நெருப்பால் நனைக்க வேண்டும் – என்று கூறுவது போல் முரணாக உள்ளதே. இராமன் – இராமோ த்விர் ந அபி பாஷதே – இருவகையாகப் பேசமாட்டான் – என்று அவனே கூறினான் அல்லவா? (தன் அடிச்சி அல்லளே) – இப்படியாக இவள் கேட்டதை அவன் அளிக்கவில்லை என்றாலும், அவனது திருவடியைக் கட்டி அணைத்து நிறைவேற்றிக் கொள்ளும் உறவு இவளுக்கு உள்ளது அல்லவா? என்று மகளின் தோழிகளிடம் கூறினாள். மற்ற தெய்வங்கள் என்று எந்த நாயும் தனது மகளைத் தீண்டவில்லை என்று மனம் தெளிவு அடைந்து, சமாதானம் ஆனாள். எம்பெருமானுடன் தொடர்பு உடைய இவளுக்காக நான் வருந்த வேண்டிய அவசியம் இல்லை என்று மனவுறுதி குலையாமல் நின்றாள். இப்படியாகச் சொல்லி அவள் செய்தது என்னவென்றால், தனது மகளைப் பற்றிய கவலையை ஒழித்தாள்.

(நான்) – என் பந்தாடலிலே அவனைக் கையும் மடலுமாகக் காணக்கடவதாக உத்யோகித்துப் புறப்பட்டு, அவன் குடக் கூத்திலே தோற்ற நான். (அவனை) – தன் வடிவழகைக்காட்டி என்னை அநங்யார்ஹையாக்கினவனை. (காரார் திருமேனி கண்டதுவே காரணமாக) – அவனுடைய ச்ரமஹரமான திருமேனியைக் கண்டதுவே ஹேதுவாக. ரிஷிகளையும் ஆழ்வார்களையும் போலேயாயிற்று திருத்தாயாரும் இவளும், அவன் ஸ்வரூபகுண ஞானமாயிற்று ரிஷிகளுக்கு, திவ்யவிக்ரஹத்திலும் விக்ரஹகுணத்திலுமாயிற்று ஆழ்வார்களுக்கு. குணஞானத்தில் அகப்பட்டார்க்கு ஆற்றலாமிறே. வடிவழகில் அகப்பட்டார்க்கு ஆற்றவொண்ணாதிறே. அப்படி குணஜ்ஞானமுடையவளாயிற்று திருத்தாயார், ஆகையாலே தரித்திருந்தாள், அவ்வடிவழகிலே அகப்பட்டவர்களுக்குப் பெற்றல்லது தரிக்கவொண்ணாதிறே. (போரா) – ஆண் பெண்ணானபடி. (பதற்றா) – பெண்ணான தன்மையைத்தானும் இழந்தபடி. (திரிதருவன் பின்னையும்) – பின்னையும் அடக்கம் குடிபோனால் நசிக்கவிறேகண்டது, அப்படிச்செய்யாதே யாதநாசரீரம் போலே பின்னையுந்திரிந்தேன். (ஈராப்புகுதலும்) – புகுந்த ஈருகிறதில்லை, ஈர்ந்துகொண்டு புகுராநின்றது. (இவ்வுடலை) – பண்டே தொட்டார்மேலே தோஷமாம்படி விரஹக்ருசமான உடலையென்னுதல், பிரிவுக்குச் சிளையாத உடம்பென்னுதல். (தண்வாடை) – நஞ்சூட்டின ஆயுதம் போலே குளிர்த்தியையுடைத்தான வாடை. (சோரா மறுக்கும்) – சோரவும் பண்ணாநின்றது. மறுக்கவும் பண்ணா நின்றது. (வகையறியேன்) – திரள சோரப்பண்ணா நின்றதென்று சொல்லுமித்தனையொழிய செய்கிற வகைகள் பேச்சுக்கு நிலமல்ல.

விளக்கம் – (நான்) – எனது பந்தாட்டம் மூலம் அவனை மயங்க வைத்து, அவன் மடலும் கையுமாக என் அருகில் வரும்படிச் செய்வேன் என நான் புறப்பட்டேன். ஆனால் அவனது குடக்கூத்து கண்டு நான் தோற்றேன். (அவனை) – தனது திருமேனியின் அழகைக் காட்டி, அவனைத் தவிர மற்ற எந்த நினைவும் எனக்கு வராதபடி செய்த அவனை. (காரார் திருமேனி கண்டதுவே காரணமா) – காண்பவர்களின் களைப்பை நீக்கவல்ல திருமேனியை இவள் கண்டதே காரணமாக. அவனது ஸ்வரூபம் மற்றும் குணங்களின் ஈடுபட்ட முனிவர்கள் போன்று இவளது தாய் இருந்தாள். இவனது திவ்ய விக்ரஹத்திலும், அந்த விக்ரஹத்தின் குணங்களிலும் ஈடுபட்டதால் இவளது தாயார் தப்பிவிட்டாள். ஆனால் இவனது திருமேனியின் அழகில் ஈடுபட்டதால், அதனைப் பெறாமல் தாங்க இயலாது அல்லவா? (பேரா) – திருமங்கை மன்னன் என்னும் ஆண், பரகால நாயகி என்ற பெண்ணாக மாறியபடி. (பிதற்றா) – பெண்மைக்கு உரிய தன்மைகளை இழந்தபடி. (திரிதருவன் பின்னையும்) – பெண் என்பவள் தனது அடக்கத்தை இழந்து பின் உயிரை விடுவதே சிறந்தது, ஆனால் அப்படியும் நான் செய்யாமல், நரகத்திற்குள் புகுவதற்காக யாதனாசரீரம் என்னும் ஒரு வகையான உடலை எடுப்பது போன்று, இந்த உடலுடன் திரிந்தேன். (ஈராப்புகுதலும்) – தென்றல் காற்றாவது உள்ளே புகுந்து உடலைப் பிளக்காமல், உடலைப் பிளந்து உள்ளே புகுந்து. (இவ்வுடலை) – விரகத்தின் காரணமாக மெலிந்த உடலானது, யாராவது தொட்டாலே அவர்கள் மீது கொலைப்பழி விழும்படி, உயிர் போகும் நிலையில் உள்ள உடலை. (தண் வாடை) – விஷம் தடவப்பட்ட ஆயுதம் போன்று, குளிர்ச்சியால் தடவப்பட்ட தென்றல் காற்று. (சோரா மறுக்கும்) – என்னை மயக்கும்படியும் செய்கிறது. (வகை அறியேன்) – இந்தக் காற்று என்னை எப்படித் துன்பம் செய்கிறது என்று விளக்க முடியாதபடி உள்ளது.

(சூழ் குழலார்) - வாடை உடம்பிலே பட்டாலும், மயிர் முடியும் அழகும் கலையாதேயிருக்குமவர்கள். (ஆரானும்) - என் செயல் பொல்லாதென்று இருக்கக் கடவாரில்லை; எங்கனும் சிலவரென்கை. அவ்யுத்பந்நருமாய் அவ்யபதேச்யருமாய் இருப்பார் சிலரென்கை. (ஏசுவரென்னுமதன் பழியை) - அவர்கள் அலர்தூற்ற அத்தால் வரும் பழியை. இவளாற்றாமைக்கு அவனுதவினபடி பொல்லாதென்னுதல், அவன் பிரிந்தால் இவள் ஆறியிராதே இங்ஙனே படுகிறதென்னென்னுதல் செய்வர்களிறே. (வாராமல் காப்பதற்கு) - அவன் ஸ்வரூபத்துக்கும் நம் ஸ்வரூபத்துக்கும் நிறக்கேடு வாராமைக்கு. (வாளாவிருந்தொழிந்தேன்) - குனியக் குறுணி பற்றுகிற காலத்திலே, இரண்டு மருங்கும் மனிசர் காண மடலைக்கொண்டு புறப்படப்பெறாதே அருமந்த காலத்தைப் பாழேபோக்கினேன்.

விளக்கம் - (சூழ் குழலார்) - தென்றல் காற்றானது உடலில் பட்டாலும் தலைமுடியும் அழகும் கலையாமல் இருக்கும் பெண்களில். (ஆரானும்) – எனது இந்தச் செயலானது தவறு என்று கருதக் கூடியவர்கள் இங்கு யாரும் இல்லை. நான் அறியாமல் இவ்விதம் நினைப்பவர்கள் ஒரு சிலர் இருக்க்க்கூடும். அப்படிப்பட்டவர்கள் அறிவற்றவர்களாகவும், என்ன பேசுவது என்று அறியாதவர்களாகவும் இருப்பவர்கள் ஆவர். (ஏசுவர் என்னுமதன் பழியை) – அப்படிப்பட்டவர்கள் இவளையும், இவளது நாயகனையும் தவறாகப் பேச, அதனால் வரும் பழிச்சொல்லை. அவர்கள் பழிப்பது எப்படி என்றால், “இவள் இவ்விதம் துன்பப்படும்போது அவன் உதவி செய்வது நன்றாகவே உள்ளது”, என்றும், “அவனை விட்டுப் பிரிய நேர்ந்தால் பொறுத்துக் கொள்ளாமல், இவள் படும்பாடு நன்றாகவே உள்ளது”, என்றும் கூறுவதாகும். (வாராமல்) - இப்படிப்பட்ட பழிச்சொற்கள் அவனது மேன்மைக்கும், எனது மேன்மைக்கும் தாழ்வு ஏற்படுத்தாமல் இருப்பதற்காக. (வாளா இருந்து ஒழிந்தேன்) – கீழே குனிந்தாலே எளிதாக நெல் கிடைக்கும்போது அதனை விடுத்துப் பட்டினி இருப்பவர்கள் போன்று, இரண்டு வரிசைகளில் நின்றபடி மனிதர்கள் பார்த்துக்கொண்டுள்ளபோதே, மடலை எடுத்துக் கொண்டு அவன் அருகில் செல்லாமல் பழிக்கு அஞ்சி நின்றேன்.

(வாராய்) – எழுந்திராய். (மடநெஞ்சே) - இப்போது ”பவ்யமான நெஞ்சே!” என்றபடி. அவனை நோக்கி எல்லாமுண்டாயிற்றிறே; எழுந்திராய். (வந்து) - சென்று என்றபடி. வரவு செலவைக் காட்டுமிறே; அவன் பக்கலில் சென்று. (மணிவண்ணன்) - தன்னைப் பிரிந்தார் மடலெடுக்கும்படி பண்ணவல்ல வடிவுபடைத்தவன். (சீரார் திருத்துழாய் மாலை நமக்கருளி) - அநந்யப்ரயோஜநர் இட்ட மாலை. “மிக்க சீர்த் தொண்டர்”. ப்ரயோஜநாந்தரபரர் இட்டதாகில் அவர்கள் நெஞ்சில் அபிஸந்தியாலே சுறு நாறுமென்கை. (நமக்கருளி) - ப்ரணயித்வம் போயிற்றிறே நம்மாற்றாமைக்கு உதவாதபோதே; இனி க்ருபைபண்ணில் உண்டித்தனையிறே. (தாரான் தருமென் றிரண்டத்திலொன்றதனை) - தரிலுமாம், தாராதொழியிலுமாம். இரண்டிலொன்று அமையும் நமக்கு. அதாவது தந்தானாகில அத்தாலே தரிக்கிறோம்; இல்லையாகில் முடிந்து பிழைக்கிறோம். (ஆரானும்மொன்னாதார் கேளாமே சொன்னக்கால்) - அவன் குணத்தை அழிக்க இருப்பாருமுண்டு; அவர்கள் கேளாமே செவியிலே அவனுக்குச் சொல்லு. அவனையழித்து இவள் மடலெடுத்துப் புக்கபடி, அவனையுகவாதார் கேளாமே என்கிறாளிறே. (ஆராயுமேலும் பணிகேட்டு) - உன்னைக் கண்டபோதே “அவளென்பட்டாள்? அவளுளளே? அவ்வாச்ரயம் இன்னும் நமக்குக் கிடைக்குமோ?” என்று திருவுள்ளமானானேயாகிலும். (அதென்றேனிலும்) - அங்ஙனன்றியே துஷ்யந்தனைப்போலே “நாம் அங்ஙனைக்கொப்பாளொருத்தியை அறியோமே”

என்றானாகிலும். (போராதொழியாதே) - அறிந்திலேனென்றானென்றால், அவன் திருவுள்ளத்துக்கேற அறிவித்து மறுமாற்றங்கொண்டு போரவேணுமென்று நில்லாதே. (போந்திடு நீ) - என்னாற்றாமை கண்டும் மறந்தவனைப் போலன்றியே நீ போந்திடு. (போராதொழியாதே போந்திடு நீ என்றேற்கு) - நான்றானேகிடீர் இந்நெஞ்சு தன்னை அங்கே தங்கப்பண்ணினேன். அதாவதென்னென்னில், பெருங்குடி புதுக்குடிமகனை “பழைய பையலைப் போலே வரம்பிலும் வாய்க்காலிலும் சூடுபொகடாதே கொள்” என்னுமதுவேயடியாக அவ்விடங்களாகாதே களவுக்கு ஸ்தாநமென்று செய்யாநிற்கும். “போராதொழியாதே போந்திரு நீ” என்றேன் நான். அவ்விஷயத்தைக் கண்டால் போராதொழியாவாகாதே அடுப்பது என்று இது அங்கே நின்றது. (காரார் கடல் வண்ணன் பின் போன நெஞ்சமும் வாராதே என்னை மறந்தது) - என்னாற்றமை கண்டு கண்ணுங் கண்ணீருமாய்ப் போன நெஞ்சு அவனைக் கண்டவாறே அவன் வடிவழகிலே துவக்குண்டு என்னை மறந்தது. (கடல் வண்ணன் பின் போன நெஞ்சமும் வாராதே என்னை மறந்தது) - ராமம் மே அநுகதா த்ருஷ்டி: - இத்யாதிவத்.

விளக்கம் – (வாராய்) – நெஞ்சமே! எழுவாயாக. (மடநெஞ்சே) - எனக்கு அடங்கிய நெஞ்சே என்று பொருள் கொள்ளாமல், அறிவு இழந்த நெஞ்சே என்று பொருள் கொள்ள வேண்டும். அவனுக்குக்காக நாம் இரக்கப்பட்டதால் நமக்கு இத்தனை துன்பங்கள் உண்டானது போதும், எழுவாயாக! (வந்து) – சென்று எனப் பொருள் கொள்ளவேண்டும். ஓர் இடத்திற்கு வருவது என்பது, மற்றோர் இடத்தில் இருந்து செல்வதைக் குறிக்கும் அல்லவோ? அவன் அருகில் சென்று. (மணிவண்ணன்) – தன்னைப் பிரிந்தவர்கள், தன்னைக் குறித்து மடல் எடுக்கும்படிச் செய்யவல்ல அழகான திருமேனி உடையவன். (சீரார் திருத்துழாய் மாலை நமக்கருளி) – எந்தப் பயனும் எதிர்பாராமல் உள்ளவர்கள் சூட்டிய துளசி மாலை. பெரிய திருமொழியில் (11-1-9) - மிக்க சீர்த் தொண்டர் - என்று இவரே கூறியது காண்க. பலனை எதிர்பார்ப்பவர்கள் சூட்டிய மாலையாக இருந்தால், அந்தப் பலனின் மீது உள்ள விருப்பம் என்னும் ஆசை காரணமாக, அந்தத் துளசி மாலை பொசுங்கிய நாற்றம் வீசும். (நமக்கருளி) – அனைத்தையும் காப்பவன் என்று அவனுக்கு உள்ள ப்ரணயித்துவம், நமக்கு அவன் உதவாத காரணத்தால் அவனை விட்டு நீங்கியது. ஆனால் கருணையுடன் அவன் மாலையையைக் கொடுக்கக்கூடும். (தாரான் தரும் என்ற இரண்டத்தில் ஒன்றத்தனை) – துளசி மாலையை அவன் அளித்தாலும் சரி, அளிக்காவிட்டாலும் சரியே. மாலையை அளித்தான் என்றால் உயிர் வாழ்வோம். அளிக்கவில்லை என்றால், உயிரை விடுத்து, நமது துன்பத்திலிருந்து விடுதலை பெறுவோம். (ஆரானும் ஒன்னாதார் கேளாமே சொன்னக்கால்) – அவனது குணத்தை அழிக்கக்கூடிய விரோதிகள் அவனுக்கு அதிகம் பேர் உள்ளனர். அவர்களின் காதுகளில்

விழாமல், இந்த மடலில் உள்ளதை அவன் காதுகளில் கூறுவாயாக. அவனது ஸ்வரூபம் அழியும்படியாக மடல் எடுக்க இவள் துணிந்தாள். ஆயினும் அப்படிப்பட்ட செய்கையும் அவனது விரோதிகளுக்குத் தெரிந்து விடக்கூடாது என்று கூறுவது காண்க. (ஆராயுமேலும் பணிகேட்டு) – உன்னைக் கண்டவுடன் உன்னிடம் அவன், "அவள் என்ன துன்பம் அடைந்தாள்? அவள் இன்னமும் உயிருடன் உள்ளாளா? எனக்கு அவள் இன்னமும் கிட்டுவாளா?", என்று கேட்கக்கூடும். (அது அன்று எனினும்) – இவ்விதம் கேட்காமல், துஷ்யந்தன் போன்று, "அப்படிப்பட்ட ஒருவளை நான் அறியவில்லையே", என்றும் கூறலாம். (போராது ஒழியாதே) – அவன் என்னை அறியவில்லை என்று கூறினாலும், அவனது உள்ளத்தில் நன்கு பதியும்படி எனது நிலையை தெரிவிப்பாயாக. அதன் பின்னர் அவன் உனது சொற்களுக்குப் பதில் அளிக்கவேண்டும் என்று நின்று விடாதே. (போந்திடு நீ) – எனது துன்ப நிலையைக் கண்டவள் நீ; அதனை மறந்தவள் போன்று நீயும் இருக்காமல், மீண்டும் இங்கு திரும்புவாயாக. (போராது ஒழியாதே போந்திடு நீ என்றேற்கு) – இப்படியாக என்னுடைய நெஞ்சத்திற்கு நானே கற்றுக் கொடுத்து, அது மீண்டும் வராமல் அங்கேயே தங்கும்படிச் செய்துவிட்டேனே! இது எப்படி உள்ளது என்றால் – ஓர் ஊரில் உள்ள வயலில் வேலை செய்து வந்த ஒருவன், நெல்லை அறுத்து, வரப்பில் வைத்து, திருடியபடி இருந்தான். இதனை அறிந்த சொந்தக்காரன், வேறு ஒரு பணியாளை அமர்த்தினான். அவனிடம், "நீயும் பழைய பணியாள் போன்று வரப்பில் நெல்லைக் குவித்து வைக்காதே", என்று கூறினான். இதனைக் கேட்ட புதிய பணியாள், நெல்லைத் திருட இதுதான் வழி என்று அறிந்து கொண்டான். இது போன்று எனது நெஞ்சத்திடம், "மீண்டும் திரும்பாமல், அங்கேயே இருந்துவிடாதே", என்று கூறினேன். ஆனால் அந்த விஷயத்தைக் (பகவத் விஷயத்தை) கண்டால் மீண்டும் திரும்பக்கூடாது என்று உணர்ந்த நெஞ்சம், அங்கேயே நின்றுவிட்டது. (காரார் கடல்வண்ணன் பின் போன நெஞ்சமும் வாராதே என்னை மறந்தது) – எனது துன்பத்தைக் கண்டு கண்ணீர் வடித்தபடி எனது நெஞ்சமானது அவனிடம் தூது சென்றது. ஆனால் அவனது திருமேனியின் அழகில் மயங்கி, என்னை மறந்துவிட்டது. (கடல்வண்ணன்) – ராமம் மே அநுகதா – இராமன் பின்னால் சென்ற என் கண்கள் திரும்பவில்லையே – என்று தசரதன் கூறியது காண்க.

(வல்வினையேன்) - என்னெஞ்சும் எனக்கு உதவாதபடியான மஹாபாபத்தைப் பண்ணினேன். (ஊராருகப்பதேயாயினேன்) - தங்களபிமதஸித்தி ஸாதநாநுஷ்ட்டாநத்தாலே என்றிருக்குமவர்களைப்போலே, என்னபிமதத்துக்கும் நான் உத்ஸாஹிக்கும்படியானேன்; ஊரார்வார்த்தை – "அவனாலே பேறு என்றிருந்த இவள் கண்டாயே உண்டபடி; இவளைப்போலே உண்ணுமத்தனை அவன் கை பார்த்திருந்தவர்கள்" என்பர்களே அவர்கள்.

விளக்கம் – (வல்வினையேன்) – என்னுடைய நெஞ்சமே எனக்கு எந்த உதவியும் செய்யாதபடி மிகுந்த பாவங்கள் செய்தேன். (ஊரார் உகப்பதே ஆனேன்) - தாங்கள் ஆசைப்பட்டதை பெறவேண்டும் என்பதற்காக, அதற்கான உபாயங்களை செய்தே ஆக வேண்டும் என்று எண்ணுபவர்கள் உண்டு. நானும், எனது ஆசையை நிறைவேற்றிக் கொள்ள அவர்கள் போன்று ஆனேன். ஊரார் வார்த்தை = அவன் மூலமே பேறு பெற வேண்டும் என்று காத்திருந்த இவள் நிலையைக் கண்டீர்களா? அவன் மட்டுமே உபாயம் என்று இருப்பவர்களின் கதி இப்படியே ஆகும் – என்று தகாதபடி கூறுவார்கள்.

இப்படி ஆற்றாமை மிக்கால் சில பேரோடே உசாவிதரிக்க வேண்டாவோவென்னில்; (மற்றெனக்கிங்காராய்வாரில்லை) - என்னெஞ்சம் எனக்கு உதவாதிருக்க வேறு நமக்கு இங்கு உசாத்துணையுண்டோ? “மற்றில்லை” என்கையாலே இன்னமும் அவனே வந்து ஆராயில் ஆராயுமத்தனை என்கை; “அவ்வருளல்லன அருளுமல்ல” என்றும், “வையகத்துப் பல்லார்ருளும் பழுது” என்றுமிறே இவர்கள் தாங்கல் அறுதியிட்டிருப்பதும். (அழல்வாய் மெழுகு போல் நீராயுருகுமென்னாவி) - நெஞ்சு உதவாதென்னலாமோ? நெஞ்சைப்பிடித்து தரித்திருக்கவேண்டாவோ என்னில், அக்நிஸகாசத்திலே மெழுகு போலே இற்றுப் போகாநின்றது என்னுடைய ஆத்மவஸ்து.

விளக்கம் - இவ்விதம் பிரிவுத் துன்பம் அதிகமானபோது, மற்றவர்களிடம் எதேனும் பேசி ஆதரவு தேடலாமே என்றால்; (மற்றெனக்கு) – என்னுடைய நெஞ்சமே எனக்கு உதவி செய்யாமல் உள்ளபோது, எனக்குப் பேச்சுத் துணைக்கு யார் உள்ளனர். ”மற்றில்லை” என்ற பதம் மூலம் அவனே வந்து எனது நிலையை உணர்ந்தால் மட்டுமே பிழைக்க முடியும் என்று உணர்த்தப்பட்டது. இந்தக் கருத்தை திருவாய்மொழி (9-9-6) - அவ்வருளல்லன அருளுமல்ல – என்றும், முதல் திருவந்தாதி (15) - வையகத்துப் பல்லார்ருளும் பழுது – என்றும் கூறியது காண்க. (அழல் வாய்) – என்னுடைய நெஞ்சம் உதவவில்லை என்று ஏன் கைவிடவேண்டும்? நெஞ்சத்தை விடாமல் பிடித்து நிறுத்தலாமே என்றால் - நெருப்பின் முன்னே உருகும் மெழுகு போன்று எனது ஆத்மா அவனை எண்ணி உருகி நிற்கிறது.

(நெருங்கண்களூராருறங்கிலும் தானுறங்கா) – இப்படி ஆற்றாமை விளைந்ததாகில், நித்ரையாலே அத்தைப் போக்கினாலோவென்னில், “ஆயுமமருலகுந்துஞ்சிலும்” என்கிறபடியே எல்லாருமுறங்கிலும் என் கண்கள் உறங்குகிறதில்லை. (நெடுங்கண்கள்) - கண் பரப்பெல்லாம் தலைச்சுமையாயிற்று. அஸிதேக்ஷணையிறே. (ஊராருறங்கிலும் தானுறங்கா) - “ஊரும் நாடுமுலகமும் தன்னைப்போல்” என்று இவள் பிறந்த ஊரிலே

உறங்கியறிவாருமில்லையிறே. இப்படியிருக்கிற அவர்களுறங்கிலும் என் கண்கள் உறங்காவென்கிறார்.

விளக்கம் – (நெடுங்கண்கள்) – இப்படிப்பட்ட பிரிவுத் துன்பத்தை உறக்கம் மூலம் மறந்து போக்கலாமே என்றால்; திருவாய்மொழி(2-1-1) - ஆயும் அமர் உலகும் துஞ்சிலும் நீ துஞ்சாயால் – என்னும்படி, தேவர்கள் உள்பட அனைவரும் உறங்கினாலும், எனது கண்கள் உறங்க மறுக்கின்றன. (நெடுங்கண்கள்) – என்னுடைய பெரிய கண்களே எனக்குப் பெரும் சுமையானது. இராமாயணம் ஸுந்தரகாண்டம் - அஸிதேக்ஷண – கருத்த கண்கள் கொண்ட சீதை - என்பது போன்று இவள் கண்கள் உள்ளன. (கூறார்) – திருவாய்மொழி (6-7-2) – ஊரும் நாடும் உலகமும் தன்னைப்போல் - என்று கூறுவதுபோல், இவள் பிறந்த ஊரில் யாருமே உறங்குவதில்லை. அப்படியே அவர்கள் உறங்கினாலும், எனது கண்கள் உறங்குவதில்லை.

(உத்தமன்) – உறக்கமறும்படி தன் தாழ்ச்சியைக் காட்டி அகப்படுத்தின மேன்மையையுடையன். (பேராயினவே பிதற்றுவன்) - இப்படி அபிமதகாலத்தில் உதவாதொழிந்தால் அவனை நினையாதிருக்கவிறே அடுப்பது. அது மாட்டாதே, அவன் திருநாமங்கள் அடைவுகெடச் சொல்லாநிற்பன்.

விளக்கம் - (உத்தமன்) – தன்னுடைய நீர்மைக் குணத்தைக் காட்டி எனது உறக்கத்தைத் தன் வசப்படுத்திய மேன்மை உடையவன். (பேர் ஆயினவே பிதற்றுவாள்) – நாம் விரும்பும் காலத்தில் நமக்கு வந்து அவன் உதவவில்லை என்றால் அவனை நினைக்காமல் இருப்பது அல்லவோ ஏற்றது? அதுவும் இயலவில்லை. அவனுடைய திருநாமங்களை எந்த வரிசையும் அறியாமல் புலம்பியபடி இருப்பேன்.

(பின்னையும்) – அதுக்கு மேலேயும் சில ஹிதஞ்சொல்ல. (காரார் கடல் போலும் காமத்தராயினார் ஆரே பொல்லாமை அறிவார்) - இங்ஙன் சொல்லலாமோ? பத்துமாஸம் ஆறியிருந்திலளோ ஸ்ரீஜநகராஜன் திருமகள்? அப்படியிராவிடில் பொல்லாதாகாதோ? என்னில், பேராழமான கடல்போலே ஆசை கரைபுரண்டு போராநிற்க “பொல்லாங்கு சொல்லுவர்கள்” என்று ஆறியிருக்கப்போமோ? ஆறியிருந்தவர்களுக்கு ஆசை அளவு பட்டதாமித்தனையிறே. ஸ்வரூப ஜ்ஞாநத்தாலே ஆற்றலாமோ அவ்வடிவைக் காண வேணுமென்னும் ஆசை கரைபுரண்டிருப்பார்க்கு? ஸ்வரூபஜ்ஞாநத்தால் ஆற்றினா ருண்டாகில் அவன் ஆசை மட்டமாமித்தனையிறே.

விளக்கம் – (பின்னையும்) - மேலும் சிலர் இவளுக்கு நன்மை தரும் ஆறுதல் வார்த்தைகள் கூறத் தொடங்கினர். (காரார் கடல் போலும் காமத்தராயினார் ஆரே பொல்லாமை அறிவார்) - அவர்கள் இவளிடம், “இப்படி நீ புலம்பலாமா? ஜனகனின் திருமகளான சீதை இராமனை விட்டுப் பத்து மாதம் பிரிந்திருந்தாலும் பொறுமையாக இல்லையா? அது போன்று நீயும் இல்லாவிட்டால், உனது ஸ்வரூபத்தை இழிவாகக் கூற மாட்டார்களா?” என்றனர். அதற்கு இவள் அவர்களிடம் கூறுவது – கடல் போன்று பரந்த ஆசையானது மனதில் கரைபுரண்டு பாயும்போது, “மற்றவர்கள் தவறாகப் பேசுவார்கள்”, என்று எண்ணுவது இயலுமா? மற்றவர்கள் பொறுத்துக்கொண்டிருந்தால் எனக்கு என்ன? என்னை விட, அவன் மீது அவர்களது ஆசை குறைவு என்றே கூறவேண்டும். அவனது அழகான திருமேனியைக் காண வேண்டும் என்னும் ஆசை கரைபுரண்டு ஓடும்போது, ஸ்வரூபஞானம் என்னும் தடையால் பொறுக்கமுடியுமா? ஸ்வரூபஞானம் காரணமாக, சீதை போன்றவர்கள் ஆசையைக் கட்டுப்படுத்தினர் என்று கூறினால், அவர்களது ஆசை எனது ஆசையை விடக் குறைவானதே ஆகும் – என்றாள்.

(அது நிற்க) - இது நீ துணிந்தமையித்தனை என்ன வேண்டா. இதுக்கு சிஷ்டாசாரமுண்டு என்கை; பழையருமாய் விலக்ஷணருமாயிருப்பார் அநுஷ்ட்டித்தார்கள் என்கை. (ஆரானும் ஆதானுமல்லள்) - சைதந்யம் குறைந்தவளுமல்லள், அசித்கல்பையுமல்லள். (அவள் காணீர்) - அவளைக் கேளுங்கள். (வாரார் வனமுலை) - தன்னால் தரித்துத் தாங்கவொண்ணாத முலை என்று பருவம் மிக்கிருக்கிறபடி சொல்லுகிறது. காந்தன் தாங்குதல், அது பெறாதபோது வாராலே தரித்தல் செய்யுமித்தனை. (வாசாவத்தையென்று ஆரானுஞ் சொல்லப்படுவாள்) - ப்ரஸித்தையன்றோ? விலக்ஷணரெல்லாம் கொண்டாடப் பட்டவளன்றோ? ஸ்ரீஜனகராஜன் திருமகள் ஓலக்கத்திலும் குறைவற்றாளொருத்தி யென்று கொண்டாடப்பட்டுமவளன்றோ? (அவளும்) - இத்துணிவு துணிந்தேன் நானேயல்லேன், அவளும் துணிந்தாளென்கை. (தன் பேராயமெல்லாமொழிய) - உங்களை இசைவிக்கைக்காக இத்தனை வார்த்தை சென்னேன் நான்; தோழிமாருடைய பெரிய திரளைக் கடுக விட்டு நின்றாளித்தனையன்றோ; நெருப்பில் காலிட வொண்ணாதாற்போலே தோழிமார் திரளில் கால் பொருந்திற்றோ அவளுக்கு? (பெருந்தெருவே) – தோழிமாரை விட்டு ஒரு மூலையிலே இருந்தாளோ? பெருந் தெருவேயன்றோ போனதென்கை. (தாரார் தடந்தோள் தளைக்காலன் பின் போனாள்) - விலங்கிட்டுருக்கிற வத்ஸராயன் பின்னே போகிற இவள், தோளும் தோள் மாலையுங் கண்டு அவனை ஆசைப்பட்டுப் போனாற்போலேயன்றோ போனது. (ஊரார் இகழ்ந்திடப்பட்டாளே) - அப்படி அவன் பின்னே போனவளை ஊரார் கொண்டாடின வித்தனையல்லாது பழி சொன்னாருண்டோ?

விளக்கம் – (அது நிற்க) – நான் செய்தது தவறு என்று கூறவேண்டாம். என்னுடைய இந்தச் செயலுக்கு நல்லவர்கள் சிலர் செய்துள்ள செயல்கள் சாட்சிகளாக உள்ளன.

மிகவும் சிறந்தவர்கள் கூட, அவன் மீது கொண்ட ஆசைக்காகத் தங்களது பெண்மையை அழித்துக் கொண்டுள்ளனர். (ஆரானும் ஆதானும் அல்லன்) – நான் இப்போது ஒருவளைப் பற்றிக் கூறுகிறேன். அவள் அறிவு குறைந்தவள் அல்ல, அசேதனம் போன்று அறிவு இல்லாதவளும் அல்ல. (அவள் காணீர்) – அவளது ஒழுக்கம் பற்றி நான் கூறுவதைக் கேளுங்கள். (வாரார் வனமுலை) – தன்னால் தாங்கி நிற்க முடியாத ஸ்தனங்கள் என்று கூறும்படி அவள் வயது இருந்தது. அவளுடைய நாயகன் அந்த ஸ்தனங்களைத் தாங்கிப் பித்தபடி இருக்க வேண்டும், இல்லையென்றால் வார் கொண்டு கட்டி வைக்கப்படவேண்டும் என்னும்படியான ஸ்தனங்கள் கொண்டவள். (வாஸவத்தை என்று ஆரானுஞ் சொல்லப்படுவாள்) – வாஸவதத்தை என்னும் இவள் அனைவராலும் அறியப்படுபவள் அல்லவா? நல்லவர்களால் கொண்டாடப்படுபவள் அல்லவா? ஜனகனின் திருமகளாம் சீதையின் குழுவில் எந்தவிதமான குறைவில்லாதவள் என்று போற்றப்படுபவள் அல்லவா? (அவளும்) – இப்படியாகக் காதலனுக்காக முறை தவறி நடந்தது நான் மட்டும் அல்ல, வாஸவதத்தையும் இவ்விதமே செய்தாள். (தன் பேராயமெல்லாம் ஒழிய) – உங்களது சமாதானத்திற்காகவே நான் இத்தனை சொற்கள் கூறியபடி இருந்தேன். ஆனால் அவளோ தனது காதலனுக்காக தோழிகளின் பெரிய கூட்டத்தையே கைவிட்டாள் அல்லவா? நெருப்பில் கால் வைக்கத் துணியாதவர்கள் போன்று, அவள் தன்னுடைய தோழிகளின் கூட்டத்திற்குள் கால் வைக்கவும் துணியவில்லை. (பெரும் தெருவே) – அவள் தோழிகளை விட்டு ஏதேனும் ஒரு மூலையிலே பதுங்கிக் கிடந்தாளோ? அல்லள், ராஜகுமாரியாக இருந்தும், இந்தச் செயலுக்குப் பின்னரும், கம்பீரமாக ராஜவீதியிலேயே நடந்தாள் அல்லவா? (தாரார் தடந்தோள் தளைக்காலன் பின் போனாள்) – தனது தந்தையான அந்த நாட்டு அரசனால் விலங்கிடப்பட்ட தனது காதலன் வத்சராயன் பின்னே சென்றாள். அவன் மீது மலர்மாலைகள் கிடந்தது என்று எண்ணியா அவன் பின்னே சென்றாள்? அவன் மீது ஆசைப்பட்டு அல்லவா சென்றாள்? (ஊரார் இகழ்ந்திடப்பட்டாளே) – இப்படியாகச் சென்ற அவளை அந்த நாட்டு மக்கள் கொண்டாடினர் அல்லாது உங்களைப் போன்று பழித்தா பேசினார்கள்?

(மற்றெனக்கிங்காரானும் கற்பிப்பார் நாயகரே) - இத்துணிவுக்குப் புறம்பான வார்த்தை சொல்லிக் கற்பிப்பார் எனக்கு நாயகரல்லர். “பயிலுந் திருவுடையார் யவரேலுமவர் கண்டீர் பயிலும் பிறப்பிடைதோறு எம்மையாளும் பரமர்” என்றிருக்கும் நிலை தவிர்ந்தேன். இத்துணிவுக்கு உடன் பட்டார் எனக்கு நாயகர்; ”க்ரமப்ராப்தி பொறுக்க வேணும்” என்றிருப்பார் எனக்கு நாயகரல்லர். “அன்னையென் செய்யிலென் ஊரான் சொல்லிலென் ?”

விளக்கம் – (மற்றெனக்கு இங்கு ஆரானும் கற்பிப்பார் நாயகரே)– எனது இத்தகைய மடல் எடுக்கும் துணிவை ஆதரிக்காமல், இதற்குப் புறம்பான சொற்கள் கூறி, என்னைத் திருத்த

முயற்சி செய்பவர்கள் எனக்கு நாயகர் அல்லர் (எனக்கு வேண்டப்பட்டவர்கள் அல்லர் என்று கருத்து)இத்தகைய துணிவுக்கு ஒப்பு .க்கொள்பவரே எனது நாயகர் ஆவர். ”சரியான நேரத்தில் அவனை அடையலாம்அது ,வரை நீ பொறுமையாக இரு”, என்று எனக்கு உபதேசிப்பவர்கள் எனக்குத் தலைவர் அல்லர். திருவாய்மொழியில் (5-3-6) - அன்னையென் செய்யிலென் ஊரான் சொல்லிலென் – என்று நம்மாழ்வார் அருளிச்செய்தது போன்றே இவள் நிலையும் உள்ளது.

(நான்) - இத்துணிவுக்குப் புறம்பானாரெல்லாரையும் விட்டிருக்கிற நான். (அவனை) - ஸ்வவ்யதிரிக்தரெல்லாரையும் விடுவித்தவனை. (நானவனை) - பந்தடிக்கவென்று புறப்பட்ட நான் குடக்கூத்தாடப் புறப்பட்டவனை என்றுமாம். வழி பறிக்கப் புறப்பட்டு வழிபறியுண்டேனென்றபடி.

விளக்கம் – (நான்) - இத்தகைய எனது துணிவான மடல் எடுக்கும் செயலுக்கு மறுப்பு கூறுபவர்கள் அனைவரையும் நான் என்னுடன் சேர்த்துக் கொள்ளாமல் தவிர்த்தேன். (அவனை) - அவனைத் தவிர்த்து மற்ற அனைவரையும் நான் துறக்கும்படிச் செய்த அவனை. (நான் அவனை) - பந்து விளையாடப் புறப்பட்ட நான், கூடக்கூத்தாடக் கிளம்பிய அவனைஅவனை வழிமறைத்து ., எனது அழகைக் காட்டி, அவன் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளக் கிளம்பிய நான், அவனால் எனது உள்ளம் கொள்ளையடிக்கப்பட்டேன் .

(காரார் திருமேனி காணுமளவுபோய்) - காரார் திருமேனி கண்டதுவே காரணமாகவிறே அடியிலே இப்படிப்பட்டது. இத்துணிவு எவ்வளவும் செல்லக்கடவதென்னில் - காரார் திருமேனி கண்டதுமே காரணமாகப் பிறந்த துணிவு, காரார்திருமேனி காணுமளவும் செல்லக்கடவதிறே. இவளுடைய உத்யோகத்தைக் கண்ட தோழி, “அவனோடு ஸம்ஸ்லேஷிக்கக் கடவை”, என்ன, பண்டும் கண்ட மாத்ரத்திலேயாயிற்று இப்பாடு பட்டது. இப்போதும் கண்டு விடுமித்தனை.

விளக்கம் - (காரார் திருமேனி காணுமளவுபோய்) - மழைமேகம் போன்றுள்ள அவன் திருமேனியைக் கண்டதால் அல்லவோ இவள் இவ்விதம் துன்பம் கொள்வதற்குக் காரணமாக உள்ளது? உனது இத்தகைய மடல் எடுக்கும் துணிவு எத்தனை தூரம் செல்லும் என்றால் – கறுத்த அவனது திருமேனியைக் காணவேண்டும் என்ற ஆசையால் பிறந்த இந்தத் துணிவானது ,அப்படிப்பட்ட அவனது திருமேனியைக் காணும் வரை செல்லும். இவளது இந்த உறுதியைக் கண்ட தோழி, “நீ அவனுடன் சேர்வாயாக”, என்றாள். அதற்கு நாயகி, “அவனை முன்பு கண்ணால் பார்த்ததால் மட்டுமே இத்தகைய துன்பம் எனக்கு வந்தது இப்போதும் .அவனைக் கண்டால் மட்டுமே போதுமானது ,“ என்றாள்.

நீ காணும்படி என்னென்னில்: (சீரார் திருவேங்கடமே) - அவன் குணங்கள் கொண்டாடியிருக்கும் தேசமெங்கும் புக்கு, என் வடிவைக் காட்டி, அவன் குணத்தையழித்துப் பெறக்கடவேன். (சீரார் திருவேங்கடமே) - நித்ய ஸூரிகளுக்கும் ஸம்ஸாரிகளுக்கும் ஒக்க முகங்கொடுத்துக் கொண்டு நிற்கிற நிலையாயுள்ள ஏற்றமுண்டிறே திருமலைக்கு; அங்கே சென்று, என் வடிவைக் காட்டி அவன் உபயவிபூதிக்கு ஆளாகாதபடி பண்ணுகிறேன்.

விளக்கம் – தோழி நாயகியிடம், “அவனை நீ எவ்விதம் காண்பாய்?”, என்று கேட்டாள். அதற்கு மேலே கூறுகிறாள் .(சீரார் திருவேங்கடமே) அவனது திரு -க்கல்யாணகுணங்கள் வெளிப்படும் வண்ணம் அமைந்துள்ள திவ்யதேசங்கள் அனைத்திற்கும் செல்வேன்எனது . இளைத்த மேனியைக் காண்பித்து, அவனது குணத்தை அழித்து (குணத்தை அழிப்பது என்றால், அவனது குணத்தைப் பற்றி மற்றவர்கள் கொண்டிருக்கும் உயர்ந்த் எண்ணைத்தை நீக்குதல் என்று கொள்ளவேண்டும்), அவனை என்னிடம் ஓடி வரச் செய்வேன் .(சீரார் திருவேங்கடமே) - நித்யஸூரிகளுக்கும் ஸம்ஸாரிகளுக்கும் ஒரே போன்று, தனது திருமேனியைக் காண்பித்தபடி நிற்கும் ஏற்றமானது திருமலைக்கு உண்டுஅங்கே சென் .று எனது துன்பப்பட்ட நிலையைக் காண்பித்து ,அவன் இந்த உலகிற்கும் அந்த உலகிற்கும் நாயகனாக நிற்கும் தகுதியை இழக்கும்படிச் செய்து விடுகிறேன்.

(திருக்கோவலூரே) – ”ஆச்ரிதர் இரண்டு மூன்று பேர் நின்ற மண்” என்று அம்மண்ணை யுகந்து “வாசல் கடைகழியா உட்புகா காமர் பூங்கோவலிடைகழியே பற்றி” என்று நிற்கிறானாக ப்ரஸித்தமிறே. அங்கே சென்று, “அவன் ஆச்ரிதையான என்னை கைவிட்டபடி பாருங்கோள்” என்று என் வடிவைக் காட்டுகிறேன்.

விளக்கம் – (திருக்கோவலூரே) - ஆழ்வார்கள் இரண்டு பேர் அமர்ந்து, பின்னர் மூன்று பேர் அமர்ந்த இடம் என்ற காரணத்தால் அவன் அந்த திவ்யதேசத்தை மிகவும் நேசித்தவனாக, அங்கேயே நிற்கிறான் .இதனை முதல் திருவந்தாதியில் (86) - வாசல் கடைகழியா உட்புகா காமர் பூங்கோவலிடைகழியே பற்றி – என்று அருளிச்செய்தார். அங்கு சென்று” ,அவனது அடியாளாகிய என்னை அவன் கைவிட்ட நிலையைப் பாருங்கள்”, என்று அனைவரிடமும் கூறுகிறேன்.

(மதிள் கச்சி ஊரகமே) - உள்ளுக்கிடக்கிற வஸ்துவின் சீர்மைக்குப் போரும்படியாக மதிலையுடைய திருக்கச்சியில் திருவூரகத்திலே எல்லாரோடும் வரையாதே பொருந்தும் ஸ்வபாவனென்று தெரியும்படி திருவுலகளந்தருளின வ்யாஜத்தை ப்ரகாசிப்பித்து நிற்கிறானிறே; அங்கே சென்று என் வடிவைக் காட்டி, “என்னை வரைந்தபடி பாருங்கோள்”, என்கிறேன்.

விளக்கம் - (மதிள் கச்சி ஊரகமே) – உள்ளே இருக்கின்ற பரமாத்மாவின் மேன்மைக்கு ஏற்றபடி, வலிமையான திருமதிளை உடைய காஞ்சீபுரம். அங்கு உள்ள திருஊரகத்தில், ஏற்றத்தாழ்வு இல்லாமல் அனைவருடனும் கலந்து பழகும் ஸ்வபாவம் உள்ள அவன், ஊராருக்குத் தெரியும்படியாக உலகம் அளந்த நிலையில் நிற்கிறான். அங்கு சென்று, "உங்கள் அனைவரையும் தனது திருவடியால் தீண்டியவன், என்னை மட்டும் கைவிட்டான், பாருங்கள்", என்று கூறுவேன்.

(பேரகமே) - மதிளுமின்றியே ஆற்றங்கரையிலே திருப்பேரிலே வழிப்போவாரும் "தன்னைக்காணும்படி" திறந்த வாசலாத் தன்னை ஸர்வஸ்வதாநம் பண்ணிக் கிடக்கிறானென்று ப்ரஸித்தமிறே. அங்கே சென்று என் வடிவைக் காட்டி, "அவன் ஸர்வஸ்வதாநம் பண்ணுகிறபடி பாருங்கோள்", என்கிறேன்.

விளக்கம் – (பேரகமே) – திருஊரகம் போன்று மதிள்கள் இல்லாமல், ஆற்றுக்கு நடுவில், திருப்பேர் நகரில் உள்ளான். அங்கு, அந்த வழியாகச் செல்பவர்கள் யார் வேண்டுமானாலும் தன்னை எளிதாகக் காணலாம்படி, திறந்து கிடக்கும் வாசல் கொண்டு, தன்னையும் தனது செல்வத்தையும் நமக்குத் தானம் அளித்தபடி உள்ளான் என்பது அனைவரும் அறிந்ததே. அங்கு சென்று, "இவன் அனைத்தையும் தானம் செய்தபடி உள்ள லக்ஷணத்தை, இதோ என்னைக் கண்டு உணருங்கள்", என்பேன்.

(பேரா மருதிறுத்தான் வெள்ளறையே) - பேராமருது என்றது அஸுராவேசத்தாலே பேராதே நின்றதென்னுதல், தளர்நடையிட மருதிறுத்தானென்னுதல். ஸ்தாவரங்களிலுமகப்பட அஸுராவேசமுண்டாயிரா நின்றது; அஸுரா வேசமில்லாதபடி பரிவருள்ள திருவெள்ளறையிலே நின்றானாயிருக்கிறானிறே. அங்கே சென்று என் வடிவைக் காட்டி, "பரிவையான எனக்கு முகந்தந்தபடி பாருங்கோள்", என்கிறேன்.

விளக்கம் - (பேரா மருதிறுத்தான் வெள்ளறையே) – பேராமருது என்றால் எத்தனை அசுரவேகத்தாலும் அசைக்க இயலாத மருதமரங்கள் என்று பொருள். அப்படிப்பட்ட வலிமையான அவற்றை இவன் தவழ்ந்து சென்று சரித்தான். திருஆயர்பாடி என்பது கம்சனின் எல்லைக்குள் இருந்ததால், அங்குள்ள மரங்களுக்கும் அசுரவலிமை இருந்தது. ஆனால் அப்படிப்பட்ட அசுரவேகம் இல்லாமல், மிகுந்த பரிவு நிறைந்தவர்கள் வாழும் இடமாகத் திருவெள்ளறை உள்ளதால், இவனும் பரிவுடனேயே நிற்கிறான். அங்கு சென்று, "இவன் மீது மிகுந்த பரிவுள்ள எனக்கு இவன் தனது பரிவைக் காண்பித்த லக்ஷணம் காணுங்கள்", என்று கூறுவேன்.

(வெஃகாவே) – ஆச்ரிதன் “போ” என்ன, படுக்கை சுருட்டிக் கொண்டு அவன் பின்னே போய், “கிட” என்ன, காற்கடை தலைமாடாகக் கிடந்தானாக “ஆச்ரிதன் சொன்னபடி செய்தான்” என்று ப்ரஸித்தமிறே; நான் சொன்னபடி செய்தானாகவில்லையே என்று என் வடிவைக் காட்டுகிறேன்.

விளக்கம் – (வெஃகாவே) – திருமழிசையாழ்வார், “நீயும் என்னுடன் இங்கிருந்து கிளம்பு”, என்று கூற, தனது படுக்கையைச் சுருட்டிக் கொண்டு, அவர் பின்னேயே சென்றான். மீண்டும் ஆழ்வார், “இங்கேயே கிடப்பாயாக”, என்று கட்டளையிட, முன்னர் தனது திருவடி இருந்த இடத்தில் இப்போது தலையை வைத்து, மாற்றிச் சயனித்தான். ஆக ஆழ்வார் சொன்னபடி செய்தான். ஆனால் நான் சொன்னபடி இவன் செய்யவில்லையே என்று அனைவரிடமும் கூறுவேன்.

(பேராலி) - பிறந்த ஊருமாய்த் திருப்பதியுமாய் எனக்குத் தன்னை முற்றூட்டாக்கு கிறானென்றிறே ப்ரஸித்தி; அங்கே சென்று எனக்கு முற்றூட்டாக இவன் உடம்பு கொடுத்தபடி என்னுடம்பிலே பாருங்கோள் என்கிறேன். ”ஏன்றான்? இவள் திருவாலியிலேயன்றோ இருக்கிறது. திருவாலியிலே சென்று பழியிடுவே னென்னுமது கூடாதே”, என்னில் - அதுவும் அஸத் கல்பமாய்க் கிடக்கிறது காணும் இவளுக்கு.

விளக்கம் – நான் பிறந்த ஊரும், திவ்யதேசமும் ஆகிய திருவாலியில் எனக்கு அவன் தன்னையே முழுவதுமாக அளிக்கிறான் என்று ஊரில் அனைவரும் எண்ணுகின்றனர். ஆனால், அவன் எனக்குத் தன்னை அளிக்கும் லக்ஷணத்தை நீங்கள் அங்கு சென்று அறிந்து கொள்ளுங்கள் என்று கூறுவேன். இவள் இருப்பது திருவாலி நகரத்திலே அல்லவோ? பின்னர் இவள் ஏன், “அங்கு சென்று அவன் மீது பழி கூறுவேன்”, எனக் கூறவேண்டும்? இவளது துன்பம் காரணமாக, தான் அந்தத் திவ்யதேசத்திலேயே இருந்தபோதும், அந்த இடம் வெகுதூரத்தில் உள்ளதாகவே தோன்றுகிறது.

(தண்கால்) – குளிர்ந்த காற்றுப்போலே ஆச்ரிதருடைய ச்ரமம் தீர உதவும் ஸ்வபாவ னென்றிறே தண்கால் என்று பேராயிற்று; அங்கே சென்று, என் ச்ரமம் தீர உதவினபடி பாருங்கோள் என்று என் வடிவைக் காட்டுகிறேன்.

விளக்கம் – (தண்கால்) – குளிர்ந்த காற்றானது எவ்விதம் துன்பங்களை நீக்குமோ அது போன்று இவன் இந்த இடத்தில், அடியார்களின் துன்பங்களை நீக்குகின்ற ஸ்வபாவத்துடன் உள்ளான் என்பதால் அல்லவோ, இந்த இடம் தண்கால் எனப்பட்டது. அங்கு சென்று எனது துன்பத்தைத் தீர்க்க இவன் உதவிய லக்ஷணத்தைப் பாருங்கள் என்று கூறுவேன்.

(நறையூர்) - தன் ஸ்வாதந்த்ர்யமெல்லாம் செல்லாமே, பிராட்டி ஸ்வாதந்த்ர்யமேயாக எண்ணி அவளுக்கு பவ்யனாயிருக்கிறானென்று ப்ரஸித்தமிறே. அங்கே சென்று, இவன் பிராட்டிக்கு பவ்யனானபடி என் வடிவில் பார்த்துக் கொள்ளுங்கோள் என்கிறேன்.

விளக்கம் – (நறையூர்) – தன்னுடைய சுதந்திரம் ஏதும் பலிக்காமல், பெரியபிராட்டிக்கே முழுச்சுதந்திரம் அளித்து, அவளுக்கு அடங்கி நடப்பவனாக நிற்கும் இடம் அல்லவோ? அங்கு சென்று, "இவன் பிராட்டிக்கு அடங்கி நடக்கும் லக்ஷணம், பிராட்டிக்கே உரியவளான என்னிடம் இவன் நடந்து கொள்ளும் விதத்தைக் கண்டு அறிந்து கொள்ளுங்கள்", என்று கூறுவேன்.

(திருப்புலியூர்) - மெல்லிலைச் செல்வ வண்கொடிப் புல்க வீங்கிளந்தாள் கமுகிறே. அவன் நின்ற ஊரில் ஸ்தாவரங்களுமுட்பட பரஸ்பரம் மிதுநமாய்ச் சேர்ந்து வர்த்திக்குமென்றிறே ப்ரஸித்தி; அங்கே சென்று என்னோடு சேர்ந்தபடி பாருங்கோள் என்கிறேன்.

விளக்கம் - (திருப்புலியூர்) – திருவாய்மொழி (8-9-7) - மெல்லிலைச் செல்வ வண்கொடிப் புல்க வீங்கிளந்தாள் கமுகின் – என்று கூறுவது போல், அவன் உள்ள இந்த திவ்யதேசத்தில், அவனுடன் சேர்ந்தபடி தாவரங்களும், ஆணும், பெண்ணும் வாழ்வது ப்ரஸித்தம் அல்லவோ? அங்கு சென்று, "அவன் என்னுடன் சேர்ந்தபடி உள்ள லக்ஷணம் காணுங்கள்", என்று கூறுவேன்.

(ஆராமம் சூழ்ந்தவரங்கம்) - உகந்தருளின தேசங்களெல்லாம் பகலிருக்கையாய் ஆச்ரித ரக்ஷணத்துக்கு ஏகாந்த ஸ்தலமென்று கோயிலிலே நித்யவாஸம் பண்ணுகிறானா யிருக்கிறது. "வன்பெருவானகமுய்ய" இத்யாதியிற் சொல்லுகிறபடியே; அங்கே சென்று என் வடிவைக் காட்டி என்னுடைய ரக்ஷணம் பண்ணினபடி பாருங்கோள் என்கிறேன்.

விளக்கம் - (ஆராமம் சூழ்ந்தவரங்கம்) – இவன் மிகவும் மகிழ்ந்து எழுந்தருளியுள்ள திவ்யதேசங்களால் சூழப்பட்ட திருவரங்கம். அடியார்களைக் காப்பதற்கான ஒரே இடம் என்பதற்காக இங்கே நித்யவாஸம் செய்கிறான். பெருமாள் திருமொழி (1-10) – வன்பெருவானகமுய்ய – கூறுவது போல், விண்ணுலகையும் இங்கிருந்தபடி நியமிக்கிறான். அங்கு சென்று, "இவன் என்னைக் காப்பாற்றும் லக்ஷணம் பாருங்கள்", என்று கூறுவேன்.

(கணமங்கை) – "கண்களாரளவும் நின்று கண்டு கொண்டேன்" என்று நான் சொன்னேனிறே; அங்ஙன் சொன்னது அவனைப் பேணினேனத்தனை; நான் கண்ணாரக் கண்டேனோ? இல்லையோ என்று என் வடிவைக் காட்டுகிறேன்.

**விளக்கம்** – (கணமங்கை) – பெரிய திருமொழி (7-10-9) - கண்களாரளவும் நின்று கண்டு கொண்டேன் - என்று நான் கூறினேன் அல்லவோ? இதன் மூலம் அவனை நான் எனது கண்ணாரக் காண வேண்டும் என்ற ஆசையைக் கூறினேன். ஆனால் அவனை இவ்விதம் கண்ணாரக் கண்டேனா, இல்லையா என்பதை எனது வடிவைப் பார்த்து நீங்களே உணர்ந்து கொள்ளுங்கள்.

(காரார்மணிநிறக் கண்ணனூர் விண்ணகரம்) - பரமபதத்தை விட்டுக் குறைவாளர்க்கு முகங்கொடுக்கத் திருவிண்ணகரிலே வந்தான். “தன்னொப்பாரில்லப்பன் தந்தனன் தனதாள் நிழல்” என்று ப்ரஸித்தமிறே; குறை வாட்டியாயிருக்கிற எனக்கு முகம் தந்தானோ? இல்லையோ? என்று என் வடிவைக் காட்டுகிறேன்.

**விளக்கம்** - (காரார்மணிநிறக் கண்ணனூர் விண்ணகரம்) - பரமபதத்தை விடுத்து, குறைகள் நிரம்பிய இங்கு வந்து, அனைவருக்கும் திருமுகம் காண்பிக்கும்படி திருவிண்ணகரில் நின்றான். திருவாய்மொழி (9-3-9) – தன்னொப்பாரில்லப்பன் தந்தனன் தனதாள் நிழல் – என்று அருளியது அல்லவா? குறைகள் நிறைந்த பலருக்கும் தனது திருமுகத்தைக் காண்பித்தவன், எனக்கு அப்படிச் செய்தானா இல்லையா என்று நீங்களே பாருங்கள்.

(சீரார் கணபுரம்) – “கண்ணபுரமொன்றுடையானுக்கு அடியேன் ஒருவர்க்குரியேனோ” என்று நான் தனக்கு அநந்யார்ஹையாகத் தாலி கட்டியிருக்க, அங்கே சென்று என்னைத் தனக்குப் புறம்பாக்கினபடி பாருங்கோள் என்று என் வடிவைக் காட்டுகிறேன்.

**விளக்கம்** - (சீரார் கணபுரம்) – பெரிய திருமொழி (8-9-3) – கண்ணபுரமொன்று டையானுக்கு அடியேன் ஒருவர்க்குரியேனோ - என்று கூறுவதற்கு ஏற்ப, எனக்குப் புகுந்தவீடாக உள்ள இடம். அங்கு சென்று, ”அவனுக்கு மட்டுமே உரிமை உடையவளாக நான் தாலியைக் கட்டிருக்க, என்னை விடுத்து நிற்கிறான் பாருங்கள்”, என்று கூறுகிறேன்.

(சேறை) – “மண் சேர முலையுண்ட மாமதலாய்” என்று தாய் முலைக்கும் வேற்று முலைக்கும் வாசியறியாத முக்தனென்று ப்ரஸித்தமிறே; அங்கே சென்று என் வடிவையும் முலையையும் காட்டி என்னை ஸ்பர்சித்தானோ இல்லையோ? என்கிறேன்.

**விளக்கம்** - (சேறை) - பெரிய திருமொழி (7-9-1) - மண் சேர முலையுண்ட மாமதலாய் - என்னும்படி தாயின் ஸ்தனத்திற்கும் மற்றவர்களின் ஸ்தனத்திற்கும் வேறுபாடு தெரியாத கை குழந்தையாக நின்றான். அங்கு சென்று எனது ஸ்தனங்களைக் காண்பித்து, ”இவன் என்னை ஸ்பர்சித்தானா?”, என்று கேட்கிறேன்.

(திருவழுந்தூர்) - திருவாய்ப்பாடியில் ஆச்ரிதர் கரஸ்பர்சம்பட்ட த்ரவ்யத்தாலல்லது தனக்குச் செல்லாது என்னுமிடம் ப்ரகாசிக்க நிற்கிறவிடமிறே; அங்கே சென்று ஆச்ரித ஸ்பர்சமே இவனுக்குத் தாரகமாயிருக்கிறபடி பார்க்கலாகாதோ என்று என் வடிவைக் காட்டுகிறேன்.

**விளக்கம்** – (திருவெழுந்தூர்) – திருவாய்ப்பாடியில், தனது அடியார்களின் கரம் பட்ட வெண்ணைய் கிடைக்காமல் தாங்கமாட்டேன் என்று கூறும்படியாக நிற்கும் இடம் ஆகும். அங்கு சென்று, "இவனது அடியாளான எனது ஸ்பர்சமானது, இவன் விரும்பும் பொருளாக இருப்பதைக் காணாமல் இவன் நிற்கிறானே", என்று கூறுகிறேன்.

(காரார் குடந்தை) - ச்ரமஹரமான திருக்குடந்தையிலே "குடந்தையெங் கோவலன்" என்று ஆச்ரித பவ்யனான க்ருஷ்ணன் வந்து கண்வளர்ந்தருளுகிறானென்று ப்ரஸித்தமிறே; அங்கே சென்று என் வடிவைக் காட்டி, இவன் ஆச்ரித பவ்யனோ? அபவ்யனோ? என்னுமிடம் ஸாதிக்கிறேன்.

**விளக்கம்** - (காரார் குடந்தை) – திருவாய்மொழி (10-9-7) - குடந்தையெங் கோவலன் – என்று கூறுவதற்கு ஏற்ப, தன்னுடைய களைப்பு நீங்கும்படி அடியார்களுக்கு அடங்கி நடக்கும் கண்ணன் கண்வளரும் இடம் அல்லவோ? அங்கு சென்று, "இவன் அடியார்களுக்கு அடங்கியவனா அல்லது அடியார்களை வருத்துபவனா?", என்று கேட்கிறேன்.

(கடிகை) – "கடிகைத் தடங்குன்றின் மிசையிருந்த அக்காரக்கனி" என்று ப்ரஸித்தமிறே; அங்கே சென்று தன்னுடைய ரஸ்யதை ஆர்க்குக் கண்டது? என்கிறேன்.

**விளக்கம்** – (கடிகை) – பெரிய திருமொழி (8-9-4) - கடிகைத் தடங்குன்றின் மிசையிருந்த அக்காரக்கனி – என்று கூறுவது போல், கற்கண்டு பழுத்தது போன்று இனியவன் அல்லவா? அங்கு சென்று, "இப்படிப்பட்ட இனிமையை யாருக்காகக் கொண்டுள்ளான்?", என்று கேட்கிறேன்.

(கடல்மல்லை) - திருக்கடல்மல்லையில் திருவநந்தாழ்வானையும் விட்டு ஆச்ரிதனுக்காகத் தரைக்கிடை கிடக்கிறானாயிறே கிடக்கிறது; அங்கே சென்று, "இவனோ நானோ தரைக்கிடை கிடக்கிறார்?" என்று என் வடிவைக் காட்டுகிறேன்.

**விளக்கம்** – (கடல்மல்லை) – மாமல்லபுரம் என்னும் திருக்கடல்மல்லையில், ஆதிசேஷனையும் துறந்து, தனது அடியவன் ஒருவனுக்காகத் தரையிலேயே சயனித்துக்

கிடக்கிறான். அங்கு சென்று, "இவன் தரையில் சயனித்துக் கிடகிறானா அல்லது இவனை எண்ணியே வாடும் நான் தரையில் கிடக்கிறேனா?", என்று கேட்கிறேன்.

(ஏரார் பொழில்சூழ் இடவெந்தை) - ஜாத்யுசிதமான செருக்குக்குப் போக்குவீடாகச் சோலைகளையுடைத்தான திருவிடவெந்தையிலே ஸ்ரீபூமிப்பிராட்டி பக்கல் தனக்குண்டான வ்யாமோஹம் "பார்வண்ண மடமங்கை பத்தர்" என்னும்படி வடிவிலே தோற்ற நிற்கிறானிறே; அந்த:புர பரிகரமான என்னைப்படுத்தின பாட்டைக்காட்டி, அவளுக்கு வ்யாமுக்தனானபடி இதுவோ? என்று தன் வ்யாமோஹத்தையெல்லாம் நிலை நிறுத்துகிறேன்.

**விளக்கம்** - (ஏரார் பொழில்சூழ் இடவெந்தை) – காட்டுப் பன்றியின் குலத்திற்கே உரிய கர்வத்திற்கு ஏற்ற சோலைகளை உடைய திருவிடவெந்தையில், ஸ்ரீபூமாதேவியிடம் தனக்கு ஏற்பட்ட மயக்கத்தை, திருநெடுந்தாண்டகம் (18) - பார்வண்ண மடமங்கை பத்தர் - என்பதற்கு ஏற்பத் தனது திருமேனியில் காண்பித்தபடி நிற்கிறான். அங்கு சென்று, "இவன் என்னைத் துன்புறுத்தியதை எடுத்துக் கூறி, பூமாதேவியிடம் இவன் காண்பிக்கும் அன்பு உண்மையா அல்லது வேஷமா என்று கேட்கிறேன். இதன் மூலம் அவன் அன்பின் லக்ஷணத்தை வெளிப்படுத்துகிறேன்", என்றாள்.

(நீர்மலை) – "நீர்வண்ணன் நீர்மலைக்கே போவேன் என்னும்படி" அடக்கம் குடிபோனார்க்கு க்லேசந் தீரும்படி ஒதுங்க நிழலாயிருக்கும் திருநீர்மலையென்றிறே ப்ரஸித்தி; அடக்கம் குடிபோன எனக்கு அத்தேஸத்திலே புகவொண்ணாதபடி இருக்கிறபடியை என் வடிவில் பாருங்கோள் என்கிறேன்.

**விளக்கம்** – (நீர்மலை) - திருநெடுந்தாண்டகம் (18) – நீர்வண்ணன் நீர்மலைக்கே போவேன் - என்று கூறுவதற்கு ஏற்ப, அவன் மீது கொண்ட காதலால் தங்கள் அடக்கம் நீங்கியவர்களின் துன்பம் விலகும்படி, அவர்கள் ஒதுங்குவதற்கு ஏற்ற நிழலாக உள்ள திருநீர்மலை என்பது அல்லவா ப்ரஸித்தம்? அவர்கள் போன்றே, அவன் மீது முகுந்த காதல் கொண்டதன் காரணமாக அடக்கம் நீங்கிய என்னால், அந்த இடம் புக முடியாமல் உள்ளதைப் பாருங்கள்.

(சீராரும் மாலிருஞ்சோலை) - ஆர்யர்கள் இகழ்ந்த தெற்குத் திக்கிலே அங்குத்தை ஸ்தாவரங்களோடும் தன்னோடும் வாசியற நின்று ம்லேச்சர்க்ககப்பட முகங்கொடுக்கும் நீர்மையையுடையனாய் இருக்கிறானிறே; அங்கே சென்று என் வடிவைக் காட்டி எனக்கு முகங்கொடுக்கும்படியெல்லாம் நிலைநிறுத்துகிறேன்.

**விளக்கம்** - (சீராரும் மாலிருஞ்சோலை) - மிகவும் சிறந்தவர்கள் சென்று சேர்ந்த தெற்குத் திசையில், அங்கு உள்ள தாவரங்களுக்கும் தனக்கும் வேறுபாடு இல்லாதவன் போன்று

அசையாமல் நின்று, தாழ்ந்தவர்களுக்குத் தனது திருமுகம் கொடுத்தபடி, எளிமையுடன் நிற்கிறான். அங்கு சென்று, “எனக்குத் திருமுகம் காட்டிய லக்ஷணத்தைப் பாருங்கள்”, என்கிறேன்.

(திருமோகூர்) – “திருமோகூராத்தன்” என்று ஆச்ரிதரோடு அவிபாகரஸம் அனுபவிக்கிறானாயிறே இருக்கிறது.

**விளக்கம்** – (திருமோகூர்) - திருவாய்மொழி (10-1-6) - திருமோகூர் ஆத்தன் – என்று கூறுவதற்கு ஏற்ப, தனது அடியவர்களுடன், அவர்களது மனம்-உடல்-சொல் ஆகியவற்றுடன் ஒன்றாகக் கலந்து நிற்கும் இடம் ஆகும். அங்கு சென்று இவனைப் பற்றிக் கூறுகிறேன்.

(பாரோர் புகழும் வதரி) - என் பேற்றுக்குத் தானோ, நானோ, தபஸ்ஸு பண்ணினார் ஆர்? என்று என் வடிவைக் காட்டுகிறேன்.

**விளக்கம்** - (பாரோர் புகழும் வதரி) - அங்கு சென்று, ”என்னைப் பெறுவதற்கு இவன் தவம் புரிந்தானா அல்லது அவனைப் பெற நான் தவம் புரிந்தேனா?”, என்று கேட்கிறேன்.

(வடமதுரை) - ஸித்தாச்ரமமாய் ஸ்ரீவாமநனெழுந்தருளியிருந்து தபஸ்ஸு பண்ணி, லவணவதம் பண்ணி, ஸ்ரீசத்ருக்நாழ்வான் படைவீடு செய்திருந்து ராஜ்யம் பண்ணி, ஸர்வேச்வரன் தான் வந்து திருவவதரித்து, இப்படியாலே பகவத் ஸம்பந்தம் மாறாத தேசமிறே ஸ்ரீமதுரை; நான் தோற்றி அத்தையும் கைவிட்டபடி பாருங்கோள் என்கிறேன்.

**விளக்கம்** – (வடமதுரை) - வாமனன் எழுந்தருளி தவம் செய்து, சத்ருக்னன் லவணன் என்ற அசுரனை வதம் செய்து தலைநகராக வைத்து அரசாண்டு, ஸர்வேச்வரன் தானாகவே கண்ணனாகத் திருஅவதாரம் செய்து – இப்படியாகத் தொடர்ந்து பகவத் ஸம்பந்தம் நீங்காத இடமாக மதுரா உள்ளது. அங்கு சென்று, “என்னைக் கண்டு அவன் இங்கிருந்து ஓடிவிட்ட லக்ஷணத்தைப் பாருங்கள்”, என்று கூறுகிறேன்.

(ஊராயவெல்லாம் ஒழியாமே) - ஒரிடத்தேயிருந்து இரண்டொருகாற் சொல்லி விடுகிறேனோ? சொல்லிச் சொல்லாத ஊரெல்லாம் புகக்கடவேன். வேணுமாகில் என் பின்னே வந்து பட்டோலை எழுதிக் கொள்ளுங்கள். (நான்) - அவன் புக்கவிடம் புக்கு அவனை அழிக்கக்கடவ நான். (அவனை) - என்னையும் இப்பாடுபடுத்தி அர்ச்சகபராதீனவென்று காஹளம் பிடித்திருக்கிறவனை.

**விளக்கம்** - (ஊராயவெல்லாம் ஒழியாமே) - ஒவ்வொரு இடத்திலும் ஒரு முறையோ அல்லது இரண்டு முறையோ மட்டுமா இவனைப் பற்றித் தவறாகக் கூறி விட்டு வந்து விடுவேன் (பலமுறை கூறுவேன் என்று கருத்து)? இதுவரை கூறாத ஊர்கள் அனைத்திலும் புகுந்து கூறுவேன். உங்களுக்கு வேண்டுமானால் என் பின்னால் வந்து நான் செல்லும் ஊர்களின் பெயர்களை எழுதிக் கொள்ளுங்கள். (நான்) - எனக்குப் பயந்து அவன் ஓடி ஒளிந்த இடம் எல்லாம் சென்று, அவனது குணங்களை அழிக்கப் புகுந்த நான். (அவனை) – என்னை இத்தனை துன்பப்படுத்தி, தான் மிகவும் உயர்ந்தவன் என்று எக்காளம் ஊதும் அவனை.

இனி அறுமிடத்தையெல்லாம் சொல்லியற வேணுமிறே. (ஓரானை கொம்பொசித் தோரானை கோள் விடுத்த சீரானை) - ஆனையான ஏகஜாதித்வம் பொருந்திருக்கச் செய்யாதே, ஓரானையைக் கொல்லுகையாவதென்? ஓரானையை ரக்ஷிக்கையாவதென்? இதில் கண்டதிறே இவன் ஒரு முலைப் பாலும் ஒருமுலை சீயுமாய்ப் போரும் பக்ஷபாதி யென்னுமிடம். (சீரானை) - இப்படி பொரி புறந்தடவி ரக்ஷிக்கிற குணங்களை யுடையவனை வெளியிடவிறே புகுகிறேன்.

**விளக்கம்** - இனி அவனது திருஅவதாரங்கள் அனைத்தையும் அழிப்பேன் என்கிறாள். (ஓரானை கொம்பொசித் தோரானை கோள் விடுத்த சீரானை) – இவனே ஒரு யானையாக இருந்து கொண்டு, கஜேந்திரன் என்ற யானையைக் காப்பாற்றி, குவலயாபீடம் என்ற யானையைக் கொன்று, ஓரவஞ்சனை செய்வதைப் பார்த்தீர்களா? இதிலிருந்தே இவன் ஒரு ஸ்தனத்தில் பாலும், ஒரு ஸ்தனத்தில் சீயும் அளிப்பவன் என்று புரியவில்லையா? (சீரானை) – பொரியின் வெளியில் இனிப்பு தடவி, உள்ளே சுவை இல்லாமல் இருக்கும் பொரி போன்று, காப்பாற்றும் குணம் உள்ளதாகத் தோற்றம் மட்டுமே அளிப்பவனை. அவனது வேஷத்தைப் பற்றி அனைவருக்கும் கூறுகிறேன்.

(செங்கணெடியானை) - அகவாயில் வாத்ஸல்யத்துக்கெல்லாம் ப்ரகாசகமான திருக் கண்களைக் கொண்டு எனக்கெட்டாதேயிருக்கிறவனை. சேர்த்துக் குளிர்ந்த தண்ணீரை விடாயர்க்கு எட்டாமல் வைப்பாரைப் போலே.

**விளக்கம்** - (செங்கணெடியானை) – தனது மனம் முழுவதும் வாத்ஸல்ய குணத்தை வைத்துக்கொண்டு, அதனை ஒளி வீசும் திருக்கண்களால் காண்பித்து என்ன ஆகப்போகிறது? எனக்கு அவன் எட்டாமலேயே உள்ளான். உயர்ந்த திரவியங்கள் சேர்த்துக் குளிர வைக்கப்பட்ட தண்ணீரைத் தாகத்துடன் வருபவர்களுக்கு எட்டாமல், தூரத்தில் வைப்பது போன்று அல்லவா இவன் செய்கையும் உள்ளது?

(தேன்துழாய்த் தாரானை) - ஆசைப்பட்டாரைப் பிரிந்து தனியிருக்க அமையுங்காணும் மார்பில் மாலை மது ஸ்யந்தியாகைக்கு. (தாமரைபோல் கண்ணானை) – ஆசைப்பட்டாரைப் பிரிந்த அன்று முதல், நாள்தோறும் செவ்வி பிறக்கும் திருக்கண்களை யுடையனை. (எண்ணருஞ் சீர்ப் போராயிரமும் பிதற்றி) - குணகதநம்பண்ணுகைக்கு ஒரு ஸ்ரீஸஹஸ்ரநாமமுண்டிறே; அப்படி குண ஹாநிக்கும் ஒரு ஸ்ரீஸஹஸ்ரநாமம் பண்ணுகிறேன்.

**விளக்கம்** - (தேன்துழாய்த் தாரானை) - இவன் மீது விருப்பம் கொண்டவர்களைப் பிரிந்து இவன் தனியே நிற்கும்போது மட்டுமே இவன் திருமார்பில் உள்ள மாலைகள் தேன் சொரியும் போலும். (தாமரைபோல் கண்ணானை) – இவன் மீது விருப்பம் கொண்டவர்களைப் பிரிந்த நாள் முதல், அன்றாடம் புதிதாக மலர்ந்த தாமரை போன்று அழகான திருக்கண்களைக் கொண்டவனை. (எண்ணருஞ் சீர்ப் போராயிரமும் பிதற்றி)– இவனது குணத்தின் உயர்த்தியைக் கூறுவதற்கு ஒரு ஸஹஸ்ரநாமம் உண்டு அல்லவா? அதனைப் போன்று, இவனது குணம் கெட்ட தன்மைக்கும் ஒரு ஸஹஸ்ரநாமம் நான் இயற்றுகிறேன்.

நீ சொல்லப்படுகிற ஸஹஸ்ரநாமந்தன்னைச் சொல்லிக் காணாயென்ன, நால்வரிருவர்க்குச் சொல்லிவிடுவேனோ ஒரு மூலையிலிருந்து? இல்லையாகில் என் செய்வாயென்ன; (பெரும் தெருவே) - நடுத்திருவீதியிலே புறப்படக்கடவேனென்கிறாள்; (ஊராரிகழிலும்) – “ஊராரிகழ்ந்திடப்பட்டாளே?” என்று அவளை ஊரார் கொண்டாடினாற்போலே என்னையும் தலையாலே சுமப்பர்கள்; சுமவாதே இகழ்ந்தார்களேயாகிலும். (ஊராதொழியேன் நான்) - இவர்கள் கொண்டாடாதே பழி சொன்னார்களேயாகிலும், நான் மடலூருகை தவிரேன். (வாரார் பூம்பெண்ணை மடல்) - கையிலே ப்ரஹ்மாஸ்த்ரமிருக்கச்செய்தே எதிரிகள் கையிலே எளிவரவுபடுவாரைப் போலே, என் கையிலே மடலிருக்க அபிமதம் கிடையாதிருக்க வேணுமா எனக்கு? (வாரார் பூம்பெண்ணை மடல்) - ஒழுகு நீண்டு தர்சநீயமான பனைமடலிருக்கிறபடி கண்டறிதியே? ப்ரஹ்மாஸ்த்ரமிருக்கிறபடி கண்டறிதியே?

**விளக்கம்** – இதனைக் கேட்ட எம்பெருமான், “நீ இயற்றப் போகிற அந்த ஸஹஸ்ரநாமத்தைக் கூறிக் காண்பிப்பாயாக”, என்றான். உடனே இவள், “இப்படி ஒரு மூலையில் நின்று இரண்டு நான்கு பேருக்கு மட்டுமே கேட்கும்படியாகவா நான் கூறுவேன்?”, என்றாள். உடனே எம்பெருமான், “வேறு என்ன செய்யப் போகிறாய்?”, என்றான். அதற்கு இவள் (பெருந்தெருவே) – ”நடுத் தெருவில் நின்று கொண்டு கூறுவதற்கு இதோ புறப்படுகிறேன்”, என்றாள். (ஊராரிகழிலும்) – வாசவதத்தையை – சிறிய திருமடல் (68) - ஊரார் இகழ்திடப்பட்டாளே – என்று கூறுவது போன்று, அனைவரும் போற்றியது போல், என்னையும் அனைவரும் தங்கள் தலையால் சுமந்து

பாராட்டுவார்கள் . அப்படியே பாராட்டாமல் இவர்கள் இகழ்ந்தாலும் (ஊராது ஒழியேன் நான்) – இவர்கள் என்னைக் கொண்டாடாமல், என் மீது பழி கூறினாலும், நான் மடல் எடுப்பதை நிறுத்த மாட்டேன். (வாரார் பூம்பெண்ணை மடல்) - கைகளில் ப்ரஹ்மாஸ்திரம் இருந்தபோதும், இந்த்ரஜித் போன்ற எதிரிகளின் கையில் விழ முற்பட்ட இராமலக்ஷ்மணர்களைப் போன்றா நான் இருப்பேன்? என் கையில் மடல் இருக்கும்போது, எனது விருப்பம் நிறைவேறாமல் இருக்க நான் பார்த்திருப்பேனா? (வாரார் பூம்பெண்ணை மடல்) - அழகான நீண்ட பனைமடல் என் கையில் உள்ளதைக் காணவில்லையா? என்னுடைய ப்ரஹ்மாஸ்திரம் இதுவே ஆகும்.

## ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த
## சிறிய திருமடல் வ்யாக்யானம் ஸம்பூர்ணம்

## திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்
## பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

## கம்பர் பாடல்

ஊராது ஒழியேன் உலகறிய ஒண்ணுதலீர்
சீரார் முலைத்தடங்கள் சேரளவும் – பாரெல்லாம்
அன்றோங்கி நின்றளந்தான் நின்ற திருநறையூர்
மன்றோங்க ஊர்வன் மடல்.

பொருள் - ஒளி வீசும் அழகிய நெற்றி கொண்டவர்களே! உலகளந்த எம்பெருமானை எனது அழகான ஸ்தனங்கள் அணைத்துக் கொள்ள வேண்டும். அதுவரை நான் இந்த உலகில் உள்ள அனைவரும் அறியும்படியாக, அவனைக் குறித்து மடல் எடுக்காமல் இருக்க மாட்டேன். முன்பு ஒரு காலம் ஓங்கி வளர்ந்து, இந்த உலகங்கள் அனைத்தையும் அளக்கும்படி நின்ற அவன் எழுந்தருளியுள்ள திருநறையூர் சென்று மடல் எடுப்பேன்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்